யாழ்ப்பாணப்

# புவியியலாளன்

விருத்திப் புவியியல் சிறப்பு வெளியீடு

இதழ் 2

1983-84

THE JOURNAL OF THE JAFFNA UNIVERSITY GEOGRAPHICAL SOCIETY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◉ வீடியோ டெக், வீடியோ கசெட், டெலிவிசன் ஆகியவற்றை வாங்கவும் வாடகைக்குப் பெறவும்

◉ வீடியோ றேடியோ உதிரிப்பாகங்களை சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளவும்

◉ தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளவும்

◉ டெலிவிசன் டெக் மற்றும் எலக்ரோனிக் கருவிகளை பழுது பார்த்துக் கொள்ளவும்

டெலிவிசன் ரேடியோ வீடியோ
உதிரிப்பாகங்கள், I. C. ரான்
சிஸ்டர்கள், பவர் ரான்
சிஸ்டர்கள் ஆகிய
வற்றைச் சகாய
மான விலையில்
பெற்றுக்
கொள்ள

# மினி

## ரேட் சென்ரர்

**மினிரேட் சென்ரர்**
3, கே. எம். சி. பில்டிங்
ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

கிளை : **மினி சென்ரர்**
114 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

தொ. இல. 24331


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA GEOGRAPHER

JAFFNA UNIVERSITY GEOGRAPHICAL SOCIETY JOURNAL

VOLUME 2

## DEVELOPMENT GEOGRAPHY
## SPECIAL ISSUE

*EDITOR :*

**J. JEYARAJ**

*CONSULTANT EDITOR :*

**R. MATHANAKARAN**

**DEPARTMENT OF GEOGRAPHY**
**UNIVERSITY OF JAFFNA**

1983 - 1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GEOGRAPHICAL SOCIETY UNIVERSITY OF JAFFNA

## 1983 – 84

### OFFICE BEARERS

| | | |
|---|---|---|
| *Patron :* | — | Prof. P. BALASUNDARAMPILLAI |
| | — | B. A. Hons. ( Cey ); Ph. D. ( Durham ) |
| *Senior Treasurer :* | — | Mr. R. MATHANAKARAN |
| | — | B. A. Hons ( Cey ); M A; D. D. P. (Mysore) |
| *President :* | — | Mr. T. PATHMANATHAN |
| *Secretary :* | — | Mr. S. SUBRAMANIEASWARAN |
| *Junior Treasurer :* | — | Mr. S. MOHANASUNDARAM |
| *Asst. Secretary :* | — | Miss A. LATHA |
| *Editors :* | — | Mr. J. JEYARAJ |
| | — | Miss T. JEEVARANJANI |
| *Vice President :* | — | Mr. A. VIJEYARATNAM |
| *Committee Members :* | — | Mr. S. GOPALASINGAM |
| | — | Mr. K. SIVASOTHY |
| | — | Miss M. MALINI |
| | — | Miss S. PARAMESWARY |
| | — | Mr. S. SELVANAYAGAM |
| *Consultant Editor :* | — | Mr. R. MATHANAKARAN |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNIVERSITY OF JAFFNA
## GEOGRAPHICAL SOCIETY



*Seated :* Mr. J. Jeyaraj (Editor), Mr. S. Subramaniyeaswaran (Secretary), Prof. S. Vithiyananthan (Vice Chancellor), Mr T. Pathmanathan (President), Prof. P. Balasundarampillai (Patron), Mr. R. Mathanakaran (Senior Treasurer), Mr. S. Mohanasundaram (Junior Treasurer).

*Standing :* Miss. T. Jeevaranjani (Editor), Miss. A. Latha (Asst. Secretary), Miss. Parameswary (C. Member), Miss. M. Malini (C. Member).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியியல் துறைத் தலைவரின்

# ஆசிச்செய்தி

யாழ்ப்பாணப் புவியியலாளன் தொடர்ந்தும் வெளிவருவதை யிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய காலகட்டத்தில் பல இடர்ப்பாடுகள் மத்தியிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் மாணவர்களின் கடின உழைப்பாலேயே இம் மலரை வெளிக் கொணரக் கூடியதாக இருந்தது. இம் மலரில் விருத்திப் புவியியல் தொடர்பான விடயங்கள் பற்றி பல கட்டுரைகள் இடம் பெற்றிருப்பது முக்கியம்சமாகும். இது புவியியல், பொருளியல் மாணவர்களுக்கும், மற்றும் விருத்தித் துறையில் ஈடுபட்டிருப்போருக்கும், பெரிதும் பயனுடையதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இம் மலர் தொடர்ந்து வருடந்தோறும் வெளிவர எனது நல்லாசிகள்.

பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை

புவியியற் பகுதி
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.
1-10-1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹேரம் பினன்ஸ் லிமிட்டட்

## மக்கள் விரும்பும் பினன்ஸ் கொம்பனி

- ◉ வீட்டுப் பொருட்கள்—கடன் கொடுப்பனவுகள்
- ◉ வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதியாளர்
- ◉ வீடியோ பட விநியோகஸ்தர்கள்
- ◉ உல்லாச பஸ் சேவையாளர்
- ◉ காணி நில முதலீட்டாளர்
- ◉ புடவை விநியோகஸ்தர்கள்

463, காலி வீதி
கொழும்பு—3
தொலைபேசி : 589190/587680

82, கன்னாதிட்டி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி : 24310

# BHAVANI FURNITURE PALACE

# பவானி பேணிச்சர் பலெஸ்

75 (121) கஸ்தூரியார் றேட்

யாழ்ப்பாணம்

புவியியல் கழகத்தின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு
எமது ஆதரவுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் கருத்து

யாழ்ப்பாணப் புவியியலாளன் இதழ் 2, பல்வேறு பிரச்சனைகளின் மத்தியிலும் குறித்த நேரத்தில் மலர்ந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். பல்கலைக்கழக மாணவர்களினதும், பாடசாலை உயர்தர மாணவர்களினதும் தேவையைக் கருத்தில் கொண்டு விருத்திப் புவியியலில் சிறப்பிதழாக இது வெளிவருகின்றது.

உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பகுதிக்கு மேற்பட்ட மக்கள் விருத்தியடைந்துவரும் நாடுகளில் வாழ்கின்றார்கள், இவர்களில் பெரும் பகுதியினர் வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகளைப் பெறமுடியாத அளவுக்கு வறுமையானவர்களாகக் காணப்படுகின்றனர். குறிப்பாக உணவு, உடை, வதிவிடம், அடிப்படைச் சுகாதார வசதிகள், மருத்துவவசதிகள், குடிப்பதற்கான நீர், கல்வி வசதிகள், தொழில் வாய்ப்புகள் என்பன இவற்றுள் குறிப்பிடத்தக்கனவாகும். இவற்றுக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்குமுகமாக அந்தந்த நாட்டு அரசாங்கங்களும், சர்வதேச நிறுவனங்களும் பெருமுயற்சி எடுத்து வருகின்றன.

இந் நாடுகளின் சமகால விடயங்கள் சர்வதேச அரங்கில் இன்று பெருமளவு முக்கியத்துவத்தைப் பெற்றுள்ள இவ்வேளையில் எமது நாடும் இவற்றுள் ஒன்றாக இருப்பதனாலும் இவற்றை மாணவர்கள் செவ்வனே கற்றற்பொருட்டும் க. பொ. த. உயர்தர புவியியல் மாணவர்கட்கும், பல்கலைக்கழகங்களின் பல்வேறு நிலைகளிலும் விருத்திப் புவியியல் பாடவிதானத்தில் புகுத்தப்பட்டுள்ளது. எனினும் இதற்குத் தேவையான நூல்கள் இதுவரை தமிழில் வெளியிடப்படாமை பெருங் குறைபாடாகவுள்ளது.

இதனையுணர்ந்து, புவியியல் மாணவர்களின் தேவையை நிறைவேற்றும் பொருட்டு விருத்திப் புவியியலின் பல்வேறு விடயங்களைத் தாங்கி புவியியல் பகுதி விரிவுரையாளர்களாலும், சிறப்புக்கலை இறுதியாண்டு மாணவர்களாலும் எழுதப்பட்ட பல கட்டுரைகள் கொண்ட ஒரு சிறப்பு மலராக இதனை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். எனினும் பணவசதிக் குறைவாலும், இடப்பற்றாக்குறை காரணமாகவும் விருத்திப் புவியியல் சம்பந்தமான முழு விடயங்களையும் இவ்விதழில் உள்ளடக்க முடியாமற் போயிற்று.

கடந்த இதழில் சிறந்த மேற்பார்வையின்மையால் அதிலேற்பட்ட அச்சுப் பிழைகளுக்காக மனம் வருந்துகின்றோம். இவ்விதழ் சிறந்த முறையில் உருவாக உதவிய கட்டுரையாளர்கள், மாணவர்களுக்கும், ஆசிரிய ஆலோசகருக்கும், நன்முறையில் அச்சேற்றிய ஆசீர்வாதம் அச்சகத்தினருக்கும் எமது நன்றிகள்.

ஜெ. ஜெயராஜ்
இதழாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே


பக்கம்

1. விருத்தியும், விருத்தி தொடர்பான கருத்துக்களும் — 1
சு. செல்வநாயகம்

2. விருத்தி அடைந்துவரும் நாடுகளின் விருத்திக்கான தடைகள் — 8
தி பத்மநாதன்

3. விருத்தியடைந்துவரும் நாடுகளின் பொதுவான பண்புகளும் வேறுபாடான அமைப்புகளும் — 17
இ. மதனுகரன்

4. இலங்கையைச் சிறப்பாகக் கொண்டு குறைவிருத்தியும் குறைவிருத்தியம்சங்களும் — 29
செல்வி நா. தேவரஞ்சிதம்

5. பொருத்தமான தொழில் நுட்பமும் விருத்தியடைந்துவரும் நாடுகளும் — 36
செல்வி சாரதா சுப்பிரமணியம்

6. விருத்தியும் குடித்தொகை நிலைமாற்றக் கோட்பாடும் — 41
செல்வி பங்கயச்செல்வி சிவபாதசுந்தரம்

7. விருத்தி அடைந்து வரும் நாடுகளின் வர்த்தகம் — 45
செல்வி ரஜனி நாகராஜா

8. வன்னிப் பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியில் மத்திய இடங்களின் பங்கு — 51
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

9. ஜப்பானின் வெளிநாட்டு உதவி — 57
கலாநிதி கா. ரூபமூர்த்தி

10. விருத்தியடைந்துவரும் நாடுகளில் தொழிலின்மையும் அதனோடு தொடர்புடைய பிரச்சனைகளும் — 65
செல்வி ஐயந்தி அற்புதநாதன்

11. விருத்தியடைந்து வரும் நாடுகளில் நகரவாக்கம் — 73
க. கி. ஆறுமுகம்

12. நில மதிப்பீட்டு ஆய்வுகளில் நில ஆய்வுகளினதும் நில வகைப்பாடுகளினதும் பங்கு — 81
S. T. B. இராஜேஸ்வரன்

13. விருத்தியடைந்துவரும் நாடுகளில் கல்விநிலை — 89
செல்வி கலாமாலினி நாகரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருத்தியும், விருத்தி தொடர்பான கருத்துக்களும்

சு. செல்வநாயகம்

குறைவிருத்தி நிலைமைகளைச் சீராக்குவதன் பொருட்டு, அபிவிருத்திக்கான நடவடிக்கைகளின் மூலமும் ஒரு நாடு அபிவிருத்தியை அடைகின்றது. அபிவிருத்தி என்றால் என்ன என்பது பற்றி பல அறிஞர்களால் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. முக்கியமாகப் பொருளாதார அபிவிருத்தியே அபிவிருத்தியாகக் கொள்ளப்பட்டுவருகின்றது. இருப்பினும் தனியே பொருளாதார அபிவிருத்தி மாத்திரம் அபிவிருத்தியாகாது, இதனை விட சமூக கலாசார அரசியல் நிலைமைகளில் தனித்தனியாக அபிவிருத்தி ஏற்படுவதோ விருத்தியல்ல. சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளில் மொத்தமாக ஏற்படும் செழிப்பு நிலையை நாம் அபிவிருத்தியென்று கூறலாம். அபிவிருத்தி தொடர்பாகப்பல கருத்துக்கள், பல அறிஞர்களாலும், உலக நிறுவன அமைப்புக்களாலும் முன்வைக்கப்பட்டன இக் கோட்பாடுகள் விருத்தியின்மையைப் போக்க வெளியிடப்பட்ட கருத்துக்களாகும்.

அபிவிருத்தி என்பது பலபக்கச் செயற்பாடாகும். இது முழுப் பொருளாதார, சமூக அமைப்புமுறைகளையும் மீள அமைத்தல், புதுப்பித்தல் ஆகிய செயற்பாடுகளைக் கொண்டது. நிறுவன சமூக அமைப்புக்களில் புரட்சிகரமான மாற்றங்களை அபிவிருத்தியென்ற பதம் குறித்து நிற்கின்றது. சமூக மாற்றத்தில் பழைய பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் என்பன மாற்றப்படுவதும் இதனுள் அடங்கும். அபிவிருத்தியை தேசிய மட்டத்தில் வரையறை செய்வதாயின் சர்வதேச பொருளாதார சமூக அமைப்புக்கள் பற்றிய அம்சங்களும் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியுள்ளன. அபிவிருத்தி என்னும் போது அதனை வரையறை செய்தல் கடினமானதாகும். இருப்பினும் பல வழிகளில் அபிவிருத்தியை நாம் அளவிட்டுக்கொள்ள முடியும். அபிவிருத்தி பற்றி அண்மைக் காலத்தில் பல கொள்கைகள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன.

அபிவிருத்தியில் பொருளாதார அபிவிருத்தி முதன்மைப் படுகின்றது. பொருளாதார அபிவிருத்தியில் இரண்டு பிரதான அணுகல் முறைகள் முக்கியம் பெறுகின்றன. கடந்த 25 வருடகாலமாக இச் சிந்தனைகளே முன்வைக்கப்பட்டன.

1. படிமுறைப் பொருளாதார வளர்ச்சிக் கொள்கை [இது 1950-ம் வருடங்களில் வலிமை பெற்றிருந்த கொள்கையாகும்.]

2. சர்வதேச அமைப்பு மாதிரிக் கொள்கை [இது 1960ன் பின்னரும் 1970ன் ஆரம்பத்திலும் புகழ் பெற்ற அண்மைய பொருளாதார அபிவிருத்திக் கொள்கையாகும்.]

படிமுறை வளர்ச்சிக் கொள்கையென்பது, ஒரு நாடு வளர்ச்சியடைய வேண்டுமாயின் பல படிகளைக் கடந்து வர வேண்டுமென்று கூறுகின்றது. இப் பொருளாதாரக் கொள்கையானது 3-ம்உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு, சேமிப்பு, முதலீடு, சர்வதேச உதவி என்பன இன்றியமையாதன எனக் கூறுகின்றது. இது சர்வதேச அமைப்புக் கொள்கையின் வளர்ச்சியாகும். 3-ம் உலக நாடுகளின் அபிவிருத்தி பற்றிய சிந்தனைகள் அபிவிருத்தியடைந்த நாடுகளில் பலமாக எழுப்பப்பட்டன. விருத்தியடைந்த நாட்டு அபிவிருத்தி பற்றிய சிந்தனையைக் கொண்டிருந்த அந்நாட்டு பொருளியலாளர்கள் இரு அடிப்படையில் 3-ம் உலக நாடுகளை அபிவிருத்தி செய்யலாம். எனக் கருதினர். அவையாவன.

1. மார்சல் திட்டம் போன்று அதிக சர்வதேச முதலீட்டை 3-ம் உலக நாடுகளுக்குள் பாய்ச்சி அவற்றை அபிவிருத்தி செய்தல்.

S. SELVANAYAGAM, B A Hons. (Jaffna.)
Temporary Tutor,
Department of Geography.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதன் மூலம் இந் நாடுகளை (3–ம் உலகநாடுகளை) அபிவிருத்தி செய்தல் என்பனவாகும்.

1950–60 களில் பேராசிரியர் றொஸ்ரோ (Prof. W. W. Rostow) படிமுறை வளர்ச்சிக் கோட்பாட்டை முன்வைத்தார், இவரது கருத்தின்படி குறை விருத்தியிலிருந்து அபி விருத்திக்கு உயரவேண்டுமாயின் அதனை சில படிமுறை வளர்ச்சி மூலமாகவே அடைய முடியும் என்றார். இப் படிமுறை வளர்ச்சிக் கட்டங்களை எல்லா நாடுகளினதும் வளர்ச்சி யில் நாம் காணலாம். இவர் ஒவ்வொரு நாடுகளினதும் சமூகங்களும் பின்வரும் ஐந்து படிமுறை வளர்ச்சிகளைக் கொண்டன என்றார்.

அவையாவன:

(1) பாரம்பரிய சமூக அமைப்பு
(2) மேலெழு நிலைக்கு ஆரம்ப நிலை
(3) மேலெழு நிலை
(4) முதிர்ச்சியை நோக்கிய வளர்ச்சி நிலை
(5) முதிர்ச்சிநிலை

என்பனவாகும்.

இன்றைய நிலையில் விருத்தியடைந்த நாடுகள் 3–வது நிலையைக் கடந்துள்ளன. குறை விருத்தி நாடுகள் 1–ம், 2–ம் நிலை யிலேயே உள்ளன. எனவே குறை விருத்தி நாடுகள் விருத்தியடைய வேண்டுமாயின் முதலீட்டைக் கூட்டவேண்டியது முக்கிய மானதாகும்.

அபிவிருத்தி தொடர்பாக முன்வைக்கப் பட்ட கருத்துக்களில்; சர்வதேச அமைப்பு மாதிரிகள் அடுத்து முக்கியம் பெறுகின்றது. குறைவிருத்தி நாடுகளின் நிறுவன அமைப் புக்களும், பொருளாதார அமைப்புக்களும் செல்வ நாடுகளின் தொடர்புகளில் தங்கி யிருக்கின்றது அல்லது செல்வநாடுகள் இதில் செல்வாக்கு செலுத்துகின்ற நிலை வெளிப் படையானதாகவுள்ளது. இக் கொள்கை யினையும் இரண்டு பிரிவாகப் பிரித்து ஆரா யலாம்.

1. நவீன காலனித்துவத்தில் தங்கியி ருக்கும்மாதிரி

2. தவறான வழிகாட்டல் மாதிரி

—என்பனவாகும்

இன்று, செல்வ நாடுகள் வறிய நாடு களைத் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் வைத் திருக்கின்றன. உலகவங்கியானது, தலா வீத வருமானத்தினடிப்படையில் உலக நாடுகளை மூன்று பிரிவாகப் பிரித்துள் ளது. இதன்படி 30 வறிய நாடுகளும். 30 பணக்கார நாடுகளும், 114 நடுத்தர வருமான நாடுகளும், (1980ல்) காணப் படுகின்றன எனப்பட்டது. இந்நாடுகள் முறையே 80—320 US டொலர், 7000—30000 US டொலர், 330—6900 US டொலர் களைத் தலா வீத வருமானமாகக் கொண் டுள்ளன. மொத்த சனத்தொகையில் 206.1 கோடி வறிய நாடுகளிலும், 168.9 கோடி

## 1980ஆம் ஆண்டில் அனைத்துலக வருமானப் பகிர்வு

| நாடுகளின் வகை | தலைக்கு மொ.தே. உற்ப. அளவு அமெரிக்க டொலர் | நாடுகளின் தொகை | மதிப்பிடப்பட்ட சனத் தொகை 1981ம் ஆண்டின் மத்தியில் (கோடி) | |
|---|---|---|---|---|
| | | | தொகை | சதவீதம் |
| பணக்கார நாடுகள் | 7000 — 30,000 | 30 | 64.9 | 15 |
| நடுத்தர வருமானமுள்ள நாடுகள் | 330 — 6900 | 114 | 168.9 | 88 |
| வறிய நாடுகள் | 80 — 320 | 30 | 206.1 | 47 |

ஆதாரம்.– பொருளியல் நோக்கு – செப்டம்பர் — 1982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுத்தர வருமான நாடுகளிலும், 64.9 கோடி பணக்கார நாடுகளிலும் வாழ்கின்றனர். பின்வரும் அட்டவணையிலிருந்து இதனை அறியலாம்.

எனவே வறிய நாடுகளை செல்வந்த நாடுகள், வெளிநாட்டு உதவி என்ற போர்வையில் சுரண்டுகின்றன. செல்வ நாடுகள் வறிய நாடுகளுக்கு முதல், தொழில்நுட்ப உதவி என்பனவற்றை வழங்கி வறிய நாடுகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றன. 3ஆம் உலக நாடுகள் செல்வந்தநாடுகளின் உதவியில்லாமல் அபிவிருத்தியை எய்த முடியாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இதனையே நவீன காலனித்துவத்தில் தங்கியிருக்கும் மாதிரி (New Colonization Model) விளக்குகின்றது.

விருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் வாழ்கின்றவர்கள், தெரிந்தோ தெரியாமலோ செல்வந்த நாடுகளின் முதலாளித்துவ அமைப்புக்கு விசுவாசிகளாகவுள்ளனர். நவ காலனித்துவ நவ மார்க்சீய பார்வையில் உலக நாடுகளின் வறுமைக்கு; வடகோளார்த்த நாடுகளின் புத்தி ஜீவிகளே காரண கர்த்தாக்களாயிருக்கின்றனர் என்ற அபிப்பிராயம் நிலவுகின்றது. லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த, Theolonos-dos-santos என்பவர் இந் நிலைமைகளைப் பின்வருமாறு கூறுகிறார். செல்வ நாடுகள், தங்களில் தங்கியிருக்கும் நிலையை 3-ம் உலக நாடுகளுக்கு உருவாக்குவதுடன், கட்டுப்பாடுகளையும் விதிக்கின்றன. தொழில் நுட்பம், வர்த்தகம், முதல் சமூக அரசியல் என்பனவற்றில் செல்வ நாடுகள் தமது செல்வாக்கைச் செலுத்துகின்றன. இந் நிலை 3-ம் உலக நாடுகளின் சுய பொருளாதாரவளர்ச்சியைத் தடை செய்கின்றது. உண்மையில் மறைமுகமாக 3-ம் உலக நாடுகளை செல்வநாடுகள் சுரண்டுவதையே காட்டுவதாகும் உதாரணமாக வளர்ந்தநாடுகள் விருத்தியடைந்துவரும் நாடுகளில் கைத்தொழில் வளர்ச்சியைத் தடுப்பதற்கும் காரணமாக அமைகின்றன.

சர்வதேச அமைப்பு மாதிரியின் அடுத்த கருத்தாக தவறான வழிகாட்டல் மாதிரி அமைகிறது. 3-ம் உலக நாடுகள் அபிவிருத்தி அடையாமைக்குக் காரணம், சர்வதேச நிறுவனங்களினதும், சர்வதேச நிபுணர்களினதும் தவறான ஆலோசனைகளே எனஇக் கொள்கை குற்றம் சாட்டுகின்றது. சர்வதேச நிறுவனங்களில் உலக வங்கி, UNESCO, I L O, U N D P, I M F, முதலான அமைப்புக்கள் அடங்குகின்றன. இந் நிபுணர்கள் குறைவிருத்தி நாடுகளைப் பற்றி முறையாக அறியாது, வழங்கும் பொருத்தமற்ற ஆலோசனைகள் இந்நாடுகளின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக அமைகின்றன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஒழுங்கான திட்டமிடல். தொழில் முறை என்பன காணப்படவில்லை. அதாவது பொருத்தமான தொழில் நுட்பம் பயன்படுத்தப்படாமை என்பது மிகுந்த குறைபாடானதான விடயமாகவுள்ளது. திட்டமிடல் அதிகாரிகள், அரசாங்க பொருளாதார ஆலோசனை நிபுணர்கள் அனைவருமே மேற்குலக மாதிரிக்கு பயிற்றப்பட்டவர்களேயன்றி இந்நாடுகளுக்கேற்ற வகையில் பயிற்றப்படவில்லை. மற்றும் 3-ம் உலக நாடுகளின் கல்வித்திட்டமும் அபிவிருத்திக்கு ஏற்றதாக அமையவில்லை.

எனவே அபிவிருத்தியென்பது வாழ்க்கைத் தரம் உயர்தலோ, தேசியவருமான உயர்வோ என்பதைக் குறிக்கவில்லை, அமைப்பு ரீதியானதும் நிறுவன ரீதியானதுமான மாற்றங்களே அபிவிருத்திக்கு இன்றியமையாதது. அபிவிருத்தி முக்கியமாக வறுமையை ஒழிப்பதாக, வேலையற்ற தன்மையை நீக்குவதாக' மக்களிடையே நிலவுகின்ற வருமான சமமின்மையைக் குறைப்பதாக அமைய வேண்டும். இது பொதுவாக எல்லா மக்களதும் வாழ்க்கைத் தரத்தையுயர்த்த வேண்டும். பொருளாதார வளர்ச்சியாக மாத்திரமன்றி, கல்வி சுகாதாரம், கலாச்சாரம் என்பனவற்றின் வளர்ச்சியாகவும் அமைதல் வேண்டும். சில அபிவிருத்திச் சிந்தனையாளர்கள் பொருளாதார வளர்ச்சி அவ்வளவு முக்கியமானதல்ல எனவும் மேலே விபரிக்கப்பட்ட சமூகப் பிரச்சனைகள் தீர்க்கப்படுவதே உண்மையான அபிவிருத்தியெனவும் வலியுறுத்துகின்றனர்கள்

முக்கியமாக மேற்குலக நாடுகள் 3-ம் உலக நாடுகளைச் சுரண்டுகின்றன—இது குறிப்பிடக்கூடிய அம்சமாகும். புலமைப் பரிசில்களை 3-ம் உலக நாடுகளுக்குக் கொடுத்தல், இது பொருத்தமற்ற கல்விக்கு வழங்கப்படுகின்றது. இதேபோல் தமது நாட்டுக் கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் பொருட்களுக்கு எமது நாட்டைச் சந்தையாக்குவது, விளம்பரங்கள்மூலம் மக்களைப் பாழாக்குவது. இவ்வாறு மேற்குலக நாடுகள் விருத்திக்குதவுவது போன்று தொழிற்படினும் இவை இந் நாடுகளில் விருத்திக்குறைவையே ஏற்படுத்துகின்றது. இதற்கு முற்று முழுதாக செல்வந்த நாடுகள்தான் காரணம் என்று கூற முடியாது. 3–ம் உலக நாடுகளுக்குள்ளும் இருமைத்தன்மை காணப்படுகின்றது.

அபிவிருத்தி என்ருல் என்ன என்பதனை அறிய சில பாரம்பரிய பொருளாதார அளவீடுகளும், நவீன அணுகுமுறைகளும்காணப்படுகின்றன. 1960–ல் ஐ. நா. அபிவிருத்தி ஆண்டாகப் பிரகடனப்படுத்திற்று. அப்போது ஐ. நா. வின் குறிக்கோள், 3–ம் உலகநாடுகள் வருடாந்தம் 6% மான மொத்த தேசிய உற்பத்தியில் வளர்ச்சியை அடைய வேண்டுமென்பதாக இருந்தது. இது உண்மையில் பொருளாதார அபிவிருத்தியையே அபிவிருத்தியெனக் கருதிற்று. 1950, 1960, களில் 3–ம் உலக நாடுகளிற்பல ஐ. நா. எதிர்பார்த்தபடி தேசிய வருமானத்தில் வளர்ச்சி கண்டன எனினும் பின்னர் ஆராய்ந்தபோது இவ்வளர்ச்சி மக்கள் வாழ்வில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதை அறிய முடிந்தது.

இதனுல் அபிவிருத்தி என்ருல் தனியே பொருளாதார அபிவிருத்தி என்ற கருத்தை மாற்றவேண்டி நேரிட்டது. உண்மையான அபிவிருத்தி என்பது

1. வறுமையை ஒழித்தல்
2. வருமான சமமின்மையை ஒழித்தல்
3. வேலையின்மையைக் குறைத்தல் என்பனவாகும்.

ஐ. நா. நிபுணர்கள் உண்மையான அபிவிருத்திபற்றிக் கூறினர். பேராசிரியர் டட்லி சியர்ஸ் என்பவரின்படி ஒருநாடு அபிவிருத்தியடைந்ததென்ருல், பின்வரும் வினக்களைக் கொண்டே அதனைக் கணிப்பிடமுடியும் என்ருர். (1) வருமான சமமின்மையை ஒழிக்க இந்நாடு என்ன நடவடிக்கையை மேற் கொண்டது? (2) வேலையின்மையை நீக்க இந்நாடு என்ன நடவடிக்கையை மேற்கொண்டது? (3) வறுமையை ஒழிக்க இந் நாடு என்ன நடவடிக்கையை மேற்கொண்டது? என்பனவாகும். இவை மூன்றும் பாரிய அளவில் குறைவடைந்து சென்ருல், அந்நாடு அபிவிருத்திப் பாதையில் செல்கின்றது எனலாம். மேற்படி பிரச்சனைகள் வளர்ந்து வருமாயின் நாட்டின் தலைக்குரிய வருமானம் இரண்டுமடங்காக அதிகரித்த போதிலும் அங்கு உண்மையான அபிவிருத்தி ஏற்படவில்லையென்றே கருதவேண்டுமென இவர் கூறுகிருர்.

பேராசிரியர் கோலெற் என்பவர் (Prof. Goulet) பின்வருமாறு கூறுகிருர். அபிவிருத்தியை ஆராய்வதற்கு வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதை ஆராய்தல் வேண்டும் என்றும், அம்மக்கள் தன் மதிப்புடன் வாழ்கின்ருர்காளா என்பதைக் கணித்தறிய வேண்டும் என்றும் அம்மக்கள் கட்டுப்பாடுகளிலிருந்து சுதந்திரமாகச் சிந்திக்கவும், செயற்படவும் முடிகின்றதா, என்ற முடிவுகளிலிருந்தே உண்மையான அபிவிருத்தியை மதிப்பிடமுடியும் என இவர் குறிப்பிடுகிருர்.

வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதையே அபிவிருத்தியென்கிருர்கள். இவை பூர்த்திசெய்யப்படாவிடில் அபிவிருத்தி ஏற்படாது. தலாவீத வருமான அதிகரிப்பு, வறுமையைப் போக்குதல், வேலைவாய்ப்பினை அதிகரித்தல், வருமான சமமின்மையைப் போக்குதல் என்பன அடிப்படைத் தேவைகளேயாயினும் இவைகள் பூரணமான அபிவிருத்தியன்று என இவர் கூறுகிருர். வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட இவ்வம்சங்களும் அதிகரிக்கும் எனலாம்.

ஏனையவற்றின் பிடியிலிருந்து விடுபட்டு தன் மதிப்புடன் வாழக்கூடிய நாடும், சமூகமும் விருத்தியுற்றவை எனக் கூறலாம். சுதந்திரம் என்பது முக்கிய அபிவிருத்தி அம்சமாகத் தற்காலத்தில் கருதப்படுகின்றது. கட்டுப்பாடுகள், அறியாமை என்பனவற்றிலிருந்து விடுதலை பெறுவதும் அபிவிருத்தியின் அம்சமாகும். இன்றைய 3ஆம் உலகநாட்டு அபிவிருத்திக் கொள்கைகள் இதனை மிகவும் வலியுறுத்துகின்றன, 3ஆம் உலகநாடுகள் நவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனித்துவ அமைப்பின்கீழ் அகப்படாமல் இருப்பதே முக்கிய அபிவிருத்தி அம்சமாகக் கொள்ளப்படுகின்றது. எனவே அபிவிருத்தியின் நோக்கங்களை மூன்றாகப் பிரித்து நோக்கலாம். பொதுவாக சிறப்பான மனித வாழ்வைப் பெறுவதே அபிவிருத்தி எனலாம். இவை சிறப்பாக மூன்று நோக்கங்கள் கொண்டதாக அமையவேண்டும்.

(1) உணவு, வீடு, சுகாதாரம், பாதுகாப்பு ஆகிய வாழ்வின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுனைதலும், பரவலாக்கலும்.

(2) வாழ்க்கையை உயர்த்தல் இது–உயர்ந்த வருமானம், வேலைவாய்ப்பு பெறுதல் சிறப்பாகக் கல்வி வசதி பெறல் என்பன வற்றை உள்ளடக்கும்.

(3) கலாச்சார மனிதாபிமான விழுமியங்களின் வளர்ச்சிக்கு வழிகோலல்–இவை பொருள் முதல் வாதத்துக்கு மட்டுமன்றி தேசிய வாதத்திற்கும் முக்கியம். எனவே மேற்படி கருத்தையும் பேராசிரியர் கோலெற்றின் (Goulet) கருத்தையும் பேராசிரியர் சியஸ்ர்சின் கருத்தையும் இணைத்து அபிவிருத்தி என்றால் என்ன என்பது பற்றிய வினாக்களைப் பின்வருமாறு கூறலாம்.

1. ஒரு நாடு அபிவிருத்தியடைகிறது என்றால், நாட்டுக்குள் வறுமையை ஒழிப்பதற்கு அதாவது பொதுவாகவாழ்க்கைத் தரத்தையுயர்த்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் எவ்வளவு? அடிப்படைத் தேவைப் பூர்த்தி, வருமான சமமின்மை ஒழிப்பு, கல்வி மேன்மை, வேலைவாய்ப்பு, சுகாதாரம், சமூக கலாசார தேவைகள் என்பன அபிவிருத்தியுறுதல்.

2. சுயமரியாதை காப்பாற்றத்தக்க விதத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஏற்படுகின்றதா? இது தனியாகவும், கூட்டாகவும் – உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ளதாகும்.

3. பொருளாதார முன்னேற்றம் மனித தேர்வுக்கு சுதந்திரமளிக்கின்றதா? வெளியாரில் தங்கியிருத்தலிலிருந்து விடுதலை, உள்ளூர்க் கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை, தவறான கலாச்சார சமூகங்களிலிருந்து விடுதலை அடையும் போக்கு காணப்படுகின்றதா?

இவ்வாறான கேள்விகளை ஆராய்வதன் மூலம் உண்மையான அபிவிருத்தி பற்றி அறியலாம் என தற்கால அபிவிருத்தி ஆய்வாளர்கள் கருதுவர். மேற்படி வினாக்களுக்கு விடை உடன்பாடெனில் அபிவிருத்தி ஏற்படுகின்றதென்பது அர்த்தமாகும். பொதுவாக அபிவிருத்திபற்றிய எண்ணக்கருக்கள், 3–ம் உலக நாடுகளின் அபிவிருத்திகளில் பிரதிபலிக்கப்படுகின்றது.

அபிவிருத்தி பற்றிய கொள்கைகள் அனைத்தும் விருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் பொருளாதாரத்தையும், ஏனைய சமூக, கலாச்சார, அரசியல் அமைப்புக்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும் உருவாக்கப் படுகின்றது. அபிவிருத்தி பற்றிய திட்டங்களில் 3–ம் உலக நாடுகளில் பிரச்சினை காணப்படுகின்றது. அதாவது கிராமப்பகுதிகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன என்ற குறைபாடு பல 3–ம் உலகநாடுகளில் காணப்படுகின்றது. அபிவிருத்தியாளர்களின் அபிவிருத்தி முயற்சிகள் அனைத்தும் 3–ம் உலக நாடுகளின் கிராமங்களை எட்டுவதில்லை எனப் பெரும் குறை கூறப்படுகின்றது. எனவே தான் அபிவிருத்தியில் கிராம அபிவிருத்தியும் முக்கியம் பெறுகின்றது. கிராமங்கள் நாட்டின் முதுகெலும்பு என்பதற்கிணங்க, கிராமங்களை அபிவிருத்தி செய்வதே அபிவிருத்திக்கு சிறப்பான உபாயமாகும். இலங்கையைப் பொறுத்த வரையில் இன்று கிராமங்களும் தகுந்த முறையில் விருத்திசெய்யப் படுகின்றன. பிரதேச சமவளர்ச்சி என்ற கொள்கைக்கு இணங்க, எல்லாப் பிரதேசங்களும் சமவளர்ச்சியைப் பெறவேண்டும் என்ற நோக்குடன் காலத்திற்குக் காலம் இலங்கையின் கிராம அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் இலங்கை சுதந்திரமடைந்த பின் செலுத்தப்பட்ட அக்கறைபோல் இன்று செலுத்தப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வரசு முக்கியமாக அபிவிருத்திக்கு முன் வைத்த திட்டங்களாக மகாவலி அபி விருத்தித்திட்டம், பாரிய கொழும்பு பொரு ளாதாரத் திட்டம், (G. C. E. C.) சுதந்திர வர்த்தகவலயம் என்பன காணப்படுகின்றன. இதில் மகாவலி அபிவிருத்தித் திட்டமே கிராம அபிவிருத்திக்கு உதவியளிப்பதாகக் காணப்படுகின்றது. இலங்கையின் அபி விருத்தி தொடர்பாகப் பல திட்டங்கள், நிலச் சீர்திருத்தங்கள், குடியேற்றத் திட்டங் கள், கிராமஉதயத் திட்டங்கள், மாவட்ட அபிவிருத்திச்சபைத் திட்டம் போன்றன வற்றின் மூலம் கிராம அபிவிருத்திக்கு தூண்டுதல் அளிக்கப்பட்டது. பொதுவாக 3-ம் உலகநாடுகளின் அபிவிருத்திக் கொள் கைகள் முதலாளித்துவப் பார்வையில் பின் வரும் நோக்கங்களை உள்ளடக்கியவையாக உருவாக்கப்படுகின்றன:-

(i) வளங்களைப் பங்கிடுவதற்கான உறுதி யான மத்திய நிறுவன அமைப்புக் களை உருவாக்குதல்.

(ii) தனியார்துறை மேலோங்கி இருக்கத் தக்க வகையில் கலப்புப் பொருளா தார அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

(iii) அந்நிய தேசிய முதலை அனுமதிக்கின்ற அரசதுறைக் கைத்தொழிலுக்கு உதவு தல்.

(vi) இறக்குமதிப்பதிலீட்டு நோக்கில் கைத் தொழிலாக்கம்.

(v) கிராம அபிவிருத்திக்குப் பின்வரும் வழிகளில் உதவுதல்.

(1) சமூக அபிவிருத்தித் திட்டங் களை உருவாக்குதல்.

(2) சிறு அளவிலான விவசாயத் திட்டங்களை உருவாக்குதல்.

(3) ஒன்றிணைந்த பிரதேச கிராமிய அபிவிருத்தி.

(4) கூட்டுறவு முதலாளித்துவ நிலை யை உருவாக்குதல்.

(5) சில விசேட அபிவிருத்தித் திட் டங்களை ஆங்காங்கே மேற் கொள்ளல்.

இக் கொள்கை 3-ம் உலகநாடுகளைச் சேர்ந்த பலநாடுகளின் அபிவிருத்தி நோக் கம் கருதி ஏற்படுத்தப்பட்டதாகும். இக் கொள்கைகளின் அடிப்படையில் நாடுகள் ஒவ்வொன்றும் தமக்குச் சாதகமான முறை யில் அபிவிருத்தியை அடைய முயற்சிகளை மேற்கொள்கின்றன.

இலங்கையை நோக்கும் போது சுதந்திரத் தின் பின் பெருந்தோட்டத்துறை அபிவிருத் தியை விட்டு, கிராம அபிவிருத்தியில் கவ னம் செலுத்தப்படவேண்டும் என முடிவு செய்தனர். கொரிய யுத்தத்தின் விளைவாக மேலும் இது சாதகமாக விருந்தது. இலங்கை கிராமிய அபிவிருத்தியை தேசிய மட்டத்தி லும், சிறப்பான பகுதிகளைத் தேர்ந்தெடுத் தும் அபிவிருத்தியைமேற்கொண்டது. தேசிய மட்டத்திலான அபிவிருத்தியில் நிர்வாக விரி வாக்கம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டமை கிராம அபிவிருத்திச் சங்கங்களும், மாதர் முன்னேற்றச் சங்கங்கள் முதலியன அமைக்கப்பட்டமையும், தனிப் பட்ட கிராம அபிவிருத்தி நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகளின் அமைப்பு என்பனவற்றையும் உள்ளடக்க லாம். சிறப்பான பகுதிகளுக்குரிய அபி விருத்தியாக கல்லோயா ஆற்றுப் பள்ளத் தாக்கு அபிவிருத்திச்சபை, (1946) உட வளவை ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத் திச் சபை, (1964) மகாவலி திசைதிருப்புத் திட்டம் (1970) போன்ற திட்டங்களையும், தேசியமயமாக்கப்பட்ட பெருந்தோட்டப் பகுதிகளில் உருவாக்கப்பட்ட ''ஜனவசம'' குழுக்களின் அமைப்பு, தேர்தல் தொகுதி ரீதி யாக அல்லது மாவட்டரீதியாகஅபிவிருத்தித் திட்டங்களைநடைமுறைப்படுத்தல் (உதாரண மாக மாவட்டஅபிவிருத்திச்சபை,ஒன்றிணைக் கப்பட்ட மாவட்ட அபிவிருத்தித் திட்டங் கள்) போன்றவற்றைக் குறிப்பிடலாம். 1977ன் பின்னர் இந்நிலைமை, அதாவது கிராமஅபிவிருத்தியைமாத்திரமன்றிஎல்லாப் பகுதிகளும் சமமாக அபிவிருத்தி செய்யப் படவேண்டுமென்ற கொள்கை முன்வைக்கப் பட்டது.

இலங்கையின் கிராம அபிவிருத்தி பற் றிய கொள்கைகள், கோசங்கள் என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமையானவை எனினும் கிராம அபி விருத்தி, ஒன்றிணைக்கப்பட்ட கிராம அபி விருத்தி என்ற பதங்கள் அடிக்கடி பேசப் பட்டு வருவதால் இவற்றின் சர்வதேச விளக் கங்களை நோக்க வேண்டியதும் முக்கியமான தாகும். கிராம அபிவிருத்தி ஒன்றிணைக்கப் பட்ட கிராம அபிவிருத்தி என்பன சர்வதேச ரீதியாக, பலகருத்துக்கள், பேச்சுவார்த்தை கள் என்பனவற்றின் பெறுபேறாக முன்வைக் கப்பட்ட கருத்துக்களாகும். 1970ல் இவை FAO, உலகவங்கி போன்ற நிறுவனங் களினாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இவை கைத்தொழில் மயமான செல்வ நாடு களில் வாழ்கின்றவர்களுக்கும், வளர்முக நாடுகளில் வாழ்கின்ற ஏழை மக்களுக்கும் இடையிலான பொருளாதார இடை வெளி யை அகற்றவேண்டுமென்ற குறிக்கோளுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இவை புதிய கருத்துக்கள் எனினும் இவற்றில் எது புதிது இவை எதனைக் குறிக்கின்றன என்பதில் சந் தேகங்கள் உள்ளன. கிராம அபிவிருத்தி என்றால் என்ன, ஒன்றிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி என்றால் என்ன என்பதற்குப் பின்வரும் அமைப்புக்களின் விளக்கத்தி லிருந்து அறிந்து கொள்ளலாம்.

FAO, [ரோமில்] 1974ல் ஒன்றிணைக்கப் பட்ட கிராம அபிவிருத்தி அணுகு முறை என்பதனை சுருக்கமாக விளக்கியது. கிராம அபிவிருத்தி சார்ந்த கொள்கை கிராம மக் களை அல்லது கிராமிய சமூகங்களை நவீன மயப்படுத்துவதையும். ஒன்றிணைப்பதையும் முக்கியமாகக் கொண்டது. இம்மக்கள் அதிக உற்பத்தி வளத்தினையும், அதிக வேலை வாய்ப்பினையும், அதிக வருமானத்தினையும் பெற இது வழி காணும். அரசாங்கத்தின் ஆதரவு இம்மாற்றத்திற்கான அடிப்படைத் தேவையாகும். உலகவங்கி – 1978ல், கிராம அபிவிருத்தி என்பது; கிராமிய வறுமையை ஒழிப்பதற்கான ஓர் வளர்ச்சி உபாயமாகும். அபிவிருத்தியின் பெறுபேறுகளைக் கிராமப் பகுதியில் பெறுவதன் பொருட்டு, அதனை அப்பகுதிக்குப் பரப்புதல் இதன் முக்கிய நோக்கமாகும். கிராமங்களில் வாழ்கின்ற சிறு விவசாயிகள், குத்தகைக்காரர்கள், நில மற்றோர் ஆகியோர்களிடையே நிலவும் வறு மையை ஒழிப்பதே இதன் பிரதான நோக் கம் எனக் குறிப்பிட்டது. சுவிடன் பல்கலைக் கழகம் – 1976ல் கிராம வறுமைக்கான கார ணங்களைக் கண்டறிந்து அதனைக் குறைப்ப தற்கான ஒன்றிணைந்த அபிவிருத்தியே இதன் திட்டமாகும் என்றது. இவ்வாறு கிராம அபிவிருத்திகள் பற்றிய பல வரையறைகள் பல நிறுவனங்களால் கூறப்பட்டுள்ளன.

எனவே அபிவிருத்தி தொடர்பாகக் காலத்துக்குக் காலம் பல்வேறு கருத்துக்கள் சிந்தனைகள் என்பன பலநிறுவனங்களாலும், ஆய்வாளர்களாலும் முன் வைக்கப்பட்டுள் ளதை அறியலாம். அநேகமாக கிராம அபி விருத்தியை ஏற்படுத்துவது பற்றியும் பல ஆய்வாளர்கள் பல கருத்துக்களை வெளியிட் டுள்ளனர். இவ்வாறான கருத்துக்களினடிப் படையில் இன்று வளர்ச்சியடைந்து வரு கின்ற நாடுகளில் கிராம அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்ற மையை அவதானிக்கலாம். இவ்வாறு பல கருத்துக்கள் முன்வைக்கப் பட்டாலும், இவற்றைச் செயற்படுத்தும் போதுதான் இக் கருத்துக்களின் உண்மையான பெறுபேறு களைக் கண்டுகொள்ள முடியும்.

**References.**


(1) Hentry Bernsteins — "Under development and development" the third world today.
(2) W. M. Scammell — The International Economy Since 1945,
(3) Paul Bairoch — The Economic Development of the Third World Since 1900.
(4) Gunner Myrdal — Asian Drama.
(5) R. P. Misra, D. V. urs and V. K. Natraj — Regional Planning and National Development.
(6) Ronald Dore and Zoe Mars — Community Development.
(7) மக்கள் வங்கி வெளியீடு — "பொருளியல் நோக்கு" செப். — 1982.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருத்தி அடைந்து வரும் நாடுகளின் விருத்திக்கான தடைகள்

தி. பத்மநாதன்

உலக நாடுகள் அவற்றின் விருத்தி விருத்தியின்மை என்பவற்றை அளவிடும் ஒரு, சில கட்டளைக் கற்களின் உதவியுடன் மூன்று வகையாகப் பாகுபடுத்தப்படுகின்றன. அவை அபிவிருத்தி அடைந்த நாடுகள், மையத் திட்டமிடல் நாடுகள், அபிவிருத்தி அடைந்து வரும் மூன்றும் உலக நாடுகள் என்பவை யாகும் இன்றைய நிலையில் மையத்திட்ட மிடல் நாடுகள் எனப்படுபவையும் அபிவி ருத்தி அடைந்து வரும் மூன்றும் உலக நாடுகளும்' 13-ம் நூற்றுண்டின் போர்த்துக் கீசரின் புதிய நிலத்தேட்ட ஆய்வுகள் என்ற அடிப்படையில் பின்வந்த ஒல்லாந்தர் ஐரோப்பியர்களிடம் தமது பொருளாதார, அரசியல் சுதந்திரம் என்பவற்றை இழந்த நாடுகளாகவே காணப்படுகின்றன. தொடர்ந்து 19,ம் நூற்றுண்டு வரையான ஐரோப்பியர்களின் காலனித்துவ ஆட்சிக்கு இந்நாடுகள் உட்பட்டிருந்தமையே, இன்று இந்நாடுகள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் என்ற சொற்பத்துக்குள் அடைக் கப்படும் நிலைக்கான அடிப்படை நிலையை ஏற்படுத்தின என நிச்சயமாகக் கூறலாம்.

பல்வேறுபட்ட காரணங்களால் 19-ம் நூற்றுண்டின் நடுப் பகுதியிலிருந்து இந் நாடுகள் காலனித்துவப் பிடியிலிருந்து விடு பட்டு சுதந்திரம் அடைந்த நாடுகள் எனக் கூறப்பட்டன. ஆனுல் புதிய காலனித்து வம் என்ற மற்றுமோர் பிடியினுள் இந்நாடு களின் பொருளாதாரம், சுதந்திரம், அரசி யல் என்பவற்றை உட்படுத்தி புதிய கட் டளை கற்களை வரையறை செய்வதன் மூலம் இந்நாடுகளை மீண்டும் வகைப்படுத்தலாயின. இதனடிப்படையில் U. N. O. ஐ. நா. வின் வரையறையின்படி அபிவிருத்தி அடைந்த நாடுகளின் தலா வருவாயிலும் ¼ கு குறை வான தலா வருவாயினைப் பெறும் நாடு களே மூன்றும் உலக நாடுகள் என்றும், பேராசிரியர்'' டட்லிசியஸ்' என்பவரின் கூற்றுபடி 500 $ குறைந்த தலா வருவாய் பெறும் நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எனவும் வரையறுக்கப்பட் டுள்ளது. இவ்வகையில் இன்றைய உலகில் 118 நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் என்ற பொதுவான பதத் தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்நாடுகள் விவசாயம் சார் நாடுக ளாக அமைவதோடு மூலதார பொருட்கள் ஏற்றுமதியில் பதப்படுத்தப்படாத மூலப் பொருள் ஏற்றுமதி செய்யும் நாடுகளாக வும் உள்ளன. மொத்த உலக நிலப்பரப் பில் 51% மான பங்கினை இந்த நாடுகள் கொண்டுள்ளன குறிப்பாகநோக்கில் ஆசியா வில் ரஷ்யா, யப்பான் தவிர்த்த ஏனையவை யும்ஆபிரிக்காவில் தென் ஆபிரிக்கா தவிர்ந்த ஏனையவையும் லத்தீன் அமெரிக்காவில் வெனிசுவெலா உருகுவே தவிர்ந்த நாடுக ளுடன் மத்திய கிழக்கு நாடுகளும் சேர்ந்து அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளாகின் றன. இந்நாடுகள் உலக சனத் தொகை யில் 70% ஆன பங்கைக் கொண்டிருப்ப துடன் உலக வருவாயில் 20% பங்கினையே பெறும் நாடுகளாக உள்ளன. இதனுல் இந்நாடுகள் அதிகரித்த குடித்தொகைக் கேற்ற வருவாயின்மை இதனுல் தொடர்ந்த வறுமை அதன் நச்சு வட்டம், கல்வி விருத் தியின்மை, போஷாக்கற்ற உணவு, நிலவு டைமையின் பாரிய வேறுபாடு, தரமற்ற வாழ்க்கைமுறை, வேலையற்ற தொழிற் படை, இதன் மூலமான புரட்சிகள் போன்ற பிரச்சினைகள் இவையாவற்றுக்கும்

T. PATHMANATHAN
Department of Geography
Speical (Final)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவதாரமாக விளங்கும் வர்க்க பேத முறைகளும், உள்ளூர் சர்வதேச ரீதியிலான சுரண்டல்களும், நிறைந்த தன்மை கொண் டுள்ளன. எனவே இவை யாவுமே அபி விருத்தி அடைந்து வரும் நாடுகளின் தலை யாய பிரச்சினைகளாக அமைவதோடு இவையே இந் நாடுகளின் அபிவிருத்திக்கும் தடையாக விளங்கும் தடைக்கற்களாகவும் உள்ளன.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுக ளின் விருத்தி எனும்போது "PROF. GULET" என்பரின் ஆய்வுபடி இது விருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத் தன்னிறைவு மட்டும் அல்ல என்பதாகும் இவரது கூற்றுப்படி, வாழ்வின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படல், சுயமதிப்பை வளர்த்தல் விருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணப்படும் பல்வேறு ரீதியான கட்டுக் கோப்புகளில் இருந்து சுதந்திரம் பெறல் இச்சுதந்திரத்தில் முதன்மையாக புதிய காலனித்துவத்தில் இருந்து விடுபடல், சமூக சுதந்திர விருத்தி பெறல், அடிமைத் தளை நீக்கப்படல், அறியாமை நீக்கப்படல் என்பவையாகும். இவை யாவற்றிலும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தீர்வு காணும் போதே இந்நாடுகள் அபி விருத்தி அடைந்த நாடாகக் கொள்ளப் படும்.

குர்ட்வால்ட்தீம் [ஐ. நா. பொதுச் செயலாளர்] இன்றைய நாடுகளின் பிரச் சினைகள் அல்லது விருத்திக்கான தடைகளை ஆறு பெரும் பிரிவுகளாக வகுக்கின்றார்.

1. **பரவலான வறுமை :** உலக மக்களுள் 2/3 பகுதியினரிடையே பரவியுள்ள வறுமை இன்றைய உலக நாகரீகத்தின் மீது நாம் கூறும் மாபெரும் குற்றச் சாட்டாகும்.

2. **மக்கள் தொகை :** உலக மக்கள் தொகை பெருகி வருவதால் குறைவான இயற்கை வளங்கள் இன்னும் குறைந்து வருகின்றன.

3. **உணவு :** அண்மைக் காலத்தில் உலகின் உணவுப் பொருட்கள் அச்சம் தரும் அளவுக்கு இத்துணைக் குறைவாக ஒன் றுமே இருந்ததில்லை.

4. **ஆற்றல் :** நமது அன்றாட வாழ்வில் ஆற்றல் எத்தனை முக்கியமானது என் பதை உலகம் முழுவதும் திடீரென உணர்ந்துள்ளது.

5. **படைத்துறைச் செலவு :** படைக்கலத்துக் கென வாரந்தோறும் 400 கோடி டாலர் செலவிடப்படுவதால் படைக்கலக் குறைப்பு அவசியமான தொன்றுகிறது.

6. **உலக நாணயமுறை :** நமது இயற்கை வளங்களை நன்கு பயன்படுத்த வேண்டு மெனில் பயன் தரும் உலக நாணய முறை தேவை.

ஐ. நா. வின் மக்கள் தொகை பிரிவின் இயக்குநரும், பிரின்ஸ்டன் பல்கலைகழக மக்கள் தொகை ஆய்வு அலுவலக முன்னாள் இயக்குநரும் ஆன ஃபிராங் டபிள்யூ நோட் டஸ்டீன் 1974 ஜூன் கெய்ரோவில் நிகழ்ந்த ஐ. நா. மக்கள் தொகை கருத்தரங்கில் வளர்ச்சி குன்றிய நாடுகளின் பொருளா தார விருத்திக்கு அதிகரித்த பிறப்பே பிர தான தடையாகும் என்றார். ஆனால் 1974 பெப்ரவரியில் பாரிசில் நிகழ்ந்த சட்டமும் மக்கள் தொகையும் பற்றிய யுனெஸ்கோ மகாநாட்டில் அமெரிக்க இலினோய் பல் கலைக்கழக பொருளியல் பேராசிரியரான ஜூலியன் எல். சைமன் நிலையான மக்கள் தொகையைவிட அதிகரிக்கும் மக்கள் தொகை நாளடைவில் பொருளாதார வளர்ச்சிக்கு துணையாகிறது என்பர் இதே முறையினையே மாசேதுங் அவர்களும் குறிப் பிடுவார் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஒரு வயிற்றுடன் மட்டுமல்ல இரு கைகளு டனும் பிறக்கின்றன என்றார்.

பொதுவாக இன்றைய நிலையில் அபி விருத்தி அடைந்துவரும் நாடுகளுக்குரிய முக்கிய அம்சங்களென ஆறு முக்கிய தன் மைகளைக் குறிப்பிடுவர். அவற்றில் மக்க ளது வாழ்க்கைத் தரம் குறைவாகக் காணப் படும் தன்மை, இதற்கான காரணங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த தேசிய வருவாய் குறைவாககாணப் படல் மொத்த தேசிய வருவாயின் வளர்ச்சி வீதம் குறைவாக காணப்படுவதால் சமனற்ற வருவாய் சமனற்ற பங்கீடு வறுமை நிலை, இதன் மூலம் கொத்தடிமை முறை உருவாக்கம் எனும் அபிவிருத்திக்கான தடைகளுக்கெல்லாம் குடித்தொகைப் பெருக்கமே அடிப்படையாக அமைகிற தெனலாம்.

ஆனல் விருத்தி அடைந்து வரும் நாடு களில் சனத்தொகை அதிகரிப்பு என்பது ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய தொன்றே. ஆனல் அவற்றின் அடர்த்தி வேறுபாடு களும் நிலவுடைமையில் காணப்படும் ஓரிடச் செறிவு என்பனவும் அபிவிருத்திக்கான தடைகளாகின்றன. இவ்வடிப்படையில் ச. கி. மீ.க்கு மக்கள் தொகை இவ்வாறுகும்.

| 1950 | 1975 | 2000 | பரப்பு 1000 ச. k. m. | |
|---|---|---|---|---|
| 8 | 16 | 32 | 20535 | வ. அமெரிக்கா |
| 7 | 13 | 27 | 30227 | தெ. ஆபிரிக்கா |
| 36 | 66 | 120 | 19557 | தென் ஆசியா |
| | | | | உலகம் |

இவ்வகையான வேறுபாடுகளுடன் 1985 வரை மக்கள் தொகை 2·5% என்ற அடிப் படையில் வளரும் என்று கணிப்பிட்டு

### கிராம நகர மக்கள் தொகை

| | 1950 | | 1975 | | 2000 | |
|---|---|---|---|---|---|---|
| | கிராம | நகர | கிராம | நகர | கிராம | நகர |
| வ–அமெரிக்கா | 66 | 96 | 196 | 131 | 494 | 158 |
| ஆபிரிக்கா | 30 | 187 | 98 | 297 | 326 | 492 |
| தென் ஆசியா | 111 | 587 | 299 | 998 | 798 | 1556 |
| உலகம் | 704 | 1781 | 1585 | 2445 | 3395 | 3119 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 1980 ல் | 450 | கோடியாகவும் | |
| 1990 ல் | 540 | ,, | ,, |
| 2000 ல் | 650 | ,, | ,, |

என்றும் விருத்தி அடைந்து வரும் நாடுகள் 2000 ல் மக்கள் தொகையை 500 கோடி அளவிற்கு பெருகிவிடும் என எதிர்வு கூறப்படுகிறது. ஆனல் 1985ன் பின்பு சனத்தொகை பெருக்க வீதம் குறைவடையும் என்றும் அது இந்நூற்ருண்டு இறுதியில் 1·7% த்துக்கு வீழ்ச்சி அடையும் என்றும் கணிப்பிடப்பட்டுள்ளது இவ்வடிப்படையிலேயே ஒவ்வொரு நாளும் இன்று 200,000 குழந்தைகட்கு உணவு தேவைப்படும் என கணிப்பிடப்பட்டது. இது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதொன்றே. ஆனல் உலக பொருளாதார விருத்தி உலகப் பொருளாதார உற்பத்தி முடங்கல்கள் என்பவற்றையும் நோக்குதல் வேண்டும். உலக மொத்த வருவாயில் 80% மான பங்கினைப் பெறும் விருத்தியடைந்த நாடுகள் உலக மொத்தக் குடித்தொகையில் 30% மட்டுமே கொண்டுள்ளன. இதனலேயே விருத்தியடைந்துவரும் நாடுகள் என்று வகைப்படுத்துவதற்கான சாதகமான கட்டளைகள் உருவாக்கப்படுகிறது உதாரணமான U. S. A. யின் தலா வீதவருவாய் 1979 (U. $. 8640 டொலர்) ஆக காணப்பட்ட அதே ஆண்டு இந்தியாவின் தலா வருவாய் 150 (U. S. டொலர்) ஆக அமைகிறது. இந்நிலைக்கு அதிகரிக்கும் குடித்தொகைதான் காரணமென குறிப்பிடப்பட்ட போதும் அதுமட்டும் காரணமல்ல என்பது ஆய்வாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்ருகும்.

உலக மக்கள் தொகை பரம்பலில் சீன இந்தியாவின் சதுர K. m. கு 100 பேருக்கு மேல் காணப்படுவதற்கும் அவுஸ்திரேலியாவில் ச. கி. மீ. கு 2 பேருக்கு குறைவாக காணப்படுவதற்கும் வேறுபாடுகள், அரசியல் கொள்கைகள், மாற்றப்பட்டால் சனத்தொகை நெருக்கடி L D C யின் விருத்திக்கான தடையாகாது. U. N. O. வின் Habitat சஞ்சிகையின்படி ஹொங்கொங்கில் சில பகுதிகளில் ஒரு சதுர மைலில் 38,8500 மக்கள் வசிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது கல்கத்தா நகர் இன்றைய நிலையில் 3 லட்சத்துக்கு மேற்பட்ட மக்களைக் கொண்டுள்ளது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அபிவிருத்திக்காக விருத்தி அடைந்த நாடுகளினல் ஆலோசனையுடன் முன் வைக்கப்பட்ட பசுமைப் புரட்சிகள் இந்நாடுகளின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் கருதப்பட்ட கிராமிய விவசாயத்தை விருத்தி செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனல் புதிய காலணித்துவத்தால் அறிமுகப் படுத்தப்பட்ட கிராமிய விவசாயத்தில் இயந்திரப் பாவனை மீண்டும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலுள்ள கிராமிய வாழ்க்கை முறையில் ஏழைகளை ஏழைகளாக்குவதுடன் உயர்தர பணக்கார வர்க்கத்தை மீண்டும் பணக்காரராக்குவதன் மூலம் சர்வதேச ரீதியான சுரண்டல் சங்கிலி உருவாக்கவும் வழிவகுத்தது. இது மட்டுமல்ல இயந்திர பயன்பாட்டால் கிராமத்தில் நிலமிழந்து வேலையிழந்த மக்கள் நகரம் நோக்கி தள்ளப்படுவது இந்நாடுகளின் நகரங்களில் பாரிய மக்கள் அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்யப் படாததற்கும் அதன்மூலம் அபிவிருத்தி அடையாததற்கும் ஆன, தடைகளில் ஒன்ருக அமைகிறது.

ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் விவசாயப் பொருளாதார நாடுகளாகவும் மூலவள முதற் பொருள் ஏற்றுமதி செய்யும் நாடுகளாகவும் விவாசாய, மூலவள கைத்தொழில் ரீதியில் விருத்தியடைந்த நாடுகளின் வழிகாட்டலைப் பின் பற்றும் நாடுகளாகவும் உள்ளன. காலனித்துவ காலத்தில் ஐரோப்பியரால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழிற் கல்வியல்லாத கல்விமுறை இன்றைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் விருத்தியின்மைக்கும் முதல்தர மூலவளப் பொருள் ஏற்றுமதிக்கும் கைத்தொழில் துறை விருத்தியடையாமைக்கும் தடைகளாக உள்ளன உதாரணமாக சிலி, சாம்பியா, பேரு, என்பவற்றிலிருந்து 80% செம்பும் பொலிவியா, தாய்லாந்து என்பவற்றிலிருந்து 85% தகரமும் ஜமேக்கா சூறினும் என்பவற்றிலிருந்து 90% Boxsid என்பன ஏற்றுமதியாகின்றன. இவற்ருேடு எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் போதிய தொழில்நுட்பக் கல்வியின்மையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் உற்பத்திநாடுகளுக்குள்ளே ஒற்றுமை யின்றியும் காலனித்து நாடுகளின் தொழில் நுட்ப மாதிரியையே பின்பற்றி மீண்டும் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் வளர்ச் சிக்கு உழைப்பனவாகவும் அந்நாடுகளின் சிறு சலுகைகளுக்காக தம்மிடையே வளத்தை இழக்கும் தன்மையில் போராடு பவையாகவுள்ளன.

இவ்வாறான அபிவிருத்தி அடைந்த நாடு களின் தொழில் நுட்ப வழிகாட்டலானது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சுயமுயற்சியையும் சுய தொழில் நுட்பத் தையும் தவிர்த்து அபிவிருத்தி அடைந்த நாடுகளேயே நம்பி இருக்வேண்டியனவாக உருவாக்கப்படுகிறது இவற்றோடு இந்நாடுக ளால் ஏற்றுமதி செய்யப்படும் கைத்தொழில் விவசாயப் பயிர் பொருட்களும் முதல் மூல வளப் பொருட்களும் ஐரோப்பிய சந்தை யில் இவற்றின் பிரதியீடுகளான கைத் தொழில் மூலமான செயற்கைப் பிரதியீட் டுப் பொருட்களுடன் போட்டியிட முடியா மல் குறைந்த விலை நிர்ணயிக்கப்படுகின்றன. இதனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடு களின் தேசிய வருவாய் குறைவடைகிறது. சேமிப்பு குறைவடையும், அதன் மூலமான முதலீடு குறைவடைய வறுமை நச்சுவட்டம் உருவாக்கப்படுகிறது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி தடை செய்யப்படுகிறது. மீண்டும் அபி விருத்தியடைந்த நாடுகளிடம் கடனுக்கா கவோ அன்றி பொருளாதார உதவிக்கா கவோ தங்கியிருக்க வேண்டிய நிலை உருவாக் கவோ அன்றிபொருளாதாரஉதவிக்காகவோ தங்கியிருக்க வேண்டிய நிலை உருவாக்கப்படு கிறது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார விருத்திக்காக அபிவிருத்திய யடைந்த நாடுகளால் இந்நாடுகளில் நிறுவப் படும் பல்தேசிய கம்பனிகள் இந்நாடுகளின் வளத்தை தமது இலாபமாக சுரண்டுபவர் களாகவும் இந் நாடுகளிலேயே ஒரு வர்க்கத் தாரை அதிகார வர்க்கத்தினராகவும் ஒரு வர்க்கத்தாரை தொழிலாள வர்க்கத்தின ராகவும் மாற்றுவதன் மூலம் பொருளாதார சமமின்மை, நிரந்தர வறுமை, என்பவற்றை உருவாக்கும் சாதகமான காரணிகளாகின் றன இதனால் சமதர்ம ரீதியிலான பொருளா தார வளர்ச்சி திசை திருப்பப்படுவதோடு நகர விருத்தியும், வர்க்க வேறுபாடுகள் உருவாக்கப்படும் கிராமிய பொருளாதார விருத்திக்கான தொழில்நுட்பமூலம் அபி விருத்தியடைந்துவரும் நாடுகள் விருத்தி செய்யப்படவேண்டுமென்ற "ஆர்த்தரூசின் இருதிறற் கொள்கை "மூலமான விருத்திக் கும் தடைகளாக இவை அமைகின்றன.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கல்வித் தரம் குறைவடைந்த நிலையில் உள் ளது என்பது, இந்நாடுகளின் விருத்திக்கான தடைகளில் ஒன்றென்பது ஏற்றுக்கொள்ளப் பட வேண்டியதொன்றாகும் உதாரணமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தமது மொத்த ஆக்கத்தில் கல்விக்கு 3% மான பங்கே செலவு செய்கின்றன. இதே வேளை விருத்தி அடைந்த நாடுகள் 5% பங்கும், விருத்தி அடைந்து வரும் நாடுகள் கல் விக்கென ஆண்டுதோறும் 5 டொலர்களும் விருத்தியடைந்தநாடுகள் தலைக்கு 100 டால ரும் செலவு செய்வது குறிப்பிடத்தக்கதா கும் பொதுவாக விருத்தி அடைந்து வரும் நாடுகளில் 20 — 50 % த்தினரே கல்வியறிவு பெற்றோராகக் காணப்படும் போது விருத் தியடைந்த நாடுகளில் 75 — 90 % கல்வி யறிவு பெற்றோராகக் காணப்படுகின்றனர். ஆனால் அதேவேளை அபிவிருத்தியலடந்து வரும் நாடுகளில் நடைமுறையில் காணப் படும் இன வேறுபாடுகள் இந்நாடுகளின் மக்களை கல்வித்துறையில் மட்டமல்லாது ஏனைய துறைகளிலும் விருத்தியடையாமற் செய்வதற்கான தடைகளாகவுள்ளன. உதா ரணமாக தென் அமெரிக்காவில் வெள்ளையர் கறுப்பர் என்ற ரீதியில் காணப்படும் பாகு பாட்டை நோக்கின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மக்கள் | வெள்ளையர் 45 லட்சம் | கறுப்பர் 1 கோடி 90 லட்சம் |
|---|---|---|
| நிலம் | 87% | 13% |
| தேசிய வருமானத்தில் பங்கு | 75% | 20% குறைவு |
| ஊதியம் | 14% | 1% |
| குறைந்தளவு வரி வருவாய் | 750 ரான்ட்ஸ் | 360 ரான்ட்ஸ் |
| மருத்துவர் | 400 பேருக்கு ஒருவர் | 44000பேருக்கு ஒருவர் |
| குழந்தை இறப்பு % | 1000 : 27பேர் | நகரத்தில், 1000–200பேர் கிராமத்தில் 1000–400பேர் |
| மாணவருக்கு கல்விக்கான ஆண்டு செலவு | 696 $ | 44$ |
| ஆசிரியர் | 22 மாணவருக்கு ஒருவர் | 60 மாணவருக்கு ஒருவர் |

1975 ஆம் ஆண்டில் தென் னுபிரிக்க பல்கலைக் கழகத்தின் 17224 பட்டங்களில் வெள்ளையருக்கு 15467ம் கறுப்பருக்கு 1757ம் வழங்கப்பட்டன. இது போன்றே சுரங்கத் தொழிலில் ஆபிரிக்கருக்கு 79 ராண்டும் வெள்ளையருக்கு 590 ராண்டும் (1 ராண்டு 1·15 $) தொழிலாளர் சம்பளமாக வழங்கப் பட்டது. இவ்வாறான செயற் பாடுகளால் அபிவிருத்தி தடைப்படுத் தப்படுவதோடு இனபேதம் வர்க்க பேதம் என்பன உருவாகுவதால் போராட்டம் என்பன உருவாகுவது தவிர்க்க முடியாததாகிறது இதனுல் குறைந்த வேகத்தில் வளர்ச்சியடையும் பொருளாதார விருத்தி தடைசெய்யப்படுகிறது படைக்கல இறக்குமதிக்குத் தள்ளப்படுகிறது.

உதாரணமாக நமீபியா செல்வந்த நாடு. ஆனுல் அதன் செல்வம் மக்கள் தொகையில் 1/10 பங்கான வெள்ளையர்களிடமே உள்ளது. இதுபோன்றே ரொடீசியாவில் 4, 49, 50, 000 ஏக்கர் 250,000 வெள்ளையர்களின் உரிமையாகவும் 449, 40,000 ஏக்கர் 50 லட்சம் ஆபிரிக்கர்களின் உரிமையாகவும் இருந்தது எனவே இவற்றின் காரணமாக ஏற்படும் போராட்டங்களை அடக்க விருத்தியடைந்த நாடுகளின் படைக்கல இறக்குமதி அவசியமாகிறது இவ் வகையில் ஆண்டுதோறும் 200 முதல் 250 மில்லியன் டொலர்கள் செலவாகின்றன. இது மக்களில் பெரும்பகுதியினர் வாழும் நாடுகளின் மொத்த வருமானத்திற்குச் சமமானது, அதே வேளை 25 மில்லியன் ஆண்களும் பெண்களும் மிகவும் குறைந்தளவு சத்துணவு கூடப் பெற முடியாது வாடிக் கிடக்கின்றனர், என்பது குறிப்பிடத்தக்கது. படைக்கலச் செலவை விருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார விருத்திக்கான மூலக்கூறு அடிப்படையில் ஒப்பிட்டால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1 டாங்கி 500,00 $ | = | 520 வகுப்பறைகளுக்கு கருவிகள் வழங்கலாம் (30 மாணவர் கொண்ட தொடக்க பள்ளி வகுப்பு |
| 1 Jet போர் விமானம் (2 கோடி அமெரிக்கடாலர்) | = | 40,000 கிராம மருந்தகங்கள் |
| 1 போர்க்கப்கல் (10 கோடி அமெரிக்கடாலர்) | = | 90 லட்சம் பேருள்ள 13 நகர்கட்கு 19 கிராமப் பகுதிக்கு மின்னுற்றல் வசதி கொடுக்கலாம். |

3 டொலர் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் 100 குழந்தைகளை விட்ட மின் குறைவால் குருடாக்காதவாறு பாதுகாக்கும்.

எனவே இவ்வாறான தவறான போக்குகளும் தேவையற்ற செலவீனங்களும் இந் நாடுகளின் விருத்திக்கு தடையாக அமைகின்றன.

இந் நாடுகளின் விருத்திக்கு மேல் நாட்டு நாடு வட அமெரிக்கப் பாணியில் தொழில் பெருக்கம் ஏற்பட்டு விட்டால் ஒவ்வொரு நாடும் தனக்கு வேண்டிய தேவைகளை நிறைவித்துக் கொள்ளும் வகையில் மனித வாழ்க்கையில் பொதுவான முன்னேற்றம் ஏற்பட்டுவிடும் என சிலர் கருதுவர். ஆனால் உலகில் ஓர் இடத்தில் உள்ள அறிவும் கலைப்பண்பும் நடைமுறையும் உலகம் முழுவதற்கும் பொருந்த மாட்டா சூழலுக்கேற்பவே விருத்திக்கான பாதையும் அமைக்கப்பட வேண்டும்.

விருத்தியடைந்த நாட்டு கலைப்பண்பு பொருளாதார விருத்திக்கான படிமுறைகளை விருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு மாற்றிவிடுவது மட்டும் போதாது. இப்படி செய்வது விருத்தியடைந்து வரும் நாடுகளின் இயல்பாக உருப்பெறும் அறிவியல் தொழில் நுட்ப விருத்திக்கான தடையாக அமைந்துவிடும். அதுமட்டுமல்லாமல் இயற்கையாக ஏற்படும் அறிவு வளர்ச்சிக்கும் தடையாக அமையும். பல்வேறு முறையிலும் ஆய்வு செய்ய முயலும் இந்நாடுகளின் அறிவு விருத்தியை விருத்தியடைந்த நாடுகளின் பாதையை பின்பற்றவே மட்டும் வழியமைப்பதாக உருவாக்கும்.

விருத்தியடைந்து வரும் நாடுகள் தடையின்றி விருத்தி பெற வேண்டுமாயின் அவை தமக்குள்ளே அறிவியலுக்கென ஒரு உள்ளக அமைப்பை ஏற்படுத்தியாக வேண்டும். அரசியல் சுதந்திரம் பெறுவது மட்டும் இந் நாடுகளில் விருத்திக்கான தடைகள் நீக்கப்படுவதாக அமையாது. பொருளாதார சுதந்திரமும் பெறப்படவேண்டும். உலகப் பொருளாதாரத்தின் விரிவாக்கத்தால் உருப்பெற்ற சர்வதேச விரிவாக்கம் ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்ட நுட்பங்களை சிறு மாறுதல்களோடு கையாள்வதாலும் இப் பொருளாதார சுதந்திரம் பெறமுடியாது- பொருளாதார சுதந்திரம் பெற போராடுவதே விருத்தியடைந்து வரும் நாடுகளின் விருத்திக்கான முதன்மையான கோட்பாடென 1970-ல் லுசாக்காவில் நடைபெற்ற கூட்டுச்சேரா மகாநாட்டில் கலந்துகொண்ட 77 விருத்தி அடைந்துவரும் நாடுகள் முடிவு செய்தன. இந்நாடுகளின் புதிய பொருளாதார அமைப்பு முக்கிய இரண்டு கருத்துக்களைக் கொண்டு இருந்தது.

(1) ‘மூலப் பொருள் உற்பத்தி செய்பவர்கள் ஒருங்கிணைய வேண்டும் உற்பத்தியாளர் சங்கங்களை நிறுவவேண்டும்.

(2) பொருளாதார சுதந்திரம் போராட்டத்திற்கு விருத்தியடைந்துவரும் நாடுகள் யாவும் தமக்குள் ஒருமைப்பாடு ஏற்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

(ஆனால் இந்நிலை எந்தளவிற்கு இன்று சாத்தியமாயிற்று என்பது நடைமுறையில் நோக்கப்பட வேண்டுயதாகும்)

இவ்வாறான ஒற்றுமையான செயற்பாட்டின் மூலம் தமது உற்பத்திப் பொருட்களுக்கு நிரந்தர விலையையும் நிர்ணயிக்க முடிவதோடு இந்நாடுகள் தமது பொருளாதாரத்தை ஏற்றுமதி அடிப்படையினைக் கொண்ட பொருளாதாரமாகக் கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளபடியால் தமது ஏற்றுமதி வருவாயினை அதிகரிப்பதால் நாட்டின் பொருளாதாரத்தின் சீரான வளர்ச்சிப்போக்கை நிர்ணயிக்க முடியும். மொத்த வெளிநாட்டு வர்த்தகத்தில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளினதும் அபிவிருத்தி அடைந்த நாடுகளினதும் நோக்கும்போது.

ஏற்றுமதி (U. S. $ M)

| | 1978 | 1979 | 1980 | 1981 |
|---|---|---|---|---|
| சீனு | 9745 | 13987 | 17900 | |
| யப்பான் | 97543 | 103032 | 129,807 | 142240 |
| பாகிஸ்தான் | 1282 | 1644 | 2341 | 2800 |
| இந்தியா | 6100 | 6400 | 7300 | 7500 |
| அமெரிக்கா | 142050 | 184490 | 223970 | 250000 |

இறக்குமதி

| | 1978 | 1979 | 1980 | 1981 |
|---|---|---|---|---|
| சீனு | 11, 399 | 17266 | 20968 | |
| யப்பான் | 79343 | 110671 | 140528 | 146595 |
| பாகிஸ்தான் | 2751 | 3815 | 4857 | 5628 |
| இந்தியா | 6800 | 7700 | 10,000 | 13600 |
| அமெரிக்கா | 175830 | 211, 810 | 249310 | 270,000 |

Source : Far Eastern Economic Review Asia 1982 Year Book

இவ்வாறு உள்ளதுடன் சென்மதி நிலுவையும் பாகிஸ்தான் — 2 · 823 ஆகவும் இதே ஆண்டு ஜப்பானின் + 1804 ஆகவும் உள்ளது எனவே இந்நாடுகள் தமது விருத்தியினை நோக்கின் இவ்வாருன சென்மதி நிலுவையில் தொடர்ச்சியான பாதக நிலையை போக்குவதுடன் பிறநாட்டு வர்த்தக வருவாயிலும் நிலையான அதிகரிப்பு போக்கு ஏற்படுத்தப்பட வேண்டும் இதற்கோர் முன்மாதிரியாக 1960-ம் ஆண்டை அடுத்து உருவாக்கப்பட்ட பெற்ருேல் ஏற்மதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு OPEC உருவாகியது 1973க்குப்பின்பு OPEC நாடுகளின் செயற்பாடு விருத்தியுற்ற நாடுகளின் பொருளாதாரத்தையே தடை செய்யுமளவுக்கு முதன்மை பெற்றது. இதனல்1920-ல் தொடங்கி இன்றுவரை உலகெங்கும் ஆதிக்கம் செலுத்திய முதலாளித்துவ பொருளாதார அமைப்பைக்கொண்ட நாடுகளே எரி பொருளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுவளம் காண முயற்சிக்கும் வகையில் விருத்தியடைந்து வரும் எண்ணெ வள நாடுகளின் கூட்டிணைப்பு வலுப்பெற்றது. இது போன்ற தமது கூட்டிணைப்பையும் அதன் மூலமான எதிர்கால பொருளாதார அரசியல் சுதந்திரத்தையும் மனதில் கொண்டு கூட்டுச் சேர்ந்தும் அவற்றின் ஒன்றிணைந்த விருத்திக்கான மாநாடுகளும் நடாத்தி வருகின்றன. ஆசியாவின் கூட்டமைப்பு, கொமிகோன் நாடுகளின் கூட்டமைப்பு, அணிசேராத நாடுகளின் கூட்டமைப்பு பொது, நலவாய நாடுகள் அமைப்பு, அங்டாட் மகாநாடு என்பவை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விருத்தியை நோக்காகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டவையாகும். இவ்வாறான ஒன்றிணைந்த திட்டமிடல் நாடுகள் ரீதியிலும் சமூக ரீதியிலும் இன ரீதியிலும் ஏற்படும் வேறுபாடுகள் என்பனவற்றை நீக்கி ஒன்றிணைந்த விருத்திக்கு வழிவகுக்கும்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் ஒருங்கிணைப்பு விருத்திக்கான சுயமுயற்சி என்பன விருத்தியடைந்த நாடுகளின் பார்வையில் தமது சந்தையினைப் பாதிப்பதாக அமைவதால் இவற்றின் கூட்டமைப்பு என்பவற்றையும் விருத்தியையும் திசை திருப்பும் முயற்சியிலும் அவை செயற்படுவதுண்டு இருப்பினும் சுய பொருளாதார விருத்திக்கு ஒவ்வொரு அபிவிருத்தி அடைந்து வரும் நாடும் தமது பிரதேச அரசியல், கலாச்சார பண்பாடுகளுக்கேற்ற முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் அரசியல் பொருளாதார, சுதந்திரம் பெறுவதோடு இந்நாடுகளின் விருத்திக்கான தடைகளையும் தகர்த்தெறிய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. பன்னாட்டு வளர்ச்சிக் கழகமானது பன்னாட்டு வளர்ச்சி பற்றியும் புதிய உலக வளர்ச்சிக்கு உரிய திட்ட முறை ஒன்றை, நோபல் பரிசு பெற்ற வரும் கனடாவின் பிரதமராக இருந்தவருமான லெஸ்டாரி பியர்சன் அவர்களை தலைவராகக் கொண்ட ஓர் குழுவினால் தயாரிக்கும்படி வேண்டப்பட்டது. ஏழு பேரைக் கொண்ட இக் குழு லத்தீன் அமெரிக்கா, ஆசியா, மத்திய கிழக்கு நாடுகளிலும் கூட்டங்களை நடாத்தி 70 அரசாங்கங்களின் கருத்துக்களைப் பெற்று அவற்றினடிப்படையில் 30 முக்கிய இலக்குகளும் பரிந்துரைகளும் கொண்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது இதில் வணிகத்துறை, வெளிநாட்டு முதலீடு, பொருளாதார விருத்தி, வெளிநாட்டு உதவி, கடன் தவிர்ப்பு, நிர்வாக உதவி தொழில் நுட்ப உதவி மக்கட்தொகைக் கட்டுப்பாடு, கல்வி ஆராய்ச்சி உதவிகள் பலபக்க உதவிகள் என பத்து பிரிவுகளின் ஆலோசனை வழங்கப்பட்டது. இவ்வறிக்கை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விருத்திக்கான வழிகளைக் குறிப்பிட்ட போதும் புதிய காலனித்துவத்தின் கீழேயே இவற்றின் திட்டங்களும் அமைந்தன.

எனவே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விருத்திக்கும் அவற்றின் விருத்திக்கான தடைகளைக் கண்டறியவும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கூட்டமைப்புகளினாலும் அவற்றின் அங்கத்தவர்களினாலுமே வழி முறைகள் உருவாக்கப்பட வேண்டும் இவர்களாலேயேஇந் நாடுகளின் அபிவிருத்திக்கும் அபிவித்தியின்மைக்குமான யதார்த்தமான காரணிகளைக் கண்டறிய முடிவதுடன் விருத்திக்கான மூலவள, மூலதன இருப்புக்கு ஏற்ற திட்டங்களையும் உருவாக்குவதன் மூலம் இந்நாடுகளின் தடைகளைத் தாண்டிய விருத்தியை ஏற்படுத்தி தன்னிறைவு பெறச் செய்ய முடியும்.

## துணை நூல்கள்


(1) D. J. Dwer People and Housing in Third world cities
(2) China Reconstructs May 5,1982, Agust 8,1982.
(3) H. Myint - The Economics of the Developing Countries
(4) Asia 1982 Year Book
(5) March 1970 கூரியர் வளர்ச்சியில் கூட்டாளிகள் வெல்டர்பி பியர்ஸன்
May 1976 ,,
December 1976 ,,
Septemper 1978 ,, டகவிராம் நாச்மன் வளரும் நாடுகளிடையே தொழில்நுட்ப குறைவு
December 1976 ராதிகா குமாரசுவாமி மூன்றும் உலகின் குரல்
(6) Virakesari Illustrated Weekly 24 · 1 · 1982
(7) சிந்தனை தொகுதி 1 பங்குனி 1983 யாழ் பல்கலைக்கழக வெளியீடு, R. மதனாகரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருத்தியடைந்துவரும் நாடுகளின் பொதுவான பண்புகளும் வேறுபாடான அமைப்புகளும்

இ. மதனகரன்

மூன்றும் உலக நாடுகளெனவும், விருத்திக்குறைவான நாடுகளெனவும், அழைக்கப்படுகின்ற உலகின் 118 விருத்தியடைந்துவரும் நாடுகளின் பொதுவான பண்புகளை பொதுப்பட எடுத்துக்காட்டுவது சிரமமானதாகும். செல்வத்தின் அடிப்படையில் இவையெல்லாமே வறிய நாடுகளாயிருப்பதுடன், வேறுபாடான பண்பாட்டையும், பொருளாதார, சமூக, அரசியல் அமைப்புகளையும் உடையனவாகக் காணப்படுகின்றன. உதாரணமாக 600 மிலியனுக்கு மேற்பட்ட மக்களையும் பல அரசியல் பிரிவுகளையும் கொண்ட இந்தியா அதன் பெரிய அளவின் காரணமாக தேசிய ஒருமைப் பாட்டுக்குரிய பல பிரச்சினைகளை கொண்டிருக்கின்ற போதிலும், பரந்தளவான சந்தையையும், பலதரப்பட்ட இயற்கை வளங்களையும், தன்னிறைவையேற்படுத்தக் கூடிய பல உள்ளார்ந்த இயல்புகளையும், பொருளாதார வேறுபாட்டையும் கொண்டுள்ளது. இதே நேரத்தில் வேறு பல சிறிய நாடுகள் சிறிய சந்தையையும், தொழில் நுட்ப பற்றுக் குறையையும் குறைந்தளவான பௌதீக வளங்களையும் பொருளாதார தன்னிறைவையடையும் திறக்குறை வினையும் கொண்டு விளங்குகின்றன.

மேற்குறித்த இயல்புகளின் காரணமாக மூன்றும் உலகநாடுகளை மூன்று பிரிவுகளின் கீழ் வகுத்தல் பொருத்தமானதென்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அவையாவன :-

1. ஐக்கிய நாடுகள் சபையினுல் குறிக்கப்பட்டுள்ள, குறைந்த விருத்தியையுடைய 42 நாடுகள்.
2. எண்ணை ஏற்றுமதி செய்யாத 63 விருத்தியடைந்துவரும் நாடுகள்.
3. நில நெய் வளம் நிறைந்த 13 நில நெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள்.

(118 நாடுகளும் மேற்குறித்த பாகுபாட்டின் கீழ் இக் கட்டுரையின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன)

இந்நாடுகளில் அமைப்பு சார்பான பல வேறுபாடுகள் காணப்படுகின்றபோதிலும், விருத்தியை அடிப்படையாகக் கொண்டு இவை, சில பொதுவான நோக்குகளையும். இலக்குகளையும் உடையனவாகக் காணப்படுகின்றன. இவற்றுள் வறுமை, தொழிலின்மை, சம வாய்ப்புகளின்மை என்பனவற்றைக் குறைத்தல், கல்வி வாய்ப்புகள், சுகாதார, வீட்டு வசதிகளையேற்படுத்தல், ஒவ்வொருவருக்கும் உணவு கிடைக்க வழியமைத்தல், சமூக பொருளாதார வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் என்பன குறிப்பிடத்தக்கனவாகும். இத்தகைய சமூக, பொருளாதார, அரசியல் இலக்குகளுடன் தொடர்புபட்டு இந் நாடுகளின் பொதுவான பிரச்சனைகளாக கடுமையான வறுமை, உயர்ந்த, மேலும் உயர்ந்து செல்லுகின்ற தொழிலின்மை, கீழுழைப்பு, வருமானப் பங்கீட்டில் சமமின்மை, குறைந்த வளர்ச்சியடையாத மட்டத்தை

R. MATHANAKARAN
B. A. Hons (Cey); M. A.; D. D. P.; (Mysore)
Lecturer, Department of Geography.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடைய பயிர்ச் செய்கை உற்பத்தித்திறன், கிராம - நகர மக்களின் வாழ்விலும் பொருளாதார வாய்ப்புகளிலும் சமமின்மை பொருத்தமற்ற கல்வி, சுகாதார முறைகள். பொருத்தமற்ற வெளிநாட்டு தொழில் நுட்பவியலில் தங்கியிருத்தல், நிறுவன அமைப்புகள், மக்களின்எண்ணங்கள், மதிப்பீடுகள் என்பனகாணப்படுகின்றன;

இந் நாடுகளிடையே பௌதிக, குடித்தொகையியல், வரலாற்று, பண்பாட்டு, அமைப்பு வேறுபாடுகள் காணப்படுகின்ற போதிலும், மூன்றும் உலக நாடுகளின் பொதுவான விருத்திக் குறைவுக்கு பல பொதுவான சமூக, பொருளாதாரக் காரணிகள் அடிப்படையாக இருக்கின்றன. இந் நாடுகளிடையே காணப்படுகின்ற அமைப்பு வேறுபாடுகளைப்பொதுவாக பின்வரும் ஏழு உறுப்புகளாக வகைப்படுத்தலாம்.
அவையாவன :-

1. நாட்டின் பருமன் (புவியியல், குடித்தொகையியல், வருமானம்)

2. வரலாற்றுப் பாரம்பரியம்.

3. பௌதிக, பண்பாட்டுவளவாய்ப்புகள்.

4. பொது, தனியார் துறையின் சார்பு ரீதியான முக்கியத்துவம்.

5. கைத்தொழில் அமைப்பின் இயல்பு.

6. வெளிநாட்டு பொருளாதார அரசியல் வலுக்களில் தங்கியிருக்கும் நிலை.

7. நாட்டினுள் அதிகாரப் பரம்பலும், நிறுவன, அரசியல் அமைப்பும், மேற்குறித்தஇயல்புகளின் ஒற்றுமைகளையும், வேறுபாடுகளையும் ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளின் குறித்த உதாரணங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்தல் பொருத்தமானதாகும்.

மூன்றும் உலக நாடுகளுள் ஒரு நாட்டை இன்னொரு நாட்டிலிருந்து வேறுபடுத்தும் பிரதான காரணிகளுள் நாட்டின் பருமன், இதன் குடித்தொகை, தலாவீத தேசியவருமான மட்டம் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. ஐக்கிய நாடுகளில் முழு அங்கத்துவத்தைப் பெற்றுள்ள 97 விருத்தியடைந்து வரும் நாடுகளுள், 15 மிலியன் மக்களுக்குக் குறைவாக 72 நாடுகளும் 5 மிலியன் மக்களுக்குக் குறைவாக 51 நாடுகளும் கொண்டுள்ளன. பிறேசில், இந்தியா, எகிப்து, நைஜீரியா என்பன பெரிய நாடுகளாவும், குடித்தொகை நிறைந்த நாடுகளாகவும் அக்கம் பக்கத்தே சிறிய நாடுகளான பறகுவே, நேப்பால், ஜோர்டான், சாட் என்பனவற்றையும் கொண்டுள்ளன. பெரிய பருமனின் காரணமாக பொதுவாக பலதரப்பட்ட வள வாய்ப்புகளையும், உள்ளார்ந்த சந்தையையும், வெளிநாடுகளின் உற்பத்திப் பொருட்களுக்கு குறைந்தளவில் தங்கியிருத்தலையும் கொண்டுள்ளன. எனினும் நிர்வாகப் பிரச்சனைகளையும், பிரதேச வேறுபாடுகளையும், தேசிய ஒருங்கிணைப்பு சம்பந்தமான பிரச்சனைகளையும் இவை எதிர்நோக்கவேண்டியுள்ளன.

பெரும்பாலான ஆபிரிக்கா, ஆசிய நாடுகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளான பிரித்தானியா, பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, ஜேர்மனி, போர்த்துக்கல் ஸ்பானியா ஆகியவற்றின் குடியேற்ற நாடுகளாக இருந்துள்ளன, இந் நாடுகளின் பொருளாதார அமைப்புகளும் கல்வி, சமூக நிறுவனங்களும் இக் குடியேற்ற ஆட்சியாளர்களின் மாதிரியைப் பின்பற்றியே அமைக்கப்பட்டன. ஆகவே சமீபத்தில் சுதந்திரம் பெற்ற நாடுகள் பெருமளவுக்கு தமது தேசிய பொருளாதார. அரசியல் அமைப்புகளை ஒருங்கிணைப்பதிலேயே கவனஞ் செலுத்துகின்றனவொழிய விரைவான பொருளாதார விருத்தியிலல்ல. எனவே இந் நாடுகளின் கொள்கைகள் இத்தகைய அரசியல் தன்மைகளையே பெருமளவுக்குப் பிரதிபலிக்கின்றன.

லத்தீன் அமெரிக்காவில் நீண்ட கால அரசியல் சுதந்திர வரலாறும், பொதுவான குடியேற்ற நாட்டுப் பாரம்பரியமும் (ஸ்பானியாவினதும், போர்த்துக்கல்லினதும்) இந் நாடுகளின் புவியியல், குடித்தொகை வேறுபாடுகளிலிருந்தபோதிலும் பொருளாதார, சமூக பண்பாட்டு நிறுவனங்களில் பிரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலிப்பதைக் காணக்கூடியதாயிருக்கின்றது. ஆசியாவில், வேறுபட்ட குடியேற்ற நாடுகளின் பாரம்பரியமும், வேறுபட்ட பண்பாட்டுப் பாரம்பரியமும். இந்தியா (பிரித்தானியா) பிலிப்பைன்ஸ் (ஸ்பானியாவினதும் அமெரிக்காவினதும்) லாவோஸ் (பிரான்ஸ்) இந்தோனேசியா (ஒல்லாந்தர்) ஆகிய நாடுகளில் வேறுபட்ட சமூக அமைப்புகளையும், நிறுவன ஒழுங்குகளையும் ஏற்படுத்தியுள்ளன.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான உள்ளார்ந்த வளம் பெருமளவுக்கு அதன் பௌதிக வள வாய்ப்புகளிலும் (நிலம், கனிப்பொருட்கள், மூலப்பொருட்கள்) மனித வளத்திலுமே (குடித்தொகையிலும், தொழில் நுட்ப வளர்ச்சி மட்டத்திலும்) தங்கியுள்ளது. இத்தகைய பௌதிக வள வாய்ப்புகளைக் கொண்ட நாடுகளுக்கு பாரசீகக் குடாவைச் சூழ்ந்துள்ள நில நெய் நாடுகள் சிறந்த உதாரணமாயுள்ளன. இன்னொரு புறமாக ரோகோ (Togo), லாவோஸ், கையிற்றி (Haiti), வங்காளதேசம் என்பன வளமான நிலப் பகுதிகளையும், வள வாய்ப்புகளையும் மிகக் குறைவாகவே கொண்டுள்ளன.

மனித வள வாய்ப்புகளைப் பொறுத்த வரையில் ஒரு நாட்டில் வாழும் மக்களின் எண்ணிக்கை மட்டுமல்லாது அவர்களின் தொழில் நுட்ப வளர்ச்சி நிலையும் முக்கியத்துவம் பெறுவதுடன் அவர்களது பண்பாட்டுத் தோற்றமும், வேலை செய்யக்கூடிய விருப்பும் அது பற்றிய மன நிலையும், தாம் முன்னேறவேண்டுமென்ற எண்ணமும் முக்கியமாகும். இவற்றுக்குமேலாக இந் நாடுகளில் பொதுத் துறையின் உற்பத்தித் திறன் அமைப்பை மாற்றக்கூடிய நிர்வாகத் திறனும் முக்சியத்துவம் பெறுகின்றது. இவ்வடிப்படையில் ஒரு நாட்டின் பண்பாடு, பாரம்பரியம், சமயம், இன, சாதி வேறுபாடுகள் என்பனவும் இவற்றில் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

பெரும்பாலான மூன்றும் உலக நாடுகள் கலப்பு பொருளாதார அமைப்பினையுடையன. இவ்வாறு பொதுத்துறையையும், தனியார் துறையையும் கொண்டுள்ள இந் நாடுகளில் இவற்றுக்கிடையேயுள்ள வேறுபாடுகளும், இவற்றின் முக்கியத்துவமும் வரலாற்று, அரசியல் பின்னணிகளில் தங்கியுள்ளது. எனவே, பொதுவாக லத்தீன் அமெரிக்க நாடுகள் ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலும் பார்க்க பெரியளவான தனியார் துறையினைக் கொண்டுள்ளன. விருத்தியடைந்துவரும் நாடுகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளுக்கு இந் நாடுகளின் தனியார் துறையில் வெளிநாட்டு உடமை எந்தளவுக்கு இடம்பெற்றுள்ளது என்பது முக்கியமானதாகும். பெரியளவான வெளிநாட்டு உடைமையுடைய தனியார்துறை இத்தகைய ஒரு அமைப்பு இல்லாதஒரு நாட்டிலும் பார்க்க கூடுதலான பொருளாதார, அரசியல் வாய்ப்புகளை ஏற்படுத்தும் அதே நேரத்தில் பிரச்சனைகளையும் ஏற்படுத்துகின்றது. ஆபிரிக்கா போன்ற நாடுகளில் தொழில் நுட்ப திறன் பெற்ற தொழிலாளர் மிகக் குறைவாகக் காணப்படுவதனால் பொதுத் துறை நாடவடிக்கைகளுக்கே அதிகளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதற்குக் காரணம் மிகவும் குறைந்த தொழில் நுட்பத் தேர்ச்சிபெற்ற மனித வளத்தை வெவ்வேறு துறைகளிடையே பிரிவுபடுத்தாது ஒருங்கிணைத்து சிறந்த பயனைப் பெற வேண்டுமென்பதாகும். அத்துடன் பொதுத்துறை முக்கியத்துவம் பெறுகின்ற நாடுகளில் நேரடியான அரசாங்க மூலதனமிடல் செயற்றிட்டங்களுக்கும் கிராமிய வேலைத்திட்டங்களுக்குமே முதலிடம் அளிக்கப்பட, தனியார்துறை முக்கியத்துவம் பெற்ற பொருளாதாரத்தில் அரசாங்க கொள்கைகள் தனியார்துறையினரை வரி விலக்குகளின்மூலம் கூடியளவு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தத் தூண்டுகிறது. எனவே தனியார்துறை, பொதுத்துறை முக்கியத்துவத்துக்கேற்ப இந் நாடுகளிடையேவேறுபாடுகளும் காணப்படுசின்றன.

பெரும்பாலான விருத்தியடைந்துவரும் நாடுகள் அவற்றின் பொருளாதர சமூக' பண்பாட்டுத் தோற்றங்களில் விவசாய அடிப்படையைக் கொண்டு காணப்படுகின்றன. வாழ்க்கைக்கானதும், வர்த்தகத்திற்கானதுமான பயிர்ச்செய்கையே தொழிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாளரைப் பொறுத்தவரையிலும் தொழில் பரம்பலைப் பொறுத்தவரையிலும் பிரதான பொருளாதார நடவடிக்கையாகக் காணப் படுகின்றது. குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் பயிர்ச் செய்கை ஒரு தொழிலாக மட்டுமல்லாது, வாழ்க்கை நடைமுறையாகவும் காணப் படுகின்றது. எனினும், விவசாய அமைப்பு முறை, நிலவுடமை முறைகள் என்பனவற் றில் லத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க நாடுக ளுக்கும் ஆசிய நாடுகளுக்குமிடையே வேறு பாடுகள் காணப்படுகின்றன.

பரும்படியாக்க, சேவைத்துறைகளுக் கிடையே சார்பு ரீதியில், விருத்தியடைந்து வரும் நாடுகளுக்கிடையே அதிகளவு வேறு பாடுகள் காணப்படுகின்றன. பெரும்பா லான லத்தீன் அமெரிக்க நாடுகள், நீண்ட கால சுதந்திர வரலாற்றைக் கொண்டிருப் பதுடன் பொதுவாக ஆசிய, ஆபிரிக்க நாடு களிலும் பார்க்க விருத்தியடைந்த கைத் தொழிற் துறைகளையும், உயர்ந்த தேசிய வருமானத்தையும் கொண்டுள்ளன. 1960-ம் ஆண்டுக் காலத்தில் தைவான், தென் கொரியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் தமது பரும்படியாக்க வெளியீட்டை பெரு மளவுக்கு அதிகரித்ததுடன் கைத்தொழில் அரசுகளாகவும் விருத்தியடைந்துள்ளன. அளவைப் பொறுத்தளவில் மூன்றும் உலக நாடுகளில் இந்தியாவே மிகப் பெரிய பரும் படியாக்கத்துறையினைக்கொண்டுள்ளபோதி லும், இந் நாட்டின் பெரிய அளவான கிரா மியக் குடித் தொகையுடன் பார்க்கும் பொழுது இது சிறிய அளவினதாகக் காணப் படுகின்றது.

எனவே இத்தகைய பொதுவான பிரச் சனைகளினடிப்படையில் மூன்றும் உலக நாடு களின் விருத்திக்கான திறமுறைகள் இந் நாடுகளின் முதனிலை (Primary - agriculture, forestry and fishing), இரண்டாம் நிலை (பெருமளவுக்கு பரும்படியாக்கம்), மூன்றும் நிலை (வர்த்தகம், நிதி, போக்குவரத்து, சேவைகள்) கைத்தொழில் துறைகளின் இயல்பு, அமைப்பு, தங்கியிருக்கும் தன்மை ஆகியவற்றில் தங்கியுள்ளது.

பொருளாதார, சமூக அரசியல் கார ணிகளின் அடிப்படையில் இம் மூன்றும் உலக நாடுகள் வெளிநாடுகளில் தங்கியி ருத்தலும் குறிப்பிடத்தக்கதாகும். பொரு ளாதார நடைமுறைகளுடன் மட்டுமல்லாது பொருட்களின் பரிமாற்றம், தொழில்நுட்ப வியல், நிறுவன அமைப்புகள் (குறிப்பாக கல்வி, சுகாதாரம்), நுகர்ச்சி முறைகள், வாழ்க்கையின் நோக்கங்கள், எண்ணங்கள் என்பனவற்றிலும் இவை விருத்தியடைந்த நாடுகளில் தங்கியிருத்தலைக் காணக்கூடியதா யிருக்கின்றது. எனவே மூன்றும் உலக நாடு களில் சமூக, பொருளாதார, அரசியல் நிறுவன மாற்றங்கள் ஏற்படும்பொழுதே சார்பு ரீதியாக பொருளாதார சமூக விருத் தியும் ஏற்பட முடியும். (நிலவுடமை அமைப்பு, கல்விமுறை, தொழிலாளர் சந்தை தொடர்புகள், பௌதிக, நிதிச் சொத்துகளின் பரம்பல் கட்டுப்பாடு, வரி யிடுதல் சட்டங்கள், கடன் வசதிகள் போன்றன)

மேற்குறித்த அம்சங்களிலிருந்து, இத் தகைய வேறுபாடுகளையுடைய மூன்றும் உலக நாடுகளான ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளை பொதுவாக நோக்குவது எவ்வளவு பிரச்சனையானது என்பது தெளிவாகின்றது. எனினும், பொரு ளாதார இயல்புகளினடிப்படையில் இந் நாடுகளிடையே பல பொதுவான பண்புக ளைக் காணக்கூடியதாயிருக்கின்றது. வசதியையடிப்படையாகக் கொண்டு இப் பொதுப் பண்புகளை ஆறு பிரதான பிரிவு களுக்குள் வகைப்படுத்தலாம். அவையாவன:

1. குறைந்த அளவான வாழ்க்கைத் தரம்.
2. குறைந்த அளவான உற்பத்தித்திறன்.
3. உயர்ந்த குடித்தொகை வளர்ச்சியும் தங்கியிருக்கும் நிலையும்.
4. தொழிலின்மையின் அதிகரிப்பும், கீழு ழைப்பும்.
5. பயிர்ச் செய்கை உற்பத்தியிலும் முத னிலைப் பொருட்களின் ஏற்றுமதியிலும் தங்கியிருத்தல்
6. சர்வதேச விவகாரங்களின் ஆதிக்கமும் அவற்றில் தங்கியிருத்தலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறித்த பொதுவான பண்புகளி னடிப்படையில் விருத்தியடைந்துவரும் நாடு களில் பின்வரும் இயல்புகளைப் பொதுவாகக் காணக்கூடியதாயிருக்கின்றது.

1. மிகக் குறைந்த வளர்ச்சியினையுடைய தேசிய வருமானம்

2. தலாவீத வளர்ச்சியின்மையும் குறைந்த அளவும்

3. வருமான பரம்பலில் மேலேயுள்ள 20 வீதத்தினர் கீழேயுள்ள 40 வீதத்தின ருடன் ஒப்பிடும்பொழுது 2-10 மடங் குக்கு மேற்பட்ட வருமானத்தைப் பெறுதல்.

4. மேற்குறித்த இயல்புகளின் காரணமாக மூன்றும் உலக நாடுகளுட் பெரும்பா லானவை குறிப்பான வறுமையுடைய னவாகவும்; அதாவது 650-1200 மிலி யன் மக்கள் வருடாந்தம் வாழ்க்கைக் கான வருமானமாக 50-75 ஐக்கிய அமெரிக்க டொலருக்குக் குறைந்த வரு மானத்தில் வாழ்தல்.


5. பெரும்பகுதியான குடித்தொகை உட லலமின்றியும், ஊட்டச் சத்துக் குறை வானவராகவும், இதன் காரணமாக விருத்தியடைந்த நாடுகளோடு பார்க் கும்பொழுது பத்துமடங்குக்கு மேற் பட்ட குழந்தை மரண விகிதத்தைக் கொண்ட நாடுகளாகவும் காணப்படு தல்.

6. குறைந்தளவாக படிப்பறிவு, பாடசா லைக்குச் செல்லாதிருத்தல் பொருத்த மற்ற கல்விமுறையும் வசதிகளும் போதியளவு காணப்படாதுமிருத்தல் என்பன.

மேற் குறித்த இயல்புகளின் இடைய றாத் தொடர்புகளினால் ''வறுமையும், புறக் கணிப்பும், வருத்தமும்'''' ("Poverty ignorance and disease") இம் மூன்றும் உலக நாடுகளின் மக்கள் வாழ்க்கையில் பெரு மளவு பாதிப்பினை ஏற்படுத்திவருகின்றன.

வறுமை வட்டம்


Vicious Circle of Poverty




நிரம்பல் பக்கம்

வறுமை வட்டம்

Vicious Circle of Poverty




கேள்விப் பக்கம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறை விருத்தி வட்டம்

Vicious circle of under development




எனவே விருத்தியின்மை என்னும் தோற்றப்பாடு தேசிய ரீதியிலும், சர்வ தேச ரீதியிலும், நோக்கப்படவேண்டிய ஒன்றாகக் காணப்படுகின்றது. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இயங்குகின்ற பொருளாதார, சமூக சக்திகளே வறுமை, சமமின்மை, குறைந்த உற்பத்தித்திறன் ஆகிய மூன்றும் உலக நாடுகளின் பொதுவான இயல்புகளுக்குக் காரணமாயிருக்கின்றன. பொருளாதார, சமூக விருத்திக்கான வெற்றிகரமான செயல்முறைகள் மூன்றும் உலக நாடுகளுக்குள் விருத்திக்கான திற முறைகளை உருவாக்குவதில், மட்டுமல்லாது தற்போதைய சர்வதேச பொருளாதார ஒழுங்கு முறையில். வறுமையான நாடுகளின் விருத்தித் தேவைகளை ஈடு செய்யக்கூடிய வகையில் மாற்றங்களை ஏற்படுத்துவதிலும் தங்கியுள்ளது எனலாம். ஆனால் இவ்வகையில் நாடுகளுக்குள் திற முறைகளை உருவாக்குவதிலும், சர்வதே மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் 'விருத்தி' 'விருத்தியின்மை' என்பனபற்றி நன்கு விளங்கிக் கொள்ளல் அத்தியாவசியமானதாகும்.

## References

1. Celso Furtado; **Economic Development in Latin America**; Cambridge U. P London 1970
2. Economic Survey of Asia and the Far East 1972 United Nations; F A O Rome
3. Gnnnar Myrdal; **Asian Drama** Pantheon New York 1968
4. Lester Pearson etal ; **Partners in Development:** Report of the Commission on International Development. Praeger, New York 1969.
5. Raffaele, J. A.;, **The Economic Development of Nations,** Random House, New York 1971.
6. Robinson, H; **Economic Geography** Macdonald and Evans Ltd, London 1968
7. Robson; Lury, D; (eds) **The economices of Africa** George Allen and Unwin Ltd, London 1969.
8. Todaro; Michael, P; **Economic Development in the Third World.**
9. U. N. World Demographic Year Book 1977.
10. World Bank Atlas
11. World Development Report 1981. The world Bank, Washington, U. S. A. 1981



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு

## குறைந்த விருத்தியையுடைய 42 நாடுகள்

| நாடுகள் | குடித்தொகை 1975 (மில்லியனில்) | தலாவீத மொத்த தேசிய உற்பத்தி 1972 (டொலரில்) | தலாவீத மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி விகிதம் 1965-1972 | பிறப்பில் - ஆயுள் எதிர்பார்ப்பு | பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 1970-5 சராசரி | இறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 1970-5 சராசரி | சிசு மரணம் ஆயிரத்திற்கு | கல்வியறிவுடையோர் விகிதம் (%) | தலாவீத சக்திப் பொருள் நுகர்வு 1971 | மொத்த ஏற்றுமதி (மில்லியன் டொலர்) | மொத்த இறக்குமதி (மில்லியன் டொலர்) | பலவகையான வெளிநாட்டு உதவிகள் (மில்லியன் டொலரில்) | சர்வதேச வைப்புகள் ஜனவரி 1979 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வறுமையான மூன்றும் உலக நாடுகள் | | | | | | | | | | | | | |
| ஆப்கானிஸ்தான் | 19·3 | 80 | 0·8 | 40 | 49·2 | 238 | 182 | 8 | 27 | 90 | 181 | 57·4 | 74 |
| வங்காளதேசம் | 73 7 | 70 | -1·6 | 36 | 49·5 | 281 | 132 | 22 | — | 357 | 874 | 425·4 | — |
| பூட்டான் | 1·2 | 80 | 0·4 | 44 | 43·6 | 20·5 | — | — | — | — | — | 0·5 | — |
| பொட்சுவானு | 0 7 | 240 | 10·0 | 44 | 45 6 | 23 0 | 97 | 20 | — | — | — | 35·0 | — |
| புருண்டி | 3·8 | 70 | 1·1 | 39 | 48 4 | 24·7 | 150 | 10 | 11 | 30 | 31 | 26·1 | 162 |
| கமருன் | 6 4 | 200 | 3·8 | 41 | 40 4 | 22 0 | 137 | 10-15 | 97 | 353 | 334 | 61·5 | 98 |
| மத்திய ஆபிரிக்கக் குடியரசு | 1·8 | 160 | 2 3 | 41 | 43 4 | 22·5 | 190 | 5-10 | 60 | 39 | 34 | 25·6 | 2 |
| சாட் | 4 0 | 80 | 1 6 | 38 | 44·0 | 24·0 | 160 | 5-10 | 27 | 38 | 82 | 40 9 | 8 |
| டகோமி | 3·1 | 110 | 1·7 | 41 | 49 9 | 23·0 | 185 | 20 | 38 | 47 | 94 | 26·2 | 32 |
| எல்சலவடோர் | 4·1 | 340 | 1·2 | 58 | 42 2 | 11·1 | 58 | 49 | 223 | 352 | 373 | 12 8 | 92 |
| எதியோப்பியா | 28·0 | 80 | 1 2 | 38 | 49 4 | 25.8 | 181 | 5 | 32 | 240 | 215 | 64·3 | 278 |
| கானு | 9·9 | 300 | 1·0 | 44 | 48 8 | 21 9 | 156 | 25 | 192 | 619 | 450 | 40·7 | 104 |
| கினியா | 4.4 | 90 | –0 3 | 41 | 46·6 | 22 9 | 216 | 5–10 | 108 | — | — | 20 5 | — |
| கயானு | 0·8 | 400 | 1·3 | 68 | 32 4 | 5·9 | 40 | 76 | 996 | 135 | 164 | 7·6 | 24 |
| கெயிட்டி | 4·6 | 130 | 1·3 | 50 | 35·8 | 16.5 | 150 | 10 | 29 | 52 | 74 | 7 2 | 15 |
| கொண்டியூரஸ் | 3 0 | 320 | 1·7 | 54 | 49·3 | 14·6 | 115 | 45 | 234 | 237 | 262 | 13·9 | 44 |
| இந்தியா | 613·2 | 110 | 1 4 | 50 | 39 9 | 15·7 | 139 | 28 | 186 | 2,958 | 3,236 | 771·4 | 1,508 |
| ஐவறி கோட்ஸ் | 4 9 | 340 | 4·1 | 44 | 45·6 | 20 6 | 164 | 20 | 265 | 858 | 710 | 62·1 | 77 |
| கென்யா | 13·3 | 170 | 4·1 | 50 | 48·7 | 16·0 | 135 | 20-25 | 171 | 461 | 615 | 95·9 | 205 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நாடுகள் | குடித்தொகை 1976 (மில்லியனில்) | தலாவீத மொத்த தேசிய உற்பத்தி 1972 (டொலரில்) | தலாவீத மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதம் 1965—1972 | ஆயுட்கால எதிர் பார்ப்பு | பிறப்பு வீதம் ஆயிரத்துக்கு 1970—75 சராசரி | இறப்பு வீதம் ஆயிரத்திற்கு 1970—75 சராசரி | சிசு மரணம் ஆயிரத்திற்கு | கல்வியறிவுடையோர் வீதம் (%) | தலாவீத சக்திப்பொருள் நுகர்வு 1971 | மொத்த ஏற்றுமதி (மில்லியன் டொலர்) | மொத்த இறக்குமதி (மில்லியன் டொலர்) | வெளிநாட்டு விருத்தி நிதி உதவி | சர்வதேச வைப்புக்கள் ஜனவரி 1975 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கம்போடியா | 8·1 | 120 | –3·8 | 45 | 46·7 | 19·0 | 127 | 41 | 24 | 7 | 80 | 144·8 | — |
| லாவோஸ் | 3·3 | 130 | 3·1 | 40 | 44·6 | 22·8 | 123 | 15 | 91 | 3 | 44 | 73·5 | — |
| லெசத்தோ | 1·1 | 90 | 1·1 | 46 | 39·0 | 19·7 | 181 | 59 | — | — | — | 11·7 | — |
| மலகாசிக் குடியரசு | 8·0 | 140 | 1·4 | 44 | 50·2 | 21·1 | 170 | 39 | 71 | 203 | 2·3 | 52·4 | 48 |
| மாலாவி | 4·9 | 100 | 2·9 | 41 | 47·7 | 23·7 | 148 | 15 | 49 | 99 | 142 | 28·6 | 79 |
| மாலை தீவு | 0·1 | 100 | 0·6 | — | 46·0 | 23·0 | — | — | — | — | — | 0·5 | — |
| மாலி | 5·7 | 80 | 1·3 | 38 | 50·1 | 25·9 | 188 | 5 | 25 | 54 | 115 | 67·9 | 5 |
| மொரித்தானியா | 1·3 | 180 | 2·0 | 38 | 44·8 | 24·7 | 187 | 1·5 | 133 | 100 | 69 | 22·5 | 96 |
| நேபாளம் | 12·6 | 80 | 0·1 | 44 | 42·9 | 20·3 | 169 | 9 | 9 | — | — | 31·2 | 138 |
| நைகர் | 4·6 | 90 | 5·1 | 38 | 52·2 | 25·5 | 200 | 5 | 22 | 56 | 68 | 69·6 | 47 |
| பாகிஸ்தான் | 70·6 | 130 | 1·7 | 50 | 47·4 | 16·5 | 132 | 16 | — | 961 | 931 | 27·9 | 380 |
| நவாண்டா | 4·2 | 60 | 2·1 | 41 | 50·0 | 23·6 | 133 | 10 | 10 | 31 | 28 | 37·8 | 13 |
| செனிகல் | 4·4 | 260 | 0·7 | 40 | 47·6 | 23·9 | 159 | 5-10 | 129 | 195 | 361 | 76·8 | 12 |
| சியராலியோன் | 3·0 | 190 | 1·8 | 44 | 44·7 | 20·7 | 136 | 10 | 109 | 132 | 158 | 14·1 | 48 |
| சோமாலியா | 3·2 | 80 | 1·1 | 41 | 47·2 | 21·7 | 177 | 5 | 31 | 57 | 112 | 35·1 | 51 |
| இலங்கை | 14·0 | 11·0 | 2·0 | 68 | 28·6 | 6·4 | 45 | 80 | 163 | 368 | 421 | 52·9 | 74 |
| சூடான் | 18·3 | 120 | -1·1 | 49 | 47·8 | 17·5 | 141 | 10-15 | 119 | 434 | 346 | 45·3 | 67 |
| தன்சானியா | 15·4 | 3:0 | 2·9 | 44 | 50·2 | 20·1 | 162 | 15-20 | 70 | 368 | 488 | 94·8 | 50 |
| உகண்டா | 11·4 | 150 | 2·0 | 50 | 45·2 | 15·9 | 160 | 20 | 72 | 326 | 163 | 13·4 | 44 |
| வோல்ட்டா | 11·4 | 70 | 0·6 | 38 | 48·5 | 28·8 | 182 | 5-10 | 13 | 24 | 63 | 57·8 | 74 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நாடுகள் | குடித்தொகை 1975 (மில்லியனில்) | தலாவீத மொத்த தேசிய உற்பத்தி 1972 (டொலரில்) | தலாவீத மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி விகிதம் 1962—1972 | ஆயுட்கால எதிர் பார்ப்பு | பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 1970—75 சராசரி | இறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 1970—75 | சிசு மரணம் ஆயிரத்திற்கு | கல்வியறிவுடையோர் விகிதம் % | தலாவீத சக்திப் பொருள் நுகர்வு 1971 | மொத்த ஏற்றுமதி (மில்லியன் டொலர்) | மொத்த இறக்குமதி (மில்லியன் டொலர்) | வெளிநாட்டு விருத்தி நிதி உதவி | சர்வதேச வைப்புக்கள் ஜனவரி 1975 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேற்கு சோமோ | 0.2 | 150 | 0·4 | 63 | 42 0 | 8 0 | 57 | 97 | 112 | 6 | 19 | 1·8 | — |
| யேமன் அரபுக்குடியரசு | 6 7 | 09 | 2·4 | 45 | 49 6 | 20·6 | 152 | 10 | 14 | 8 | 125 | 20·9 | — |
| யேமன் மக்கள் குடியரசு | 1·7 | 100 | -7·2 | 45 | 49·6 | 20·6 | 152 | 10 | 639 | 121 | 170 | 6·9 | 68 |

## எண்ணெய் ஏற்றுமதி செய்யாத 63 விருத்தியடைந்து வரும் நாடுகள்

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அங்கோலா | 6·4 | 300 | 5 5 | 38 | 47·3 | 24·5 | 203 | 10-15 | 157 | 728 | 529 | 8·9 | — |
| ஆர்ஜென்ரீனு | 25·4 | 1·290 | 2·9 | 68 | 21·8 | 8 8 | 60 | 91 | 1,773 | 3,269 | 2,1323 | 13 4 | 1,323 |
| பகமாஸ் | 0·2 | 2,240 | 0·6 | — | 23·8 | 5·7 | 33 | 85 | 5,600 | 531 | 757 | 0·4 | — |
| பஹ்ரேன் | 0·3 | 670 | 6·0 | 47 | 49·6 | 18 7 | 138 | 29 | 7,186 | 246 | 280 | 0·7 | — |
| பார்படோஸ் | 0.2 | 800 | 6·2 | 69 | 21.6 | 8 9 | 31 | 91 | 1,238 | 54 | 170 | 4·8 | — |
| பொலிவியா | 5·4 | 200 | 1·4 | 47 | 43 7 | 18·0 | 108 | 32 | 224 | 280 | 256 | 22·5 | 191 |
| பிறேசில் | 109·7 | 530 | 5 6 | 61 | 37·1 | 8.8 | 94 | 61 | 500 | 6,199 | 6.999 | 63·3 | 5,531 |
| பர்மா | 31·2 | 90 | 1 0 | 50 | 39 5 | 15·8 | 126 | 60 | 68 | 128 | 102 | 70·9 | 162 |
| சிலி | 10 3 | 800 | 2·2 | 63 | 27·9 | 9 2 | 71 | 84 | 1,516 | 1,231 | 941 | 39·7 | 221 |
| மக்கள் சீனக்குடியரசு | 822·8 | 170 | 2·6 | 62 | 26·9 | 10 3 | 55 | 25 | 561 | — | — | — | — |
| கொலம்பியா | 25 9 | 400 | 2 4 | 61 | 40 6 | 8·8 | 76 | 73 | 638 | 1,084 | 876 | 133·3 | 412 |
| கொங்கோ மக்கள் குடியரசு | 1·3 | 300 | 1·4 | 44 | 45 1 | 20 8 | 180 | 20 | 250 | 125 | 134 | 27·2 | 22 |
| கோஸ்ராறிக்கா | 2·0 | 630 | 4·1 | 68 | 33 4 | 5 9 | 54 | 84 | 446 | 339 | 451 | 15·7 | 14 |
| கியூபா | 9.5 | 450 | -1·0 | 70 | 29 1 | 6 6 | 25 | 78 | 1,152 | 803 | 1,292 | 4·9 | — |
| சைபிரஸ் | 0·7 | 1,180 | 6·4 | 71 | 22·2 | 6·8 | 33 | 76 | 1,452 | 179 | 447 | 6 0 | 273 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நாடுகள் | குடித்தொகை 1975 (மில்லியனில்) | தலாவீத மொத்தத் தேசிய உற்பத்தி 1972 (டொலரில்) | தலாவீத மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சி விகிதம் 1962—1975 | ஆயுட்கால எதிர்பார்ப்பு | பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 1970—75 சராசரி | இறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 1970—75 சராசரி | சிசு மரணம் ஆயிரத்திற்கு | கல்வியறிவுடையோர் விகிதம் (%) | தலாவீத சக்திப் பொருள் நுகர்வு 1971 | மொத்த ஏற்றுமதி (மில்லியன் டொலர்) | மொத்த இறக்குமதி (மில்லியன் டொலர்) | வெளிநாட்டு விருத்தி நிதி உதவி | சர்வதேச வைப்புக்கள் ஜனவரி 1975 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| டொமினிக்கன் குடியரசு | 5·1 | 480 | 5·0 | 58 | 45 8 | 11 0 | 98 | 65 | 264 | 442 | 486 | 19·5 | 100 |
| எகிப்து | 37 5 | 240 | 0 6 | 52 | 37·8 | 14 0 | 103 | 30 | 282 | 1 119 | 905 | 73·0 | 603 |
| மத்திய கோட்டு கினியா | 0·3 | 240 | -1 5 | 44 | 36 8 | 19 7 | 165 | 20 | 183 | — | — | — | — |
| கம்பியா | 0 5 | 140 | 1·4 | 40 | 43 3 | 24 1 | 165 | 10 | 68 | 25 | 31 | 6.2 | 35 |
| கிரனடா | 0 1 | 420 | 5 0 | 69 | 27 9 | 7 8 | 34 | 76 | — | — | — | — | — |
| குவாட்டமாலா | 6·1 | 420 | 2 2 | 53 | 42 8 | 13 17 | 79 | 38 | 250 | 442 | 431 | 18·3 | 218 |
| கயாஞ - பிசாவு | 0·5 | 230 | 3·4 | 38 | 40 1 | 25 1 | 208 | — | 103 | — | — | 8 6 | — |
| ஹொங்கொங் | 4·2 | 980 | 5·7 | 70 | 19·4 | 5 5 | 17 | 71 | 1,043 | 5,051 | 5637 | 0·9 | — |
| ஜமய்க்கா | 2·0 | 810 | 3·9 | 70 | 33 2 | 7 1 | 26 | 82 | 1,338 | 392 | 668 | 15 6 | 124 |
| ஜோர்டான் | 2·7 | 270 | -2·8 | 53 | 47·6 | 14 7 | 99 | 35-40 | 318 | 58 | 335 | 88 8 | 472 |
| கொரியன் சனநாயகக்குடியரசு | 15·9 | 320 | 4 0 | 61 | 35 7 | 9 4 | — | — | 2,294 | — | — | — | — |
| கொரியன் குடியரசு | 33·9 | 310 | 8·5 | 61 | 28·7 | 8 8 | 60 | 71 | 850 | 3,220 | 4,219 | 279 0 | 1,056 |
| லெபனன் | 2·9 | 700 | 1·4 | 63 | 39 8 | 9 9 | 54 | 86 | 841 | 573 | 1,189 | 11·7 | 1,672 |
| லைபீரியா | 1·7 | 250 | 4·0 | 44 | 43 6 | 20 7 | 159 | 9 | 368 | 324 | 193 | 10 0 | — |
| மலேசியா | 12·1 | 430 | 2 9 | 59 | 38 7 | 9 9 | 75 | 43 | — | 2,950 | 2,402 | 42·7 | 1,618 |
| மார்ட்டினிக் | 0·4 | 1,050 | 4·6 | 69 | 29·7 | 6 7 | 32 | 85 | 660 | 55 | 244 | 101.8 | — |
| மொரிசியஸ் | 0 9 | 300 | 0 6 | 66 | 24 4 | 6 8 | 65 | 61 | 133 | 132 | 171 | 11·9 | 139 |
| மெக்சிக்கோ | 59 2 | 750 | 2·8 | 63 | 42 0 | 8 6 | 61 | 78 | 1,270 | 2,631 | 4,146 | 12·6 | 1,280 |
| மொங்கோலியா | 1·4 | 380 | 0·6 | 61·6 | 38·8 | 9 4 | — | 95 | 945 | — | — | — | — |
| மொறக்கோ | 17·5 | 270 | 3 0 | 53 | 46·2 | 15·7 | 149 | 14 | 205 | 872 | 1,096 | 91 2 | 417 |

| நாடுகள் | குடித்தொகை 1975 (மில்லியனில்) | தலைவீத மொத்த தேசிய உற்பத்தி 1972 (டொலரில்) | தலைவீத மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதம் 1965-1972 | ஆயுட்கால எதிர்பார்ப்பு | பிறப்பு வீதம் ஆயிரத்திற்கு 1970-75 சராசரி | இறப்பு வீதம் ஆயிரத்திற்கு 1970-55 சராசரி | சிசு மரணம் ஆயிரத்திற்கு | கல்வியறிவுடையோர் வீதம் (%) | தலைவீத சக்திப் பொருள் நுகர்வு 1971 | மொத்த ஏற்றுமதி (மில்லியன் டொலர்) | மொத்த இறக்குமதி (மில்லியன் டொலர்) | வெளிநாட்டு விருத்தி நிதி உதவி | சர்வதேச வைப்புகள் ஜனவரி 1976 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொசாம்பிக் | 9·2 | 300 | 5 6 | 44 | 43 1 | 20 1 | 165 | 7 | 178 | 304 | 478 | 3·9 | — |
| நெதர்லாந்து அன்ரிலிஸ் | 0 2 | 1,500 | 0·6 | 74 | 19 7 | 4·7 | 25 | — | — | 950 | 1,250 | 22·0 | — |
| நிக்சுரகுவா | 2·3 | 470 | 1·5 | 53 | 48·3 | 13 9 | 123 | 50 | 389 | 277 | 327 | 26·2 | 166 |
| ஓமான் | 0·8 | 530 | 22 5 | 47 | 49 6 | 18·7 | 138 | — | 62 | 260 | 134 | 0·1 | — |
| பனமா | 1·7 | 880 | 4 5 | 66 | 36 2 | 7 2 | 47 | 78 | 2 121 | 133 | 489 | 22·2 | 2,303 |
| பப்புவா நியூகினியா | 2·7 | 290 | 7 5 | 48 | 40 6 | 17 1 | 159 | 29 | 133 | 511 | 316 | 195 0 | — |
| பரகுவே | 2·6 | 320 | 2 1 | 62 | 39 8 | 8·9 | 84 | 74 | 142 | 127 | 122 | 14 7 | 89 |
| பேரு | 15·3 | 520 | 1 1 | 56 | 41·0 | 11 9 | 110 | 61 | 621 | 1,047 | 863 | 73·8 | 551 |
| பிலிப்பீன்ஸ் | 44·4 | 220 | 2 4 | 58 | 43.8 | 10 5 | 78 | 72 | 298 | 1,788 | 1,773 | 220 4 | 1 607 |
| றியூனியன் | 6 5 | 1,010 | 4·6 | 63 | 31 2 | 8 5 | 43 | 52 | 334 | 50 | 196 | 176 3 | — |
| றொடீசியா | 6·3 | 340 | 2·9 | 52 | 47·9 | 14.4 | 122 | 25-30 | 618 | 499 | 417 | 0·9 | — |
| சிங்கப்பூர் | 2 2 | 1,300 | 10·3 | 70 | 21·2 | 5·2 | 20 | 75 | 851 | 3 605 | 5,063 | 25·7 | 1,392 |
| சூரினும் | 0·4 | 810 | 4·7 | 66 | 41·6 | 7 5 | 30 | 84 | 2,229 | 172 | 144 | 29 4 | — |
| சுவாசிலாந்து | 0·5 | 260 | 5·3 | 44 | 49·0 | 21 8 | 149 | 36 | — | — | — | 10·3 | — |
| சிரியன் அரபிக் குடியரசு | 7 3 | 320 | 3·8 | 54 | 45·4 | 15 4 | 93 | 35 | 485 | 339 | 595 | 10·4 | 773 |
| தைவான் | 16 0 | 490 | 6 9 | 69 | 24·45 | 5·0 | 28 | 85 | — | 4,378 | 3,797 | -20·5 | 1,191 |
| தாய்லாந்து | 42 1 | 220 | 4·2 | 58 | 43 4 | 10 8 | 65 | 68 | 296 | 1584 | 2,057 | 60·5 | 1,905 |
| டோகோ | 2 2 | 160 | 3·3 | 41 | 50 6 | 23 5 | 179 | 5-10 | 73 | 61 | 101 | 2,5·8 | 47 |
| டொங்கா | 0 1 | 320 | 2·0 | 56 | 39·0 | 10 0 | 107 | 90-95 | — | — | — | 0·9 | — |
| திரினிடாட் | 1·1 | 970 | 3·6 | 70 | 25 3 | 5·9 | 35 | 89 | 3,962 | 658 | 776 | 1·3 | 394 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நாடுகள் | குடித்தொகை 1975 (மில்லியனில்) | தலாவீத மொத்த தேசிய உற்பத்தி 1972 (டொலரில்) | தலாவீத மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதம் 1962—1975 | ஆயுட்கால எதிர் பார்ப்பு | பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 1970—75 சராசரி | இறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 1970—75 சராசரி | சிசு மரணம் ஆயிரத்திற்கு | கல்வியறிவுடையோர் விகிதம் (%) | தலாவீத சக்திப்பொருள் நுகர்வு 1971 | மொத்த ஏற்றுமதி (மில்லியன் டொலர்) | மொத்த இறக்குமதி (மில்லியன் டொலர்) | வெளிநாட்டு விருத்திநிதி உதவி | சர்வதேச வைப்புக்கள் ஜனவரி 1975 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தியூனீசியா | 5 7 | 380 | 3 7 | 54 | 40·0 | 13·8 | 128 | 30 | 255 | 386 | 608 | 129 7 | 418 |
| துருக்கி | 39·3 | 370 | 4 3 | 57 | 39 4 | 12 5 | 119 | 45 | 516 | 1,318 | 2,091 | 82 4 | 1,861 |
| உருகுவே | 3 1 | 760 | 0 4 | 70 | 20 4 | 9·3 | 40 | 91 | 958 | 322 | 285 | 15 8 | 216 |
| வியட்னும்சனனுநாயகக் குடியரசு | 23·8 | 110 | –0·1 | 48 | 41 4 | 17·9 | — | 65 | 165 | — | — | — | — |
| வியட்னுமிய குடியரசு | 19·7 | 170 | 0 7 | 40 | 41;7 | 23·6 | — | 60 | 290 | 59 | 620 | 447·2 | 240 |
| சயர் | 24 5 | 100 | 3·9 | 44 | 45 2 | 20·5 | 160 | 35-40 | 77 | 691 | 787 | 139·2 | 140 |
| சம்பியா | 5·0 | 380 | 0 1 | 44 | 51·5 | 20·5 | 157 | 15-20 | 458 | 1,142 | 604 | 45·2 | 221 |
| **நில நெய் வளம் நிறைந்த 13 நில நெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் - (ஒபெக் நாடுகள்** | | | | | | | | | | | | | |
| அல்ஜீரியா | 16·8 | 430 | 3 5 | 53 | 48·7 | 15·4 | 128 | 25-30 | 492 | 1,802 | 2,338 | 108·3 | 14,90 |
| ஈக்குவடோர் | 7 1 | 360 | 3·8 | 60 | 41·8 | 9·5 | 78 | 68 | 315 | 561 | 532 | 29·1 | 336 |
| கபொன் | 0 5 | 880 | 10 0 | 41 | 32·2 | 22 2 | 229 | 12 | 1,028 | 287 | 160 | 34·1 | 47 |
| இந்தோனியா | 136 0 | 90 | 4·3 | 48 | 42·9 | 6 9 | 125 | 43 | 123 | 3,211 | 2,347 | 589·2 | 16,24 |
| ஈரான் | 32 9 | 490 | 7·2 | 51 | 45 3 | 5 6 | 139 | 23 | 895 | 6·914 | 3,370 | –3·3 | 8,513 |
| ஈராக் | 11·9 | 370 | 1 8 | 53 | 48 1 | 14 6 | 99 | 20 | 650 | 2,292 | 899 | 12·4 | 3,273 |
| குவைத் | 1·1 | 4 090 | -1 3 | 67 | 47 1 | 5·3 | 44 | 47 | 7 888 | 3 789 | 1,042 | -3·2 | 1,654 |
| லிபியன் அரபிக் குடியரசு | 2·3 | 1 830 | 8 1 | 53 | 45 0 | 14 8 | 130 | 27 | 571 | 4 085 | 1 723 | 12 9 | 3,523 |
| நைஜீரியா | 62 9 | 130 | 5 4 | 41 | 49 3 | 22 7 | 180 | 25 | 59 | 3,358 | 1 874 | 72·8 | 5, 981 |
| காட்டார் | 0 1 | 2,530 | 6 1 | 47 | 49·6 | 18·7 | 138 | 10-15 | 2,025 | 332 | 128 | 0 4 | — |
| சவுதி அரேபியா | 9 0 | 550 | 6·8 | 45 | 49·5 | 20 2 | 152 | 5-15 | 988 | 8,638 | 1,993 | 3 3 | 14,285 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | 0·2 | 3,220 | 16·2 | 47 | 49·6 | 18·7 | 138 | 20 | 802 | 1,510 | 800 | 0 1 | — |
| வெனிசு வேலா | 12 2 | 1.240 | 1·1 | 65 | 36·01 | 7·1 | 50 | 76 | 2 518 | 4·727 | 2·813 | 8 3 | 6·191 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையைச் சிறப்பாகக் கொண்டு குறைவிருத்தியும் குறைவிருத்தியம்சங்களும்

செல்வி நா. தேவரஞ்சிதம்

உலகநாடுகளை இன்று பொருளாதார அடிப்படையில் விருத்தியடைந்த நாடுகள், விருத்தியடைந்து வரும் நாடுகள், குறை விருத்தி நாடுகள் எனப் பொதுவான பாகு பாட்டில் பிரித்து நோக்குகின்றூர்கள். அதா வது உலகின் ஒரு தொகுதியான நாடுகள் பொருளாதாரம், தொழில்நுட்பம் என்பன வற்றில் நன்கு முன்னேற்றம் அடைந்தன வாகவும் அவ்வாறான நிலைமைகொண்ட நாடுகளில் வாழ்கின்ற மக்கள் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையுடையவர்களாகவும் காணப்படும் அதேவேளை இன்னோர் புற மான நாடுகள் குறைந்த பொருளாதார நிலை, விருத்தியற்ற தொழில் நுட்பத்தி றன், குறைவான வாழ்க்கைத் தரம் உடைய வர்களாகவும் காணப்படுகின்றூர்கள் இவ் வாறான வேறுபட்ட அமைப்புகளே உலக நாடுகளை மேற்கூறிய பாகுபாட்டை ஏற் படுத்தக் காரணமாக அமைகின்றன.

குறைவிருத்தி என்றால் என்ன? வாழ்க் கைத்தரம் குறைவு என்றால் என்ன? என் பதை நாம் முதலில் விளங்கிக் கொள்ளல் வேண்டும்." குறைவிருத்தி (Under Development) விருத்தியின்மை (Un Development), விருத்தியடைந்த தன்மை - (Development) இம்மூன்று சொற்பதங்களுக்குமிடையே பல வேற்றுமைத் தன்மைகள் காணப்படு வதை நோக்கமுடிகின்றது.

குறைவிருத்தியெனின் தலாவருமான நிலைக் குறைவும், அவற்றினைக் கொண் டுள்ள நாடுகளின் இயற்கை வளங்கள்மனித வளங்கள் போதுமான அளவு விருத்தி அற்றிருக்கும் தன்மையை நாம் குறை விருத்தி எனக் கருதக்கூடியதாகவுள்ளது. "Syxients" என்பவர் மூலவளங்கள் சரி யான முறையில் பயன்படுத்தப் படாமை குறைவிருத்தித் தன்மையை எடுத்துக் காட்டும் என்றார். "Webb" என்பவர் ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டல் நட வடிக்கையே குறைவிருத்திக்குக் காா ணம் என்கிறார். எது எவ்வாறாயினும் உலகிலுள்ள குறைவிருத்தி நாடுகள் என்ற தொகுதியில் உள்ளடக்கப்படும் நாடுகள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் தத்தம் நாடுகளின் விருத்திக்கான படியில் காலடி எடுத்து வைக்கத் தொடங்கியமையால் இன்று பொதுவாக குறைவிருத்தி என்ற சொற்பிரயோகம் குறைவடைந்து வருகின் றது. இவ் வகையில் இலங்கையை நோக்கு கின்றபோது இந்நாடு இன்று விருத்திப் பாதையில் செல்கின்ற ஒரு நாடாகும். எனி னும் குறைவிருத்தியம்சங்களின் தாக்கத்தி லிருந்து இலங்கை இன்னும் விடுபட வில்லை, என்ற வகையில் நாம் இவ்வம்சங் களின் தாக்கத்தை இலங்கையில் நோக் குதல் பொருத்தமானதே.

உலகில் இன்று 118 நாடுகள் இவ் வாறாகக் குறைவிருத்தி நாடுகள் என்ற வகுப்பில் அடக்கப்படுகின்றன. இலங்கை யும் இந்நாடுகளில் ஒன்றாகும். குறை விருத்தி நாடுகளுள் பெரும்பாலான நாடுகள் வறு மையானதாகவும், வாழ்க்கைத் தரம் குறைந்த நாடுகளாகவும் காணப்படுகின் றன. இதன் அடிப்படையில் உலகில் ஆபி ரிக்காவின் தென்பகுதி தவிர்ந்த ஏனைய நாடுகள் தென்-தென்கிழக்காசிய - லத்தீன் அமெரிக்க நாடுகள் ஏன்பன இத்தன்மை களைக் கொண்டு விளங்குகின்றன. இந் நாடுகள் பெரும்பாலும் அயனவலயத்துள் அமைந்திருப்பதுடன் கடந்த காலத்தில் மேற்கத்தேய ஆட்சிக்குட்பட்டும் இருந்தன. இவ்வாறான குறைவிருத்தி நாடுகள் உலகின் மொத்த குடித்தொகையில் 2/3 பகுதிக்கு மேற்பட்ட மக்களைக் கொண்டு காணப்படு கின்றன. அதேவேளை உலக மொத்தச் சக்தி நுகர்ச்சியில் 10 வீதத்தையும், உலகப் பரும்படியாக்கக் கைத்தொழில் பொருட்

Miss. N. THEVARANJITHAM B.A Hons (Jaffna)
Temporary Asst. Lecturer, Department of Geography.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் பெருமதியில் 7 வீதத்தையுமே கொண்டுள்ளன. இவ்வாறான தன்மைகளிலிருந்து இந்நாடுகளது குறைவிருத்தி நிலை தெளிவாகின்றது.

குறைவிருத்தி நாடுகளில் காணப்படும் பொதுவான அம்சங்களில் பெரும்பாலானவற்றை நாம் இலங்கையிலும் அடையாளங் காணக் கூடியதாக உள்ளது. தலாவருமானத்தினைக் கொண்டு நாடுகட்கிடையிலான விருத்தியினை நோக்கின், விருத்தியடைந்த நாட்டின் தலாவருமானத்தில் 1/4 பங்கிற்குக் குறைவாகக் கொண்ட நாடுகள் குறைவிருத்தி நாடுகளென "பெஞ்சமின் ஹிக்கின்சன்" கருத்துத் தெரிவித்திருக்கின்றார். இவ்வகையில் இலங்கையின் தலாவருமானமானது 230 (1981) டொலராகும். இன்று உலகின் முன்னேறிய நாடுகளின் தலாவருமானத்துடன் ஒப்பிட்டு நோக்குகின்ற போது இத்தன்மையைப் புரிந்துணர முடிகின்றது.

தலாவருமான ஒப்பீடு — **1981** (டொலர்)

| குறைவிருத்திநாடு | தலாவருமானம் | விருத்தியடைந்த நாடு | தலாவருமானம் |
|---|---|---|---|
| வங்காளதேசம் | 90 | ஐக்கிய இராச்சியம் | 6820 |
| இந்தியா | 190 | ஜப்பான் | 8810 |
| இலங்கை | 230 | ஐக்கிய அமெரிக்க | 10630 |
| எகிப்து | 480 | சோவியத் சமவுடமை நாடு | 4110 |
| நைஜீரியா | 670 | குவைற் | 171000 |

Source :- Statesmen Statistical Year Book 1981

இவ்வட்டவணையை நோக்குகின்றபோது இலங்கையின் தலாவருமானம் விருத்தியடைந்த நாடுகளின் வருமானத்தின் ¼ பங்கைவிடக் குறைவாகும். ஐக்கிய அமெரிக்க நாணயப்படி 500 டொலருக்குக் குறைவான வருமானம் பெறும் நாடுகள் குறைவிருத்தி நாடுகள் என்ற டட்லிசியசின் கருத்துப்படி இலங்கை ஒரு குறைவிருத்தி நாடாகும். எனினும் சரியாக இடம்பெறாத தேசிய வருமானக் கணிப்பீடு இவற்றில் ஏற்றத் தாழ்வினை உண்டுபண்ணக்கூடியதாக உள்ளது.

இந்நாடுகளில் காணும் குறைவிருத்திக் காரணிகளில் அடுத்து முக்கியம் பெறுவது விவசாயப் பொருளாதாரமாகும். குறைவிருத்தி நாடுகள் யாவும் இன்று தமது பொருளாதாரத்தினைப் பெருமளவிற்கு விவசாயத்தினாலேயே ஈடு செய்கின்றன. இவை விவசாய நாடாகக் காணப்படுவதுடன், மொத்தக் குடித்தொகையில் 72·3% மேற்பட்டவர்கள் விவசாயத்தினாலேயே சீவியம் நடத்துபவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வகையில் இலங்கையும் ஓர் விவசாயநாடு. இதன் தேசிய வருவாயில் 54·2% விவசாயத்திலிருந்தே பெறப்படுகின்றது. கீழ்க்காணும் அட்டவணை விருத்தியடைந்து வரும் நாடான இலங்கையில் 1981ல் மொத்தத் தேசிய உற்பத்தியில் விவசாயத்தின் பங்களிப்பை உணர்த்துகின்றது. இதேவேளை மொத்த தொழில் வலுவில் 71% விவசாயத்தில் பங்களிப்பவர்களாக உள்ளனர். இந்நிலமை இலங்கையை ஏனைய துறைகளில் நாட்டம் செலுத்தாது குறை விருத்தித் தன்மையிலேயே வைத்திருக்கக் காலாக அமைகின்றது. துறைரீதியான வளர்ச்சியை நோக்குகின்றபோது ஒரு நாட்டின்வளர்ச்சி விவசாய, கைத்தொழில் சேவை என்ற அடிப்படையில் வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும், ஆனால் இலங்கையில் மாறாக சேவை, கைத்தொழில், விவசாயம் என்ற அடிப்படையில் காணப்படுவதை அட்டவணை காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைரீதியான வளர்ச்சி (வீதத்தில்)

| நாடுகள்L.D.C. | விவசாயத்துறை | கைத்தொழில்துறை | சேவைத்துறை |
|---|---|---|---|
| இந்தியா | 38 | 27 | 35 |
| இலங்கை | 27 | 31 | 42 |
| பாகிஸ்தான் | 32 | 24 | 44 |
| பிலிப்பைன்ஸ் | 24 | 35 | 41 |
| மலேசியா | 24 | 33 | 43 |
| நாடுகள் D. C. | | | |
| ஜப்பான் | 05 | 42 | 53 |
| பிரான்ஸ் | 05 | 34 | 61 |
| சுவீடன் | 03 | 32 | 65 |

Source - U. N. statistical year Book 1975

குறைவிருத்திநாடுகளில் 70% மான உழைப்பினர் தொகை விவசாயத்தில் காணப்பட விருத்தியடைந்த நாடுகளில் 6% மாக உள்ளது. இவ்வகையில் இலங்கையை நோக்கின் ஏறக்குறைய அரைப் பகுதியினர் விவசாயத் துறையில் உள்ளனர். கடந்த 20 ஆண்டுகளில் விகிதாசார ரீதியாக அதிகளவு மாற்றம் இலங்கையில் ஏற்படவில்லையெனலாம்.

குறைவிருத்தி நாடுகளில் இடம் பெறும் கைத்தொழில்களை நோக்கின் இவை பெரும்பாலும் வியசாயத்துடன் இணைந்து காணப்படும் தன்மையும் இந்நாடுகளைக் குறைவிருத்தியடையச் செய்கின்றன என லாம். பெரும்பாலான அடிப்படைக்கைத் தொழில்கள் யாவும் விவசாயம், காட்டுத் தொழில், பயிர்ச் செய்கை, மீன்பிடி, சுரங்கமறுத்தல் தொடர்பான தொழில்களைக் கொண்டுள்ளன. அதாவது விருத்தியடைந்த நாடுகளில் கைத்தொழில் புரட்சி ஏற்படுத்திய பாதிப்பை இந்நாடுகளில் குறிப்பாக இலங்கையில் காணமுடியாதுள்ளது. இலங்கையில் இடம்பெறும் கைத்தொழில்கள் பெரும்பாலும் விவசாயம் சார்பானவை என்பதைக் கீழ்க்காணும் அட்டவணை விளக்குகின்றது.

| துறைகள் | 1971 இல் (வீதம்) |
|---|---|
| விவசாயத் தொழில் | 50·4 |
| கைத்தொழில் | 13.4 |
| தயாரிப்புக் கைத்தொழில் | 9.6 |
| சேவை | 28·0 |
| ஏனைய துறைகள் | 8·2 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை.

குறைவிருத்தி நாடுகள் என நாம் அடையாளம் காணும் நாடுகள் யாவும் ஏற்றுமதிப் பொருளாதாரத் தன்மையைக் கொண்டுள்ளதை நோக்க முடிகின்றது. குறிப்பாக தென், தென் கிழக்கு, தூர கிழக்காசிய நாடுகள் இத்தன்மையைக் கொண்டுள்ளன. இவ்வகையில் இலங்கையை நோக்கின் இங்கு ஏற்றுமதிக்கான வர்த்தகப் பயிர்ச்செய்கை இடம்பெறுவதும் இவை வானிலைக் காலநிலை ஏதுக்களுக்குட்படுவதும், அதேவேளை குறைவிருத்தி நாடுகள் ஒரேவித பயிர்களை உற்பத்தி செய்வதும், இலங்கையை ஓர் குறைவிருத்தி நாடாகக் கொள்ளவைக்கின்றன.

குறைவிருத்தி நாடுகளின் பொருளாதாரம் வளரமுடியாமல் இருப்பதற்கும், உற்பத்தியில் உயர்வைக் காட்டமுடியாமல் இருப்பதற்கும், இந் நாடுகளில் காணப்படும் அதிகளவான குடித்தொகை காரணமாகும். பிறப்பு வீத அதிகரிப்பும், நவீன - விஞ்ஞான தொழில் நுட்பத்தில் பின்தங்கியிருப்பதும் குடித்தொகை அதிகமாக உள்ளதற்குக் காரணமாகும். குறிப்பாக இலங்கையில் தலாவளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.1% மாகவும், குடித்தொகை வளர்ச்சி 2·2% (1971) காணப்பட சோவியத் சமவுடைமைக் குடியரசில் இவை முறையே 2.9, 0·8% மாகவும், உள்ளது, இவ்வேறு பாடு குடித்தொகையின் மிகையதிகரிப்பைக் காட்டிநிற்கின்றது. கீழ்க்காணும் அட்டவணை இலங்கையின் நிலைமையைப் போக்குப் பற்றி விளக்குகின்றது.

| | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 |
|---|---|---|---|---|---|
| குடித்தொகை ('000) | 13942 | 12196 | 14471 | 14738 | 14988 |
| வளர்ச்சி (வீதம்) | 1.6 | 1.8 | 2·0 | 1·8 | 1·7 |
| வாழ்க்கை எதிர்பார்ப்பு (ஆண்டு) | 66 | 69 | 69 | 36 | 69 |
| சிசுமரணம் (தலா '000 ) | 42 | 42 | 39 | 49 | 37 |

Source :- Population of Srilanka 1971 — 81

அத்துடன் வாழும்வயது குறைவாகவும் தாங்கமுடியாத குடித்தொகையைக் கொண்டும் உள்ளன. விருத்தியடைந்துவரும் நாடுகளில் வாழும் வயது 73 ஆகவும் குறைவிருத்தி நாடுகளில் 52 ஆகவும் இலங்கையில் 69 ஆகவும், உள்ளது. அதேவேளை குடித்தொகை அதிகரிப்பு வீதம் விருத்தியடைந்த நாட்டில் 1·1%, விருத்தியடைந்து வரும் நாட்டில் 2·5-3·0% ஆகவும் உள்ளது.

ஒருநாட்டின் மொத்த சனத்தொகையில் கல்வியறிவுடையோர் விகிதாசாரத்தைக் கொண்டு விருத்தி — குறைவிருத்தி பற்றி அறிந்து கொள்ளமுடியும்.

கல்விஅறிவுடையோர் 1979 (வீதத்தில்)

| நாடுகள் | விதம் | நாடுகள் | வீதம் |
|---|---|---|---|
| இந்தியா | 36 | சீனா | 98 |
| இலங்கை | 88 | U. S. A. | 95 |
| பாகிஸ்தான் | 25 | U. S. S. R. | 98 |
| பூட்டான் | 13 | ஜப்பான் | 98 |

Source — Statesmen Year Book 1979/80

கல்வி வளர்ச்சியினைக் கொண்டு இலங்கையை நோக்கின் ஓர் குறைவிருத்தியற்ற வளரும் நாடெனவே கொள்ளக் கூடியதாகவுள்ளது. எனினும் இவ்வாறான அதிகரித்த (88%) அளவு கடந்த சூலங்களில் ஏற்பட்ட மாற்றத்தினதும், 1946ல் புகுத்தப்பட்ட இலவசக் கல்வியுமே காரணம் எனலாம். பொதுவாக விருத்தியடைந்த நாடுகளில் (1981ல்) 97% மாகவும் விருத்தியடைந்துவரும் நாடுகளில் 52 % மாக - சராசரியாக உள்ளது.

குறைவிருத்தியின் மற்றுமோர் அம்சம் தங்கியிருக்கும் தன்மை அதிகமாக உள்ளமையாகும். மேற்கூறிய காரணிகள் பல ஒன்று சேர்ந்து தங்கிவாழ்வோர் எண்ணிக்கையை அதிகமாக்கியுள்ளன. பொதுவாக விருத்தியடைந்த நாட்டில் 15 வயதுக் குட்பட்டோரில் தங்கியிருப்போர் 30-35% மாகவும், குறைவிருத்தி நாடுகளில் 65% மேலாகவும் உள்ளது. இவ்வகையில் இலங்கையை நோக்கின் தங்கியிருப்போர் 46% வீதமாகவும், வேலையற்றவர்கள் 42% மாகவும் உள்ளனர். இந்நிலைமை உற்பத்தியைக் குறைவடையச் செய்து உழைப்பில் தங்கியிருக்கும் தன்மையை வலுவடையச் செய்துள்ளன,

அடுத்து அதிககுடித்தொகையினர் விவசாயிகளாகஇருப்பதால் அதிகளவான மக்கள் கிராமியப்பகுதிகளில் உள்ளார்கள். இந்நாடுகளில் பொதுவாக 85% மான குடித்தொகை விவசாயத் தொழிலைக் கொண்டுள்ள அதே வேளை விருத்தியடைந்த நாட்டில் 8—15% மாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயவளர்ச்சி வீதம் 1979 ( வீதத்தில் )

| விருத்தியடைந்து வரும் நாடு | தொகை | விருத்தியடைந்த நாடு | தொகை |
|---|---|---|---|
| இந்தியா | 41 | அவுஸ்திரேலியா | 06 |
| இலங்கை | 36 | ஐக்கிய அமெரிக்கா | 27 |
| வங்காளதேசம் | 57 | சோவியத் ஒன்றியம் | 20 |

Source:- World year Book 1979

நாட்டின் பொருளாதார விருத்தித் தன்மையைக் கொண்டும் அந்நாடு விருந்தியடைந்துள்ளதா, இல்லையா என் அறிந்து கொள்ளலாம். இவ்வகையில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியானது 1960ல் 18% மாகவும், 1980ல் 27% மாகவும் கொண்டிருக்கும் வேளை விருத்தியடைந்த நாடான இங்கிலாந்து 1960ல், 86% யும் 1980ல் 91%யும், மேற்கு ஜேர்மனி முறையே 77%, 85%யும் காட்டி நிற்கிறது. இத்துடன் இலங்கையில் துறை ரீதியாக வேலையற்றோர் தொகையின் அதிகரிப்பை கீழ்க்காணும் அட்டவணையில் அறிய முடிவதுடன் இது பொருளாதாரத்தை விழுங்குந் தன்மையுடையது. இவ்வாறான தன்மை இலங்கையை ஓர் குறைவிருத்திப் போக்குக் கொண்ட நாடாகக் கொள்ளவைக்கின்றன.

| துறை | வேலையற்றோர் (1000) | மொத்தத்தில் (வீதம்) |
|---|---|---|
| நகரம் | 1157 | 21 · 2 |
| கிராமம் | 3791 | 69 · 4 |
| தோட்டம் | 515 | 9 · 4 |
| தீவு முழுவதும் | 5457 | 100 |

மூலம்:- பொருளியல் நோக்கு ஆடி 1977

ஒரு நாட்டின் விருத்திக்குத் தடைவிதிப்பனவாக அந் நாட்டில் சமனற்ற வருமானப் பங்கீடும் காரணமாக உள்ளது. இலங்கையை நாம் நோக்கின்

> 200/=—33·0%
200-299 —20·5%
300-399 —19·8%
400 < —20·7

இவ்வாறு அமைந்து காணப்படுவதுடன் இவை கிராம-நகர ரீதியாகப் பெறும் வருமான இடைவெளியும் அகன்றதாகவே யுள்ளது

இவ்வாறே ஒரு நாட்டின் சுகாதார வசதிகளின் உன்னத தன்மைகளும் குறை விருத்தியில் ஒரு நாட்டை வைத்திருக்கக் காலாகும். எவ்வளவு மக்களுக்கு ஓர் வைத்தியர் ஒரு தாதி, ஒரு வைத்திய சாலை இருக்கின்றது? வைத்தியசாலையிலுள்ள கட்டில்களின் தொகை என்ன? போன்ற விபரங்களை நாம் விருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்கின்றபோது இலங்கையின் குறைவிருத்தித் தன்மை தென், தென்கிழக்காசிய நாடுகளின் குறைவிருத்தித் தன்மை, புலனுகும். விருத்தியடைந்த நாடுகளில் பொதுவாக 750 பேருக்கு ஒரு வைத்தியர் என்ற விகிதப்படி காணப்பட குறைவிருத்தி நாடுகளில் 16,000 பேருக்கு ஒரு வைத்தியர் என்ற அமைப்பில் உள்ளது. கீழ்க்காணும் அட்டவணை இதனை விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விருத்தி அடைந்து வரும் நாடுகள் | வைத்தியர் | தாதி | விருத்தியடைந் நாடு | வைத்தியர் | தாதி |
|---|---|---|---|---|---|
| எதியோப்பியா | 75320 | 5400 | U. S. A | 600 | 190 |
| இலங்கை | 6250 | 2050 | U. S. S. R | 300 | 210 |
| மலேசியா | 8730 | 1890 | ஜப்பான் | 800 | 290 |
| இந்தியா | 4200 | 2320 | அமெரிக்கா | 570 | 150 |
| வங்காளதேசம் | 11000 | 3670 | | | |

Source:- Statesman's year Book 1977/78

இவற்றினை அடிப்படையாகக் கொண்டு நோக்கின சிசு இறப்பு. ஆயுட்காலக் குறைவு என்பன புலனாகின்றது. விருத்தியடைந்த நாடுகளில் சிசு இறப்பு 1000 : 27 ஆகவும். விருத்தியடைந்து வரும் நாடுகளில் இது 1000:152 ஆகவும், இலங்கையில் 1000:46 ஆகவும் உள்ளது. இத்தன்மை விருத்திக் குறைவையே எடுத்துக் காட்டுகின்றது.

குறைவிருத்தியம்சங்களில் போதிய ஊட்டச் சத்தின்மையும் ஒன்றாகும். உலக உணவுப் பரம்பலில் காணப்படும் குறைபாடே காரணமாகும்.

| சராசரி புரத விநியோகம் | (கலோரி) தலாசக்தி நுகர்வு | (நாள்) தலைக்குரிய புரதம் நுகர்வு |
|---|---|---|
| விருத்தியடைந்த நாடு | 3150 | 86·4% |
| குறைவிருத்தி நாடு | 2200 | 57·4% |
| இலங்கை | 2720 | 58‘2 |

மூலம்:- பொருளியல் நோக்கு மார்ச் 1979.

இவ்வாறான சமனற்ற உணவுப் பரம்பல் இந்நாடுகளை மேலும் வறுமைக் கோட்டிலேயே வாழவைக்கின்ற . விருத்தியடைந்த நாட்டில் தனிநபர் நாள்நுகர்வு 650 kg ஆகக் காணப்பட வறிய நாடுகளில் 180 kg ஆக உள்ளது. இலங்கையில் 125 kg ஆகும். இவ்வாறான குறைவுற்ற உணவூட்டம் இந்நாடுகளின் மனிதவலு விருத்தி உழைப்புத்தன்மை என்பவற்றில் தாக்கத்தை உண்டு பண்ணி நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிப்பதாக உள்ளது.

இந்நாடுகளில் வீட்டுவசதிக்குறைவு, சேரி உறைவிடம் என்பனவும் குறைவுற்றே காணப்படுகிறது.

மொத்தக் குடித்தொகையில் சேரியில் வாழ்வோர் தொகை ( % )

| | |
|---|---|
| கல்கத்தா | 33% |
| கராச்சி | 27% |
| கொழும்பு | 44% |
| மணிலா | 35% |
| ஜகார்த்தா | 25% |

Sources : U. N. World Demographic year Book 1977


வாழ்க்கைத் தரக்குறைவு உற்பத்தியைக் குறைக்கும் என்ற "குன்னர் மிர்டால்" கருத்துப்படி கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி என்பவற்றின் குறை இந்நாடுகளின் பொருளாதாரத்தைக் குறைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான காரணிகளின் ஒருங்கிணைவே குறைவிருத்திநாடுகளின் வறுமைக்குக் காலாக அமைந்து அந்நாடுகளைச் சுழற்சியில் இயங்கும் வகையில் அதிகரித்த குடித்தொகை, தங்கிவாழ்வோரின் அதிகரிப்பு சிசுமரண அதிகரிப்பு தாழ் கல்வி, சமனற்ற வருமானப்பகிர்வு முதற் பொருள் ஏற்றுமதி, மிகுதியான ;நுகர்வு குறைவான வருவாய் இவைகாரணமாக இடம் பெறும்சேமிப்பின்மை என்பவற்றின் கூட்டாகி வறுமை வட்டத்திற்குட்படுத்துகின்றன. இவையாவும் இலங்கையிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

நச்சுவட்டம்




இவற்றுடன் ஒருநாட்டின் ஸ்திரமற்ற அரசியல் நிலமையும் நாட்டின் குறை விருத்திக்குக் காரணமாகும். இவ் வகையில் இலங்கையை நோக்கின் இங்கு இடம் பெறும் அரசிலமைப்பு இடப்படும் கொள்கைத் திட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்திப் பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றன. உள்நாட்டில் இடம் பெறும் சண்டைகள், இனப்பாகுபாடுகள் நாட்டின்வருவாயைஉறிஞ்சுவதாகஉள்ளது. குறைவிருத்தி நாடுகளில் 1977ல் சுகாதார செலவீட்டில்6மடங்கும் கல்விச் செலவீட்டில் 2 மடங்கும் இராணுவஆயுத செலவீட்டுக்குட்பட்டமைகுறிப்பிடத்தக்கது.

எனவே இவ்வாறு நாம் குறை விருத்தியம்சங்களை நோக்கும்போதும் நாட்டின் வளர்ச்சி நிலை எவ்வளவு என அறிவதற்கு செய்திப் பத்திரிகை வாசிப்போர் தொகை வாகன வசதியுடையோர் தொகை இவற்றின் நுணுக்கமாக நோக்குகின்றபோதே குறை விருத்தியை மேலும் அறிய முடிகின்றது. மேற் கூறியவை கொண்டு இலங்கையை நோக்குகின்றபோது இலங்கை முற்றாகக் குறைவிருத்தி நாடு என்ற வகைக்குள் அடக்க முடியாதுள்ளது. கல்வி சுகாதார வசதி என்பவற்றை நோக்கின் இலங்கை ஓர் விருத்தியடைந்து வரும் நாடு என்ற வகைக்குள் அடக்கலாம்.

**Reference**


1. Population of Srilanka 1977/78. Department of Census and Statistics.
2. Richards P. J. Employment and Unemployment in Ceylon. Development Centre of the Organization for Economic Co-operation. Paris 1971
3. Robinson H, Economic Geography M. & E. Hand Book Series 1968
4. Sarkar N. K, The Demography of Ceylon, Government Press. Colombo 1957
5. Statistical Abstract of Ceylon 1977
6. Statistical Year Book 1975, 1981
7. The Statesman's Year Book 1980/81
8. U. N. World Demographic Year Book 1977
9. Youth, Land and Employment, Marga Institute Colombo 1974
10. இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 1971
11. பொருளியல் நோக்கு — மார்ச் 1976, ஜூன் 1977, மே 1976 ஏப்ரல் 1980
12. ஜெயரட்ணராஜா, ஆர். இலங்கைப் பொருளாதாரம் திருமகள் அழுத்தகம், சுன்னாகம் 1978




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்தமான தொழில் நுட்பமும் விருத்தியடைந்துவரும் நாடுகளும்

செல்வி சாராதா சுப்பிரமணியம்

அபிவிருத்திப் பிரச்சனைகளை மிகவும் முன்னேறிய தொழில் நுட்ப முறைகளைக் கொண்டு ஆராயாது மக்களின் அசல் தேவைகளையும், கிடைக்கக்கூடிய வளங்களையும் கருத்தில் கொண்டு ஆராயும் ஓர் அணுகு முறையின் விளைவாக ஏற்பட்டதே பொருத்தமான தொழில் நுட்பம். வேறுபட்ட பொருளாதாரங்களுக்கும் பிரதேசங்களுக்கும், கலாச்சாரங்களுக்கும் வேறுபட்ட தொழில் நுட்ப முறைகள் பொருந்தும் என்பதையும், அபிவிருத்தி மனித தேவைகளின் அடிப்படை என்பதையும் இவ் அணுகுமுறை ஏற்றுக் கொள்கின்றது.

தொழில் நுட்பப் பொருத்தப்பாட்டை பொறுத்தவரை குறிப்பிட்ட இடத்துக்கு பொருத்தமான தொழில் நுட்பம் இன்னோர் இடத்துக்கு பொருத்தமற்று இருக்கலாம். இவ்வகையில் இன்றைய உலக நாடுகளின் உயர் தொழில் நுட்பம், இடைத்தரத் தொழில் நுட்பம், பொருத்தமான தொழில் நுட்பம் என்பன அவ்வவ் நாடுகளின் சமூகப் பொருளாதார அபிவிருத்தி நிலைமைகளுக்கேற்ப பிரயோகிக்கப்படுகின்றன. இத்தகைய நோக்கில், கனிப்பொருள் வளம், மனித வளம், இயற்கை வளம் என்பவற்றை தகுந்த முறையில் பயன்படுத்தாது இருமைத் தன்மையுடைய பொருளாதார அமைப்பையும் பின் தங்கிய சமூக அபிவிருத்தியையும் கொண்டுள்ள விருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு பொருத்தமான தொழில் நுட்பமே ஏற்றது.

பொருத்தமான தொழில் நுட்பத்தின் தேவை என்பது ஓர் வளர்ச்சியடைந்து வரும் சமூகத்தில் அதன் விருத்திக்குத் தடையாகவுள்ள எல்லாத் துறைகளிலும் அதன் விருத்திக்கான எல்லா நோக்கங்களிலும் குறித்த மாற்றங்களைக் கொண்டு வரும்போது ஏற்படுகின்றது. உள் நாட்டில் கிடைக்கப்பெறும் வளங்களின் பயன்பாட்டைக் கூட்டும்போது, உள்நாட்டில் அரிதாகவுள்ள வளங்களின் பயன்பாட்டைக் குறைக்கும்போது, உள்நாட்டு சமூகப் பொருளாதார சூழ்நிலைகளுடன் பொருந்தும் வகையில் திட்டமிடுவோரின் சிந்தனையில் மட்டுமன்றி அசல் பிரச்சனை ஒன்றைத் தீர்க்க முற்படும்போது. இப்பொருத்தமான தொழில் நுட்பம் அவசியமாகிறது. இத் தொழில் நுட்பத்தைப் பிரயோகிப்பதில் வளர்ந்துவரும் அச் சமூகத்தில் எழும் பிரச்சனைகள் இதற்கு அச்சுறுத்தலாக அமையலாம். இவ்வகையிலான தடைகளை நீக்கி பொருத்தமான முறையில் அபிவிருத்திக்கான தொழில் நுட்பத் தேர்வுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

விருத்தியடைந்துவரும் நாடுகள் தமது பிரதேச வளர்ச்சி கருதி அல்லது பொருளாதார விருத்தி கருதி பொருத்தமான தொழில் நுட்பத்தைப் பிரயோகிக்கும்போது தமது விருத்தி நோக்கங்களையும், செயல் முறைகளையும் கவனத்தில் கொண்டு நெருக்கடிகளையும் பிரச்சனைகளையும் சமாளிக்கக் கூடிய வகையில் தொழில் நுட்பத்தை மேற்கொள்ள முயல்கின்றன. எளிதானதும், செலவு குறைந்ததும் உள் நாட்டில் உற்பத்தி செய்யப்படக்கூடியதும் தொழில்களைப் பறித்துக் கொள்வதற்குப் பதிலாக கூடிய வேலைவாய்ப்புக்களை வழங்க வல்லதுமான தொழில் நுட்பமே விருத்தியடைந்துவரும் நாடுகளின் இன்றைய தேவையாகும். இறக்குமதி செய்யப்படும்

Miss. Saratha Subramaniam B. A. Hons (Jaffna)
Temporary Tutor, Department of Geography.
University of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் நுட்பங்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொருத்தமானதாக இருப்பதில்லை. பல வளர்முக நாடுகள் செல்வந்த நாடுகளில் இருந்து தொழில் நுட்பங்களை இறக்குமதி செய்வதில் எதிர்நோக்கும் பிரச்சனைகளை உணர்ந்துள்ளனவாதலின், மாற்றீடாக உள்ளூர் தொழில் நுட்பங்களை விருத்தி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

பெரும்பாலான விருத்தியடைந்து வரும் நாடுகளின் இருமைப் பொருளாதார நிலையில் நவீனத்துவம், பாரம்பரியம் என்பன இணைந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் இந்நாடுகளுக்குப் பொருந்தாத மேற்கத்தைய மாதிரியைப் பின்பற்றுகின்ற நவீனத்துவம் என்பது நீங்கி அவ்வவ் நாடுகளின் விருத்திக்கேற்ற வகையில் அமையவும், பின்தங்கிய பாரம்பரிய துறையை வளர்ச்சியடையச் செய்யவும் ஏற்ற வழிமுறையாக பொருத்தமான தொழில் நுட்ப பிரயோகம் அமைகின்றது. உதாரணமாக யப்பானில் உற்பத்தி செய்யப்படும் பண்ணைக்கான கருவிகள் அந்நாட்டின் சிறிதளவான பண்ணைகளுக்கும் விவசாய முறைகளுக்கும், தரைத்தோற்றம் மண் வளத்திற்கும் பொருத்மானதாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

விருத்தியடைந்துவரும் நாடுகளிடையே பொருத்தமான தொழில் நுட்பம் என்பது எவ்வகையில் பின்பற்றப்பட வேண்டும் என்பது பற்றிக் காலத்துக்குக் காலம் பல கருத்து வேறுபாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. முதல், தொழிலாளர்வலு என்பன உத்தம அளவில்பயன்படுத்தப்படுதல்பொருத்தமான தொழில் நுட்பம் எனப்படுகிறது. இது பொருள், இயந்திரம் செயல்முறை என்பவற்றின் பொருத்தமான இணைப்பாக இருக்கும்- இந் நாடுகளின் சமூகப் பொருளாதார சூழ்நிலையிலே குறைந்த முதலையும் நிறைந்த வேலையாட்களையும் பயன்படுத்துதல் பொருத்தமான தொழில் நுட்பத்தின் கீழ் அடங்கும். வேறு வகையில் சூழலை மாசுபடுத்தாத கைத்தொழில்களை விருத்தி செய்தல் இத் தொழில் நுட்பத்தை சாரும் எனவே இதன்பிரயோகம் என்பது அந்தந்த நாடுகளின் சமூகப் பொருளாதார வளர்ச்



சியையும் தொழில் நுட்பத் தெரிவையும் பிரயோக முறையையும்பொறுத்துள்ளது.

இப் பொருத்தமான தொழில் நுட்பப் பிரயோகத்தில் வளர்முகநாடுகள் பல பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றன. டோம்ர ஹறேட் ( Domer Harrod ) என்பவர் தமது ஆய்வில் தொழில் நுட்ப தெரிவில் ஏற்படும்பிரச்சனைகளை விளக்கியுள்ளார், இவர் வளர்முக நாடுகளின் பொதுவான பண்புகளைக் கவனத்தில் கொண்டு சில முடிவுகளைத் தெரிவித்தார். இவரின் படி வெளிநாட்டு மூலதனம் என்பது தொடர்ச்சியான அபிவிருத்திக்கும் உதவாது இறுதி மூலதனமாகவும் அமையாது. மிகக் குறைந்த முதலீட்டு நிலைமைகள் அதிகரிக்கும் குடித்தொகையின் தேவையைப் பூர்த்திசெய்யக்கூடியனவா? என்பதும் பெறப்படும் மேலதிக வெளிநாட்டு மூலதனம் பொருளாதார விருத்திக்குப் போதுமானதா? என்பதும் தொழில் நுட்பத் தெரிவுடன் தொடர்பான பிரச்சனைகள் என இவர் எடுத்துக் காட்டினர்.

இன்றைய வளர்முகநாடுகளில் மூளைசாலிகள் வெளியேற்றம் என்பது இந்நாடுகளின் பொருளாதாரப் பின்னடைவுக்குப் பிரதான காரணமாயுள்ளது. இச் சூழ்நிலையில் பொருத்தமான தொழில் நுட்பத்தைப் புகுத்துவது என்பது திறமையாளர்களின் வெளியேற்றத்தால் அதனைப் புரிந்துகொள்பவர்கள் இல்லாத நிலையில் பிரச்சனைக்குரியதாக அமைகிறது. கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வெளிநாடுகளில் தங்கி நிற்கும் வளர்முகநாடுகள் அந்நாடுகளின் சுயநலநோக்கிற்கு ஓர் வடிகாலாகவே மதிக்கப்படுகின்றன.

வளர்முக நாடுகளின் விவசாயம்சார்ந்த தொழில்நுட்பப் பிரயோகத்தில் ஏற்படும் பிரச்சனைகளை நோக்கின் பெரும்பாலான நாடுகள் விவசாயத்தில் குறிப்பாக கிராமிய விவசாயத்துறையில் தங்கியிருப்பதனுல் இதன் முக்கியத்துவம் அதிகமாக உணரப்பட்டுள்ளது. உதாரணமாக இலங்கையின் கிராமிய அபிவிருத்தி பற்றிய நோக்கில் ஜெகுயர் (Jequier. U. S. A.) என்பவர் கிராம, விவசாய அபிவிருத்தி நடவடிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலேயே இப் பொருத்தமான தொழில் நுட்பம் கூடுதலான தொடர்பினைக் கொண்டுள்ளது என்றார். இவ்வகையில் இதன் பிரச்சனைகளை நோக்கின் இன்று பெரும்பாலான நாடுகளின் விவசாய விஸ்தரிப்புத் திட்டங்கள் போதியளவு மாற்றங்களுக்குட்படாது வேறுபட்ட சூழலைக் கொண்ட இன்னொர் நாட்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டவையே. சில நாடுகளின் தாராள இறக்குமதி நடவடிக்கை என்பது ஒருபுறம் மூலதன உள்வரவையும் இயந்திர சாதனங்களின் உள்வரவையும் அதிகரித்தபோதும் நாட்டின் உற்பத்தி நடவடிக்கைகளில் சுய தொழில் நுட்ப பயன்பாட்டையும் சுய சார்பான விவசாயப் பொருளாதார வளர்ச்சியையும் இது தடைசெய்வதாக உள்ளது.

இதேசமயம் இந்நாடுகள் தமது சொந்தத்தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதில் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி சர்வதேச ரீதியில் பல கருத்து வேறுபாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. வளர்முக நாடுகளில் தீர்மானங்களை எடுக்கும் பலரின் சிந்தனை, உள்ளூர்த் தொழில் நுட்பங்களை அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக இறக்குமதி செய்யப்பட்ட தொழில் நுட்பங்களை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக இந்திய தேசிய ஆய்வுகூடத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட கிருமிநாசினி, இந்திய விஞ்ஞான கைத்தொழிலாராய்ச்சிக் கழகத்தினால் உற்பத்திசெய்யப்பட்ட 'ஸ்வராஜ்' உழவு இயந்திரம் என்பன அவ்வவ் அமைச்சுகளினால் புறக்கணிக்கப்பட்டதுடன் இவை பிற நாட்டு நிறுவனங்களுடன் கூட்டு முயற்சியையும் ஏற்படுத்திக் கொண்டன,

அண்மைக் காலங்களில் தொழில் நுட்ப இடமாற்றம் ( Technology Transfer ) அதிக கவனத்திற்குள்ளாகி வருகின்றது. அதிகமாக வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து வளர்ச்சியடைந்துவரும் நாடுகளுக்கு பல்வேறு வழிகளில் தொழில் நுட்ப இடமாற்றம் நிகழ்வது குறிப்பிடத்தக்களவில் காணப்பட்டாலும் இது 3 ஆம் உலக நாடுகளில் பெருமளவுக்கு வெற்றியளிக்கவில்லை. பாரம்பரியமாகவளர்ச்சியடைந்தநாடுகளில் இருக்கின்ற தொழில் நுட்பத்தை மாற்றுவது கடினமான செயலாகும். உதாரணமாக இந்தியாவில் சில மாநிலங்களில் கைகளால் செய்யப்படும். உடையே சிறப்பானது என மதிக்கப்படுகிறது.

தொழில் நுட்ப இடமாற்றம் என்பது பல்வேறு வடிவங்களில் இடம்பெறுகின்றது, மூலதனம், நடுத்தரப் பண்டங்கள், கூடிய வினைத்திறன்மிக்க மனித ஆற்றல், செயல்முறைகள் என்ற வகையில் இதன் கொடுக்கல், வாங்கல் அமைந்துள்ளன. இந் நிலையில் பூரணமான தேசிய, பொருளாதார சமூக அபிவிருத்தியை எதிர்நோக்கும் ஒவ்வொரு நாடும் தொழில் நுட்ப இடமாற்றத் துறையில் சுயமான தீர்மானங்களை எடுத்தல் அவசியமானதாகும். இந் நாடுகளின் தொழில் நுட்ப இடமாற்றத்துக்கும் அபிவிருத்திக்குமான கட்டுக்கோப்பினை உறுதிப்படுத்தும் வகையில் இம்மாற்று நடவடிக்கைகள் அமைதல் வேண்டும்.

இன்றுவரை இந் நாடுகள் தொழில் நுட்பங்களைப் பெற்றுக் கொள்வதிலும் அபிவிருத்தி செய்வதிலும் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பெருமளவுக்குத் தீர்க்கப்படாமலே இருந்துவருகின்றன. இந் நாடுகளுக்கு தொழில்நுட்பங்களை வழங்கும்மேற்கத்தைய அரசாங்கங்களின் நிபந்தனைகள் கட்டுப்பாடுகள் வளர்முக நாடுகளின் அபிவிருத்தியில் பாதிப்பை ஏற்படுத்துவனவாகவுள்ளன. இந் நிலையில் இந்நாடுகள் தமது சொந்தத் தொழில் நுட்பத்தை விருத்தி செய்வதிலேயே அதிக அக்கறை செலுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ''உதாரணமாக அபிவிருத்திக்குப் பயன்படுத்தக்கூடிய மதிப்புவாய்ந்ததும், பெறுமதியுள்ளதுமான வளம் மனித வளமே'' என்ற கோட்பாட்டினை முன்மாதிரியாகக் கொண்டு சுதேச தொழில் நுட்ப விருத்தியை ஊக்குவித்த நாட்டிற்கு சிறப்பான உதாரணமாக சீனவைக் கூறலாம்.

வளர்முக நாடுகளின் விவசாய விஸ்தரிப்பு சேவைகள், ஆலோசனைகள் என்பன இந் நாடுகளின் விவசாயிகளுக்கு ஏற்ற தொழில் நுட்பக்கல்வி முறையாக மாற்றியமைக்கப்படவேண்டும். இங்கு சிறியளவிலான கைத்தொழில்கள், கைவேலைப்பாடுகள் என்பவற்றில் தொழில் நுட்ப மாதிரிகளைப் புகுத்தக் கூடியதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. இந் நிலையில் கருவிகள் மூலப் பொருட்கள், பொருள் மாதிரிகள், தரக்கட்டுப்பாடு போன்ற எல்லாவற்றிலும் முன்னேற்றம் ஏற்படும்போதுதான் இவை ஓரளவு உற்பத்திக் கைத்தொழிலுடன் போட்டியிடக் கூடிய நிலையை அடைகின்றன. இந் நிலையில் இங்கு பொருத்தமான தொழில் நுட்பவியலை நன்கு நிலைப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம். இவ்வகையில் அபிவிருத்தி நோக்கில் தொழில்நுட்பத் தேவைகளை இனம் கண்டு அவற்றை மதிப்பீடு செய்து குறித்த சமூக பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப பொருத்தமான முறையில் அவற்றைப் பிரயோகிப்பதன் மூலம் குறித்த பொருளாதார விருத்தியை அடையமுடியும்.

**References :**


1. Samuel M. Rosenblatt — Technology and Economic Development. A Realistic perspective.
2. Bhattasali B. N. Transfer of Technology Among the Developing Countries
3. Karmantha — March 1977
4. Economic Review — Oct. 1979




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுசீரமைக்கப்பட்ட "ஹொண்டா"

மோட்டார் சயிக்கில்களும், மோட்டார் சயிக்கில்

உதிரிப்பாகங்களும்

இறக்குமதியாளர்களும்

விநியோகஸ்தர்களும்

**காந்தா மோட்டோஸ்**

54, ஸ்ரான்லி ரோட்,

யாழ்ப்பாணம்

*With Best Compliments*

*For*

**Geographical Society**

**University of Jaffna**

**A. K. S. & Sons**

**JEWEL HOUSE**

**JAFFNA**

*With Best Compliments*

*For*

**Geographical Society**

**University of Jaffna**

**KALAIVANI JEWELLERS**

**111, B KASTURIAR ROAD**

**JAFFNA**

Prop : **N. Sivasubramaniam**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக

புவியியல் கழகத்தின் வளர்ச்சிக்கு

எமது ஆ ரவுகள்

**யப்பான் ஜுவலர்ஸ்**

க. ஆறுமுகம்பிள்ளை அன் சன்

64, கன்னாதிட்டி

யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருத்தியும் குடித்தொகை நிலைமாற்றக் கோட்பாடும்

செல்வி. பங்கயச்செல்வி சிவபாதசுந்தரம்

மனித சமூகங்களிடையே மாற்றங்களை ஏற்படுத்துவதுடன் மனித எண்ணங்களிலும் மனிதசமூக நிறுவனங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியதன் செயற்பாடே விருத்தியாகும். பொதுவாக இவ்விருத்தியும் குடித்தொகை நிலைமாற்றமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு விளங்குகின்றன. 19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இடம் பெற்ற குடித்தொகை அமைப்பு மாறுபாடுகளைக்கொண்டு விபரணமுறையில் குடித்தொகை நிலைமாற்றம் என்பது படிமுறை அமைப்பின் அடிப்படையில் கோட்பாட்டு ரீதியாக விளக்கப்பட்டது. ஓர் நாட்டின் விருத்திக்கு ஏற்ப எவ்வாறு குடித்தொகையிலும் மாற்றம் ஏற்படுகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. எனவே எந்த ஒரு நாடும் அதன் விருத்திப்பாதையில் முன்னேறத் தொடங்கும் போதும் இக்குடித்தொகை நிலைமாற்றக் கோட்பாட்டின் ஒவ்வோர் படிநிலையையும் தாண்ட வேண்டியதாக உள்ளது. இன்று விருத்தியடைந்த நாடுகள் என்று கூறப்படும் நாடுகளில் இக்கோட்பாட்டின் வளர்ச்சிக்கட்டங்களை முழுமையாக அவதானிக்கக் கூடியதாக இருக்கும். அதே சமயம் வளரும் நாடுகளை இவற்றின் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களிலும் அடையாளம் காணக்கூடியதாக உள்ளது.

விருத்தி என்பது உற்பத்தி அமைப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதுடன், உற்பத்தியும் இலாபமும் சமனாக பகிர்ந்தளிக்கப்படுவதும இவை மேலும் உற்பத்தியை அதிகரிக்க உற்பத்தியமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், சமூகபொருளாதார இலக்குகளுக்கேற்ப அடிப்படை அம்சங்களை திடகாத்திரமாக்கும் போதும், மூலவளம் உச்சநிலையில் பயன்படுத்தப்படுவதுடன் மூலவள ஒதுக்கலில் திட்டமிடல் பயன்படுத்தப்படும் போதும் சிறந்த நிர்வாகத்துடன் கூடிய வளர்ச்சிஏற்படுமேயாயின் அது விருத்தி எனக்கூறப்படுகின்றது. இவ்விருத்தி பற்றி யுனெஸ்கோ கூறும்போது "பொருளாதார சனத்தொகை காரணிகளில் மட்டுமன்றி அவர்களது சமூக பண்பாட்டு,ஒழுக்க நெறி ஆகிய காரணிகளிலும் மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்படவேண்டும்" என வரைவிலக்கணம் செய்துள்ளது. அண்மைக் காலத்தில் இவ்விருத்தியை தலாவீத வருமானத்துடன் சமூகக் குறிகாட்டிகளையும் இணைத்துநோக்கி அளவிடப்படல் வேண்டும் எனவலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இன்று உலகநாடுகளை விருத்தியின் அடிப்படையில் விருத்தியடைந்த நாடுகள், விருத்தியடைந்துவரும் நாடுகள் எனஅடையாளம் காணக்கூடியதாக உள்ளது. பேராசிரியர் டட்லி சியர்ஸ் தலாவீத வருமானம் 500 டொலருக்குக் குறைவாயுள்ள நாடுகளை விருத்தியடைந்துவரும் நாடுகள் என்றும் ஏனையவற்றை விருத்தியடைந்த நாடுகள் எனவும் கூறியுள்ளார். இன்று விருத்தியடைந்த நாடுகள் என்றுகூறப்படும் கனடா, ஐக்கிய அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா போன்ற ஒருசில நாடுகளும் ஒருகாலகட்டத்தில் குறைவிருத்தி நிலையில் இருந்து விடுபட்டு இன்று விருத்தி நிலையில் அமைந்து காணப்படும் நாடுகளாக உள்ளன.

குறைவிருத்தி நிலைமைக்கு விரைவான குடித்தொகை வளர்ச்சியே முக்கிய காரணம் எனக் கூறப்படுகின்றது. ஆயினும் இக் கருத்தை எதிர்ப்பவர்கள் குடித்தொகை வளர்ச்சி உண்மைக் காரணமல்ல, சமனற்ற குடித்தொகைப் பரம்பல், உணவுப் பங்கீட்டில், நுகர்வில் உள்ள குறைபாடு என்பவை முக்கிய காரணம் என வாதிடுகின்றனர். மேலும் "மக்கள் நலனைக் கவனித்தால் சனத்தொகை தன்னைத்தானே கவனித்துக்கொள்ளும்" என்றும் குடித்தொகை வளர்ச்சிக்கு "அபிவிருத்திதான் மிகச்சிறந்த கருத்தடை" என்றும் இதற்குச் சார்பான சுலோகங்கள் பல எழுப்பப்பட்டன. எவ்வாறாயினும்

---

Miss. P· SIVAPATHASUNDRAM, B A. Hons. (Jaffna)
Temporary Tutor,
Department of Geography,
University of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியும் குடித்தொகையும் ஒன்றில் ஒன்று தங்கி இருப்பதனால் இவை ஒன்றை ஒன்று பாதிக்கின்றன என்பதில் ஐயமில்லை இதனால் குறைவிருத்தி நிலையில் இருந்து ஓர் விருத்தி நிலைக்குச் செல்லும் போது அதன் குடித்தொகை நிலைமைகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய மாற்றங்களையே பல வளர்ச்சிக் கட்டங்களாக குடித்தொகை நிலை மாற்றக் கோட்பாடு எடுத்து விளக்குகின்றது.

குடித்தொகை நிலைமாற்றக் கோட்பாடு உயர்வான பிறப்பு, இறப்பு நிலைமைகளிலிருந்து குறைவான பிறப்பு இறப்பு வீதத்துக்கு மாறுகின்ற நிலைமையையே எடுத்துக் காட்டுகின்றது. அதாவது கால ஓட்டத்தில் வாழ்நிலைப்புள்ளி விபரங்களில் ஏற்படும் தொடர்ச்சியான மாற்றத்தையே எடுத்து விளக்குகின்றது. ஆரம்பகால மரபுரீதியான மக்கள் வாழ்க்கையில், இறப்பு வீதமும் பிறப்பு வீதமும் அதிகமாக இருந்தன. இன்றைய நவீனசமுதாயத்தில் மாறாக பிறப்பு வீதம், இறப்பு வீதம் ஆகிய இரண்டும் குறைந்துள்ளன. இவ்விரு காலப்பகுதிக்கும் இடைப்பட்ட காலத்தில் குடித்தொகைப் புள்ளியியலில் ஒருமாற்றநிலை ஏற்பட்டு இருக்கின்றது. இம்மூன்று கருத்துக்களின் சாராம்சத்தையே குடித்தொகை நிலைமாற்றக் கோட்பாடு விளக்குகின்றது. இககோட்பாடு முதன்முதல் ரொபின்சன் என்பவரினால் எடுத்துக்காட்டப்பட்ட போதும் இவரைத் தொடர்ந்து பல அறிஞர்களால் இக்கோட்பாடு பல்வேறு நாடுகளிலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

குடித்தொகை நிலைமாற்றக் கோட்பாடு நான்கு படிமுறை வளர்ச்சிக் கட்டங்களைக் கொண்டு காணப்படுகின்றது. எந்த ஓர் நாட்டினதும் விருத்தியுடன் தொடர்பு படுத்திப்பார்க்கும் போது இக்கால கட்டங்களை ஓரளவிற்கு அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. குடித்தொகை நிலைமாற்றக் கோட்பாட்டின் முதலாவது கட்டத்தில் உயர்வான பிறப்பு இறப்புக்கள் இடம்பெறுகின்றன. நவீன சுகாதாரசேவை, போக்குவரத்து என்பன இல்லாதிருந்த காலகட்டத்தில் உயர் இறப்புவிகிதம் தடுக்க முடியாததாக இருந்தது. இதற்கேற்ப பிறப்புவிகிதத்தையும் அனுமதிக்கும் வகையிலேயே இக்கால சமுதாயத்தின் பெறுமதிகளும் அமைந்திருந்தன. இதனால் அதிகஇறப்பு, பிறப்புக்களின் நிகழ்வில் குறைவான சனத்தொகையே பெறுபேறாகின்றது. இரண்டாவது காலகட்டத்தில் மரபுரீதியான சமுதாய நிறுவனங்களின் கட்டுப்பாடுகளினால் கருவளம் உயர் மட்டத்திலேயே காணப்பட இறப்பு மிகவேகமாக வீழ்ச்சியடைகின்றது. இதன் காரணமாக இக்காலகட்டத்தில் குடித்தொகை வெடிப்பு ஏற்படுகின்றது. மூன்றாவது காலகட்டத்தில் ஏற்கெனவே கீழ்கட்டத்தை அடைந்திருந்த இறப்பு வீதத்துடன் சமப்படும் வகையில் பிறப்பு வீதமும் படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது. உயர் பிறப்பு வீதத்துக்கு ஆதாரமாக அமைந்த மரபுரீதியான நிறுவனங்கள் பலவீனமடையவும், குறைந்த மட்டத்திலான இறப்பு வீதத்துக்கு ஆதாரமாக உள்ள நிறுவனங்கள் வளரவும் சிறிதுகாலம் செல்லவேண்டியதாக உள்ளதால், பிறப்புவீதவீழ்ச்சியானது ஏற்கனவே ஏற்பட்ட இறப்புவீத வீழ்ச்சியின் வேகத்தை விடகுறைவான வேகத்திலேயே இடம்பெறுகின்றது. இக்காலகட்டத்தில் ஏற்படும் சமூகபொருளாதார மாறுபாடுகளின் விளைவாக கருவளம் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து வலுப்பெறுகின்றது. இதனால் சனத்தொகை அதிகரிப்பு வேகம் படிப்படியாக குறைவடைந்து செல்கின்றது. இறுதிக்கட்டத்தில் குறைந்த பிறப்பு, இறப்பு வீதங்கள் தொடர்ச்சியாக அக்குறைந்த மட்டத்திலேயே நிலைபெற்றுவிடும். அதாவது சனத்தொகை வளர்ச்சி தொடர்ச்சியாக ஒரே மட்டத்தில் முதலாவது கட்டத்தைப் போன்று குறைவான மட்டத்திலல்லாது உயர்வான மட்டத்தில் நிலைபெற்றுவிடும்.

இக்கோட்பாடானது பொருளாதார விருத்தியினடிப்படையில் படிப்படியாக விருத்தி ஏற்படும்போது குடித்தொகையில் ஏற்படக்கூடிய மாற்றங்களையே வலியுறுத்துகின்றது. இக்கோட்பாட்டின் செல்வாக்கின் வலிமைத்தன்மையை விருத்தியடைந்த நாடுகளில் முழுமையாக அவதானிக்கக் கூடியதாக உள்ளதுடன் குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரையில் அவை அண்மைக்காலம் தொட்டே விருத்திநோக்கி செல்லும் நாடுகளாக இருப்பதால் இவற்றை முன்னுள்ள காலகட்டங்களிலேயே அடையாளம் காண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகின்றது. விருத்தியடைந்து வரும் நாடுகளில் குறிப்பாக ஆபிரிக்க நாடுகளில் சில இன்றும் முதலாவது கட்டத்திலேயே காணப்படுகின்றன. அதேசமயம் இந்தியா 1921ம் ஆண்டுக்கு முன்னரும் இலங்கை 2ம் உலக மகாயுத்தம் வரையும் முதலாவது நிலையிலேயே காணப்பட்டன. இன்று விருத்தியடைந்த நாடுகள் என்று கூறப்படும் மேற்கு ஐரோப்பா போன்ற நாடுகள் பொதுவாக 1850 வரையான காலப்பகுதி வரை முதலாவது நிலையிலேயே காணப்பட்டன என்று கூறப்படுகின்றது. பின்னர் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சி, அதன் மூலம் ஏற்பட்ட சமூக பொருளாதார விருத்தி காரணமாக 1850-1890 வரையான காலப்பகுதியில் இரண்டாவது கட்டநிலையில் இருந்தவை 1890 – 1910 வரை 3வது கட்ட நிலையில் காணப்பட்டன. இன்று இவை விருத்தியுற்ற நிலையில் வருடாந்த குடித்தொகை அதிகரிப்பு வீதம் 1.1 வீதம் என்ற ஒரே சீரான அதிகரிப்பு வீதத்தில 4 வதுகட்டத்தில்அமைந்துகாணப்படுகின்றன.

விருத்தியடைந்துவரும்நாடுகளில் பெரும்பாலானவை 1950 வரை முதலாவது கட்டத்திலேயே காணப்பட்டன. இன்று இவை வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் சர்வதேச உதவியின் மூலம் விருத்திப்பாதையில் செல்வதனால் குடித்தொகை நிலைமாற்றக் கோட்பாட்டின் இரண்டாவது, மூன்றாவது நிலைகளை அடைந்துள்ளன. ஆயினும் விருத்தியடைந்த, விருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு இடையில் குடித்தொகை நிலைமாற்றப் போக்கு ஒரேமாதிரி அமைந்து காணப்படவில்லை. அதாவது விருத்தியடைந்த நாடுகளில் இறப்புவீதக் குறைவு படிப்படியாக சமூக பொருளாதார விருத்தியுடன் தொடர்பாக காணப்பட விருத்தியடைந்து வரும் நாடுகளில் சடுதியாக ஏற்பட்ட அபிவிருத்தியுடன் அபிவிருத்தி மட்டத்துடன் மிகக்குறைந்த தொடர்பு கொண்டதாகவும் உள்ளது. இதற்கு விருத்தியடைந்த நாடுகளின் உதவியுடன் பெறப்பட்ட சமூக நலன் புரிசேவைகள் அதிகரிக்கப்பட்டமையே முக்கிய காரணமாகும். அல்ஜீரியா, இலங்கை, மொறிசஸ் போன்ற நாடுகள் மேற்கு ஐரோப்பாவில் ஒரு நூற்றாண்டு காலப்பகுதியில் இறப்புக்களால் ஏற்பட்ட குறைவிலும் பார்க்க இந்நாடுகள் 2ம்உலகமகாயுத்தத்தின் பின்னுள்ள 103 வருடகாலப்பகுதியில் கூடுதலான அளவிற்கு குறைவான இறப்புக்களை கொண்டிருந்தன. கொங்கோ,குவைத, திரினிடாட், போட்டோறிக்கா போன்ற நாடுகளில் இளமைப்பருவம், வாழும்காலம் என்பன 30 வருடத்தில் இருந்து 50 வருடமாக நீடிக்கப்பட்டிருப்பதனால் இந்நாடுகளிலெல்லாம் குடித்தொகை மிகையதிகரிப்பு காணப்படுகின்றது.

விருத்தியடைந்துவரும் நாடுகளில் ஒன்றான இலங்கையின் குடித்தொகை நிலைமாற்றத்தை விருத்தி நிலைமைகளுடன் தொடர்புபடுத்தி நோக்கும் போது பல்வேறு காலகட்டங்களையும் அவதானிக்க முடிகின்றது. இலங்கையின் 110 வருடகால (1871 – 1981) குடித்தொகையின் சராசரி வளர்ச்சிப் போக்கு வீதங்களை எடுத்து நோக்கும் போது அதன் தன்மை குடித்தொகை நிலைமாற்றக் கோட்பாட்டு அமைப்பின்படி ஓரளவிற்கு பொருந்துவதாக உள்ளது. இங்கு 1871–1946 வரையான முதல் 75 வருடகாலப் பகுதியை முதலாவது கட்டத்துள் அடையாளம் காணலாம். இக்காலப் பகுதியில் குடித்தொகை வளர்ச்சி வீதம் மிகக்குறைவாக 1.3 என்ற நிலையில் காணப்பட்டது. இக்காலப் பகுதியில் பிறப்பு வீதம் இருந்ததற்கு இணங்க இறப்பு வீதமும் அதிகமாகக் காணப்பட்டதால் வளர்ச்சிவீதம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. இக்கால கட்டத்தில் குடித்தொகையதிகரிப்புக்கு இயற்கையதிகரிப்பிலும் பார்க்க வெளிநாடுகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களின் தொகை கூடிய முக்கியத்துவம் பெறுகின்றது. 1871-1901 வரையான காலப் பகுதியில் மொத்த குடித்தொகை அதிகரிப்பில் 58வீதம் இடம்பெயர்ந்தவர்களாகும்.

குடித்தொகை நிலைமாற்றக் கோட்பாட்டின் இரண்டாவது காலகட்டமாக இலங்கையில் 1946–1971 வரையான காலப்பகுதியை குறிப்பிடலாம். இக்காலப்பகுதியில் வருடாந்த சராசரி வளர்ச்சி வீதம் 2.5 வீதமாக முன்னைய கட்டத்தை விட இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது. இக்காலகட்டத்தில் இயற்கையதிகரிப்பின் பங்களிப்பு படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. பிறப்புவீத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிப்பு தொடர்ந்து அதிகரித்த வீதம் தில் நிலைபெற்றுச் செல்ல இறப்பு வீதம் குறைவடைந்து சென்றுள்ளது. 1946 இல் 20 ஆக இருந்த இறப்புவீதம் 1947இல் 14 ஆகக் குறைவடைந்து இக்காலப்பகுதியில் இறப்பு வீதம் சடுதியாகக் குறைவடைய மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை முக்கிய காரணமாகும். இவ்வாறு இறப்புவீதம் சடுதியாக வீழ்ச்சியடைந்தாலும் பிறப்புவீதத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படாது, ஏறத்தாழ 1000 பேருக்கு 38 ஆகவே இக்கால கட்டத்தில் தொடர்ச்சியாகக் குறைவடையாமல் காணப்பட்டமையால் குடித்தொகை வேகமாக அதிகரித்து சென்றுள்ளது.

இலங்கையில் 1971ம்ஆண்டு தொடக்கம் இன்று வரையான காலப்பகுதியை, குடித்தொகை நிலைமாற்றக் கோட்பாட்டின் 3வது கட்டத்தை பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளது எனக்கூறின் மிகையாகாது. இன்று இலங்கை சமூக, பொருளாதார அரசியல் நிலைமைகளில் துரித அபிவிருத்தி நோக்கிச் செயற்பட்டு வருகின்றது எனக்கூறலாம். இலங்கையில் இன்று 82 வீதமான மக்கள் கல்வியறிவுடையவர்களாக இருப்பதுடன் தலாவீத வருமானம் 250 அமெரிக்க டொலரையும் பெறுகின்றது. உழைக்கும் மக்கள் தொகை 1971 இல் 56.8 வீதமாக இருந்து 1981 இல் 60.4 வீதமாக அதிகரித்துள்ளது. தங்கிவாழ்வோர் தொகை 1971இல் 76.1 வீதமாக இருந்து 1981இல் 65.6 வீதமாகக் குறைவடைந்துள்ளது. இங்கு 600 பேருக்கு ஒரு வைத்தியர் என்ற முறையில் மருத்துவ சுகாதார வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் 19 5ம் ஆண்டிலிருந்து தீவிரமாக குடும்பக்கட்டுப்பாடு திட்டமிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையால் 1971 இன் பின் வருடாந்த குடித்தொகை வளர்ச்சி வீத வேகம் குறைவடையத் தொடங்கியுள்ளது. 1971-1981 இடையில் வளர்ச்சி வீதம் 1.7 ஆக குறைவடையத் தொடங்கியது. 1971இல் 1000க்கு 30 1 ஆக இருந்த பிறப்பு வீதம் 1976இல் 27.6 ஆகக் குறைவடைந்தது. இதுபோன்றே இறப்பு வீதம் 1961இல் 308 0 ஆக இருந்து 1971 இல் 7.7 வீதமாக குறைவடைந்தது. இவ்வாறு பிறப்பு வீதம், இறப்பு வீதக் குறைவிற்கு ஏற்ப படிப்படியாகக் குறைவடைய குடித்தொகை வளர்ச்சி வேகமும் படிப்படியாக அதிகரித்துச் செல்கின்றது. எனவே விருத்திப்பாதை நோக்கிச் செல்லும் இலங்கையில் இனிவரும் தசாப்தங்களில் ஏற்படும் விருத்தி நிலைமைகளுக்கு ஏற்ப குடித்தொகை நிலைமைகளிலும் மாற்றம் ஏற்பட்டு ஓர் சீரான வளர்ச்சிப்போக்கை எதிர்காலத்தில் பிரதிபலிப்பதுடன் குடித்தொகை நிலைமாற்றக் கோட்பாட்டின் வலிமைத் தன்மையையும் எடுத்துக்காட்டும் எனக் கூறலாம்.

எனவே எந்த ஒருநாடும் குறைவிருத்தி நிலையில் இருந்து விருத்தி நோக்கிச் செல்லும் போது குடித்தொகை நிலைமாற்றக் கோட்பாட்டின் ஆரம்பநிலையில் இருந்து படிப்படியாக இறுதிநிலையை அடைகின்றது ஆயினும் எல்லாநாடுகளிலும் இத்தகைய மாற்றநிலைமை ஒரே காலஇடைவெளியில் ஒரேமாதிரி அமையாது வேறுபட்டு அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. நாட்டின் விருத்தி குடித்தொகையமைப்பில் குறிப்பாக வயதமைப்பில் தங்கியுள்ளதால் குடித்தொகையில் ஏற்படும் மாற்றம் நாட்டின் விருத்திக்கும, நாட்டின் விருத்தி குடித்தொகை அமைப்பை மாற்றியமைக்கவும் காரணமாக அமைகின்றது. இவ்வாறு குடித்தொகை மாற்றமும் விருத்தியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதுடன் இக்குடித்தொகை நிலைமாற்றக் கோட்பாடு ஒவ்வோர் நாட்டினதும் விருத்திப்போக்கை, நிலையை எடுத்துக் காட்டுவதாகவும் உள்ளது.

---

உசாத்துணை நூல்கள் :

1. John I. Clark; Population Geography and the developing Countries;
2. Kindlberger; Hernit; Economic development; ( Third Edition )
3. Peter Haggett ; Geography A modern Synthesis; Harper & Row Publishers, 1975
4. Roberts woods; Population analysis in geography; Longman group Limited, London; 1979.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருத்தி அடைந்து வரும் நாடுகளின் வர்த்தகம்

செல்வி றஜனி நாகராஜா

உலக நாடுகளின் பொருளாதார வளமானது அந்நாடுகளின் சிறந்த உற்பத்தித் திறமுறைகள், லாபகரமான வர்த்தகம் என்பவற்றிலேயே தங்கியுள்ளது. இவ் வகையில் விருத்தியடைந்த நாடுகட்கும் விருத்தியடைந்துவரும் நாடுகட்குமிடையிலான சர்வதேச வர்த்தகமும் அந்நாடுகளின் பொருளாதார வளத்தில் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. ஒரு சில நாடுகள் உயர் தொழில்நுட்பத்திறனால் சுய நிறையுடையனவாயும், நவீன நாகரீகத்தின் பலாபலன்களையும் அனுபவிப்பனவாகவும், ஒரு சில பொருட்களை ஏற்றுமதி செய்யவும் வேறு சில பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையிலும் காணப்பட வேறு சிலநாடுகள் பொருட்களின் உற்பத்தியிற் தன்னிறைவற்று அத்தியாவசிய பொருட்கட்கே இறக்குமதியினை எதிர்நோக்கியுள்ளனவாகக் காணப்படுகின்றன. இதுவே சர்வதேச வர்த்தகத்துக்கான அடித்தளமாகும்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஹாலன்ட் கிளீவ்லன்ட் (Harland Cleveland) என்பவர் ''தமக்கும் விருத்தி அடைந்த நாடுகள் எனக் கூறப்படும் நாடுகட்குமிடையிலுள்ள பாரிய இடைவெளியினை விரைவான அபிவிருத்தி என்னும் பாலத்தினால் நிரப்புவதற்காக துரித விருத்தியினை நோக்கிச் செயற்படும் நாடுகளே விருத்தியடைந்துவரும் நாடுகள்'' எனக் கூறியுள்ளார். இதனடிப்படையில் ஐ.நா. நிறுவனமானது ஐக்கியஅமெரிக்கா, கனடா தவிர்ந்த அமெரிக்க நாடுகள், தென்னாபிரிக்கக் குடியரசு தவிர்ந்த ஆபிரிக்க நாடுகள், யப்பான், ரஷ்யா, சிங்கப்பூர் தவிர்ந்த ஆசிய நாடுகள் என்பவற்றினை விருத்தியடைந்துவரும் நாடுகளென வரையறுத்துள்ளது. இவ்விருத்தியடைந்து வரும் சர்வதேச வர்த்தகமானது இந்நாடுகளின் வரலாற்று ரீதியான விருத்திப்பாதையில் ஒரு முக்கிய இடத்தினை வகித்து வருகின்றது. இவ் வர்த்தகத்தினை,

I தமக்கிடையேயான வர்த்தகம்

II விருத்தியடைந்த நாடுகளுடனான வர்த்தகம்

எனப்பிரித்தாராயக் கூடியதாயுள்ளது. விருத்தியடைந்துவரும் நாடுகளைப் பொறுத்தமட்டில் சர்வதேச வர்த்தகமானது சாதகமானதாக உள்ள அதேவேளை பாதகமானதாயும் காணப்படுகிறது.

ஆரம்பத்தில் விருத்தியடைந்து வரும் நாடுகளின் தேசிய வருமானத்தில் பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்களே குறிப்பிடத்தக்க பங்கினை வகித்தன. இவ் ஏற்றுமதி மூலம் இந் நாடுகள் 25-30% இற் கிடைப்பட்ட தேசிய வருமானத்தினையும் பெற்றன. அதேவேளை நிலநெய்யினை உற்பத்தி செய்யும் நாடுகள் சில நிலநெய் ஏற்றுமதி மூலம் ஏறத்தாழ 90% தேசிய வருமானத்தினையும் பெறுகின்றன. இங்கு விருத்தியடைந்துவரும் நாடுகள் தமது பொருளாதாரத்திற்கு ஏற்றுமதியில் தங்கியுள்ளதுடன் மூலப்பொருட்கள், இயந்திர வகைகள், மூலதனப் பொருட்கள் மற்றும் நுகர்ச்சிப் பொருட்கள் போன்றவற்றிற்கு இறக்குமதியிலேயே தங்கியிருக்கவேண்டிய நிலையும் காணப்பட்டது. அதாவது 19 ஆம் நூற்றாண்டில் கைத்தொழில்மயமாக்கத்தின் போது விருத்தியடைந்த நாடுகள் உணவுப் பொருட்களையும் மூலப் பொருட்களையும் இறக்குமதி செய்து விரைவான வளர்ச்சியடைய மறுபுறம் இவற்றினை ஏற்றுமதி செய்த விருத்தியடைந்துவரும் நாடுகள் அவற்றின் உள்ளார்ந்த கேள்வியாலும்

---

Miss. R. NAGARAJAH B. A. Hons (Jaffna)
Temporary Tutor, Department of Geography.
University of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றினை உற்பத்தி செய்வதற்கான சர்வதேச முதலீடுகளினாலும் நன்மைகள் பெற்றன. எனவே ஒப்பிட்டுரீதியில் நன்மைகளினடிப்படையில் ஏற்பட்ட சர்வதேச சிறக்கும் இயல்பு இருவகை நாடுகட்கும் சாதகமாகவேயமைந்தது.

சர்வதேச வர்த்தகத்தின் இன்றைய நிலையினை அறிவதற்கு விருத்தி அடைந்துவரும் நாடுகளின் சர்வதேச வர்த்தகம் தொடர்பாக இந்நாடுகளில் தனிப்பட்ட முறையிலும் கூட்டுமுறையிலும் பின்வரும் ஐந்து அம்சங்கள் தொடர்பாக ஆராய்தல் வேண்டும். அவையாவன:

i. விருத்தி அடைந்துவரும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சி, அமைப்பு பண்பு என்பவற்றினை எந்தளவுக்கு சர்வதேச வர்த்தகம் பாதிக்கிறது?

ii. விருத்தி அடைந்துவரும் நாடுகளில் பல நாடுகட்கிடையிலேயும் தனிப்பட்ட நாட்டினடிப்படையிலும் வருமானமானது சர்வதேச வர்த்தகத்தினால் எவ்வாறு பங்கிடப்படுகிறது?

iii. விருத்தியடைந்துவரும் நாடுகளின் விருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதில் இந்நாடுகளிடையிலான சர்வதேச வர்த்தகம் எந்தளவு உதவியாயுள்ளது?

iv. விருத்தியடைந்துவரும் நாடுகள் தாம் சர்வதேச வர்த்தகத்தில் எந்தளவு பங்களிப்பினை ஏற்படுத்த வேண்டுமென்பதனை தாமே நிர்ணயிக்கக் கூடியனவாயுள்ளனவா அல்லது ஏனைய நாடுகள் இதனை நிர்ணயிக்கின்றனவா?

v. கடந்த இரு தசாப்தத்தில் ஏற்பட்ட அனுபவத்தினடிப்படையில் சர்வதேச வர்த்தகத்தில் விருத்தியடைந்துவரும் நாடுகள் வரியற்ற வர்த்தகக் கொள்கையினைக் கடைப்பிடிக்க வேண்டுமா? மூலதனமும் மனிதவளமும் கட்டுப்பாடற்றமுறையிற் செயற்படவேண்டுமா? அல்லது சுயதேவைப் பூர்த்தி நோக்கமாக தமக்குத் தேவையான பொருளைத் தாமே உற்பத்தி செய்யத்தக்க வகையினை ஏற்படுத்தத் தகுந்த பாதுகாப்புகளை ஏற்படுத்தவேண்டுமா? என்பனவாகும்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் ஒவ்வொன்றிலுமுள்ள வளங்களின் தன்மையும் அளவும் வேறுபடலாம், இந்நாடுகளின் பொருளாதார சமூகநிறுவனங்களின் வேறுபடலின் விளைவான பொருளாதார வளர்ச்சி, விருத்தி என்பவற்றின் வேறுபடலாலும் மேற் கூறப்பட்ட இயல்புகளைப் பொறுத்தமட்டில் அவற்றுக்கான விடைகளை விருத்தியடைந்துவரும் நாடுகளிலேயும் நாட்டுக்கு நாடு வேறுபட்டே காணப்படுகின்றன.

இன்றைய வர்த்தக அமைப்பினை நோக்கின் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்து விருந்தியடைந்த நாடுகட்கான உணவுப் பொருட்கள் மூலப் பொருட்களின் ஏற்றுமதியால் ஏற்படும் தீமைகள், முடிவுப் பொருட்களின் ஏற்றுமதியால் ஏற்படும் நன்மைகள் என்ற வேறுபாடு ஏற்பட்டு இருவகை நாடுகட்குமிடையில் ஒரு சமமின்மையை ஏற்படுத்தியுள்ளது. இதன் நன்மை தீமைகள் பற்றி ஆராய்ந்த ரோேள் பிரபிஷ் (Raul Prebisch) என்பவர் ஒப்பீட்டு நன்மைகளின் கோட்பாடுகட்கெதிராக புதிய வர்த்தக மாற்று விகிதம் பற்றிய தனது கோட்பாட்டில் இதனை விளக்கியுள்ளார்.

பொதுவான உலக வர்த்தகமானது 1960 களில் 8% வளர்ச்சி வீதத்திலிருந்து 1970 களில் 5·7% ஆகக் குறைவடைந்துள்ளது. இதேவேளை விருந்தியடைந்துவரும் நாடுகளில் நிலநெய்யினை அடிப்படையாக இல்லாத பொருட்களின் ஏற்றுமதியானது 1960 களில் 5% லிருந்து 1970 களில் 7% ஆகக் கூடியுள்ளது. அதேவேளை 1960 களில் கைதொழில்மய நாடுகளில் ஏற்றுமதி வர்த்தகம் 164% இனால் கூடியபோது விருத்தி அடைந்து வரும் நாடுகளில் இது 99% ஆகவே காணப்பட்டது. இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மொத்த ஏற்றுமதி வர்த்தகத்தில் 29% இனை ஐரோப்பிய பொருளாதார சமுகத்தினைச் சேர்ந்த கைத்தொழில் மய நாடுகளே வகித்தன. அத்துடன் முக்கிய கைத்தொழில் மயநாடுகளின் ஏற்றுமதி வர்த்தகம் 1960ல் 54 பில்லியன் டொலராயும் 1970ல் 161 பில்லியன் டொராாலயும் கூடியுள்ளது. அதேவேளை விருத்தி அடைந்த நாடுகளுடனான விருத்தி அடைந்து வரும் நாடுகளின் வர்த்தகமானது 1960ல் 19 பில்லியன் டொலராயிருந்து 1970ல் 40 பில்லியன் டொலராக மட்டுமே கூடியுள்ளதனையும் அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

விருத்தியடைந்துவரும்நாடுகள் 1970களின் ஆரம்பத்தில் மிகைமுதலுள்ள எண்ணெய் ஏற்றுமதி நாடுகளைவிட 10 மடங்கு கூடுதலாக ஏற்றுமதியில் ஈடுபட்டபோதும் இது கைத்தொழில் நாடுகளுடன் ஒப்பிடுகையில் அவற்றின் 1/3 பங்கிற்கும் குறைவாயுள்ளது. எனவே 1970 களில் உண்மையான ஏற்றுமதிக் கொள்வனவுத்திறனானது கைத்தொழில் நாடுகளில் 71% இனுலும், எண்ணெய் இறக்குமதி செய்யும் விருத்தியடைந்துவரும் நாடுகளில் 84% இனுலும், எண்ணெய் ஏற்றுமதி செய்யும் விருத்தி அடைந்து வரும் நாடுகளில் 229% இனுலும், மூலதனம் மிகையாகவுள்ள எண்ணெய் ஏற்றுமதி நாடுகளில் இது 700% இனுலும் கூடியுள்ளது.

உலக நாடுகளின் வருடாந்த வர்த்தக அதிகரிப்பானது பின்வருமாறு காணப்படுகிறது.

| | 1950—1967 | 1967—1972 |
|---|---|---|
| விருத்தியடைந்த நாடுகள் (1ம் உலகம்) | 7·6% | 14·5% |
| சோசலிச நாடுகள் (2ம் உலகம்) | 9·2% | 11·6% |
| விருத்தியடைந்து வரும் நாடுகள் (3ம் உலகம்) | 4·1% | 11·6% |

இத்தகு இயல்புகளிலிருந்து ஏற்றுமதி வர்த்தகத்தில் 3ம் உலக நாடுகளிலும் பார்க்க 1ம், 2ம், உலக நாடுகள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பெற்றுள்ளதனைக் காணலாம். அதாவது விருத்தியடைந்த நாடுகள் 1950ல் உலக வர்த்தகத்தில் 68·8% ஆகவிருந்து 1967, 1972 காலப்பகுதியில் 82% ஆகக் கூடியது.

மேற்படி சர்வதேச வர்த்தகத்தில் விருத்தி அடைந்து வருகின்ற நாடுகளின் பங்களிப்பினைக் கூட்டுவதற்கு வடக்குத்—தெற்கு நாடுகளுக்கிடையிலான கலந்துரையாடல்கள் (North—South dialogues) முக்கியம் பெறுகின்றன. வில்லி பிறுண்ட் (Willy Brandt) என்பவரே உலக பொருளாதார முறைமையின் சமமின்மையையும் அதன் மூலம் பொருளாதார முறையிலேற்பட்ட தோல்வியையும் பற்றி ஆராய்ந்து அதன் விளைவாக 1979ம் ஆண்டில் ஓர் அறிக்கை மூலம் வடக்கு—தெற்கு உரையாடலை ஆரம்பித்துவைத்தார்.

ஒப்பீட்டு ரீதியில்விருத்தியடைந்துவரும் நாடுகளின் ஏற்றுமதியானது முழுவதுமாக கைத்தொழில் நாடுகளின் வளர்ச்சியிலும் அவற்றின் வர்த்தகக் கொள்கைளிலுமாகத் தங்கியிருக்காது 1973ன் பின் தமக்கிடையேயான வர்த்தகமும் வளர்ச்சி பெற்று வருவதனை அவதானிக்கக் கூடியதாயுள்ளது இவ்வர்த்தகம் முக்கியமாக எண்ணெய் ஏற்றுமதி செய்யும் விருத்தியடைந்து வருகின்ற நாடுகட்கும் எண்ணெய் இறக்குமதி செய்யும் விருத்தியடைந்து வருகின்ற நாடுகட்குமிடையே நடைபெறும் வர்த்தகமாகவே காணப்படுகிறது. எதிர் காலத்தில் வடக்குத் தெற்கிற்கிடையிலான வர்த்தகத்துடன் தெற்கு — மேற்கிற்கிடையிலான வர்த்தகமும் முக்கியம் பெறும் என்பதையே அட்டவணை I காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை I

வர்த்தகப் பாய்ச்சல் (நகர்வு)

(உலக வர்த்தகத்தின் விகிதமாக)

| வருடம் | | வடக்கு | தெற்கு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1980 | வடக்கு | 50 | 24 | 74 |
| | தெற்கு | 19/69 | 7/31 | 26/100 |
| 1990 | வடக்கு | 51 | 21 | 72 |
| | தெற்கு | 19]70 | 9/30 | 28/100 |

மூலம் : World Development Report 1981

1980 — 1990 இற் கிடையிலான காலப் பகுதியில் தெற்கு - தெற்கிற்கிடையிலான வர்த்கமானது 7 — 9% ஆக அதிகரிக்கும் என அறியப்பட்டுள்ளது. தற்போது விருத்தியடைந்துவரும் நாடுகள் தமக்கிடையே பல ஒப்பந்தங்களை அமைத்துக் கொண்டும் தமக்கிடையேயான வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளன. தென்கிழக்காசிய வர்த்தகக் கூட்டுக்கள்போன்றன இதனையே நடைமுறைப் படுத்துகின்றன.

விருத்தியடைந்த, விருத்தியடைந்து வருகின்ற நாடுகளிடையேயான வர்த்தகத்தில் விருத்தியடைந்த நாடுகளின் பல்தேசியக் கம்பனிகளும் முக்கிய பங்கினை வகிக்கின்றன, இன்று சோசலிசமற்ற நாடுகளின் மொத்தவர்த்தகத்தில் 40% இனை ஐக்கிய அமெரிக்கா உடையதாயுள்ளது. விருத்தி அடைந்த நாடுகள் விருத்தியடைந்து வருகின்றநாடுகளுடனான வர்த்தகத்தினை நோக்கின் யப்பானின் வர்த்தகத்தில் 14.5% தென்கிழக்காசிய, மத்திய கிழக்கு நாடுகளுடனும், 8% ஆபிரிக்க நாடுகளுடனும் 8.5% லத்தீனமெரிக்க நாடுகளுடனும் நடைபெறுவதாயுள்ளது. அத்துடன் தற்போதைய வர்த்தக அமைப்பில் உற்பத்தியாக்கப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியும் விருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்து விருத்தியடைந்த நாடுகட்கு கூடிவருவதனையும் அவதானிக்கக்கூடியதாயுள்ளது.

அடுத்து நாடுகளிடையேயான வர்த்தகத்தினாலுண்டாகும் நன்மை தீமைகளை நோக்கின் விருத்தியடைந்த நாடுகளே பெரிதும் நன்மையடைகின்றன என்று கூறும்போது விருத்தியடைந்து வருகின்ற நாடுகளும் ஒரு சில நன்மைகளை அனுபவிக்கவே செய்கின்றன. இந்நாடுகளின் நுகர்ச்சித்திறனை இது அதிகரிப்பதுடன் 3ஆம் உலக நாடுகளின் வளவிருத்திக்கும் இது அடிப்படையாகவுள்ளது. அத்துடன் சர்வதேச அடிப்படையிலும் தனித்தனி நாடுகளினடிப்படையிலும் வர்த்தகத்தின் மூலமே பொருட்களின் விலைகள், உண்மையான வருமானம் என்பன ஓரளவுக்குச் சமப்படுத்தப்படுகிறது. இங்கு விருத்தியினை ஏற்படுத்தவும் இது வழிகோலுகிறது. எனினும் தனித்தனி நாடுகளின் கொள்கைகள் இதில் சில வரையறைகளை ஏற்படுத்தி விடுகின்றன. மேலும் வரியிலா வர்த்தகக் கொள்கையைக் கடைப்பிடிக்குமிடத்து சர்வதேச பொருள்விலைகளும் உற்பத்திச் செலவும் ஒரு நாட்டின் வர்த்தகம் எந்தளவுக்கு நடைபெறவேண்டுமென்பதனையும் கட்டுப்படுத்துகிறது.

சர்வதேச வர்த்தகத்தினால் விருத்தியடைந்துவரும் நாடுகள் நன்மைகளை அடையும் அதேவேளை பாதகவிளைவுகளையும் கூட அனுபவிக்கின்றன. குறிப்பாக பெற்றோலிய ஏற்றுமதி நாடுகள் தவிர ஏனைய விருத்தி அடைந்துவரும் நாடுகளில் அவை இறக்குமதி செய்யும் பொருட்களினளவு ஏற்றுமதி வருமானத்தினால் சரிக்கட்ட முடியாதனவாயுள்ளன. அட்டவணை II இதனையே காட்டுகிறது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை II

### சில நாடுகளில் ஏற்றுமதி இறக்குமதிப் பெறுமதிகள்

| | இறக்குமதி (டொலரில்) | | | | ஏற்றுமதி (டொலரில்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1970 | 1975 | 1979 | 1980 | 1970 | 1975 | 1979 | 1980 |
| உலக மொத்தம் | 294,100 | 800,000 | 1,525,900 | 1,860,700 | 280,100 | 788,300 | 1,488,900 | 1,831,100 |
| பிறேசில் | 2,849 | 12,210 | 19,840 | 25,000 | 2,739 | 8,670 | 15,244 | 20,131 |
| மத்திய ஆபிரிக்கா | 34 | 69 | 70 | - | 232 | 488 | 1,129 | — |
| இலங்கை | 389 | 751 | 1,448 | 2,029 | 342 | 560 | 981 | 924 |
| இந்தியா | 2,124 | 6,391 | 9,546 | 12,858 | 2,026 | 4,393 | 7,608 | 5,911 |
| U. S. A | 39,756 | 102,984 | 217,964 | 255,657 | 42,590 | 106,157 | 178,578 | 216,668 |
| யப்பான் | 18,881 | 57,881 | 110,670 | 140,520 | 19,318 | 55,844 | 103,045 | 129,248 |

மூலம்:- Readers Digest 1972 Almanac and Year book.

எனவே இந் நாடுகள் பல சென்மதிநிலுவையினால் பல பிரச்சினைகளை இன்று எதிர்நோக்குகின்றன. விருத்தியடைந்து வரும் நாடுகளில் 1972ம் ஆண்டில் 44·6 பில்லியன் டொலராக ஏற்றுமதி வருமானம் காணப்பட இறக்குமதியானது 54·7 பில்லியன் டொலராகக் காணப்பட்டது. எனவே இங்கு ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்குமிடையில் 10 பில்லியன் டொலர் பற்றாக்குறையாகவே காணப்படுகிறது.

அடுத்து விருத்தியடைந்து வரும் நாடுகள் மூலப் பொருட்களையும் முதனிலை உற்பத்திப் பொருட்களையும் ஏற்றுமதி செய்ய விருத்தியடைந்த நாடுகளிற் தங்கியுள்ள தன்மையையும் காணலாம். இங்கு நீண்ட காலப் போக்கில் கைத்தொழிற் பொருட்களின் விலைஉயர்ச்சிப்போக்கினையும் முதனிலைப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சிப் போக்கினையும் காட்டும் போது விருத்தியடைந்து வரும் நாடுகள் பாதகநிலையையே எதிர் நோக்குகின்றன. முதனிலைப் பொருட்கட்கான கேள்வி கைத்தொழிற் பொருட்களுடன் ஒப்பிடும் போது நெகிழ்ச்சியற்ற தன்மை, உற்பத்திப் பொருளுக்கும் காரணி வருமானங்களுக்குமிடையிலுள்ள தொடர்பு என்பனவற்றினடிப்படையிலும் விருத்தியடைந்துவரும நாடுகள் பாதிப்படையவே செய்கின்றன. அதாவது சர்வதேச வர்த்தகத்தினால் விருத்தியடைந்து வரும் நாடுகள் விருத்தியடைந்த நாடுகளினால் சுரண்டலுக்கும் உட்படுகின்றன.

பொதுவாக விருத்தியடைந்து வரும் நாடுகள் சர்வதேச வர்த்தகத்தின் பாதக விளைவுகளை அனுபவிப்பதற்கு விருத்தியடைந்த நாடுகளே மிக அடிப்படைக் காரணியாயுள்ளது. முக்கியமாக விருத்தியடைந்த நாடுகளின் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் செயற்கைப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட முதல் விளைவுப் பொருட்களின் ஏற்றுமதி தொடர்ச்சியாகக் குறைகிறது அத்துடன் விருத்தியடைந்த நாடுகள் விருத்தியடைந்துவரும் நாடுகளின் கைத்தொழில் விருத்தியில் ஏற்படுத்தும் தொழினுட்பத் தடை, மூலதனத்தடை, சந்தை வசதித்தடை என்பனவும் இவற்றின் வர்த்தகத்தினைப் பாதிக்கின்றன, இத்தகைய தடைகள் கூட்டு முயற்சி மூலம் தகர்த்தப்பட வேண்டுமென்பது வில்லி பிறண்ட் (Willy Brandt) குழுவினரின் கருத்து. மேலும் விருத்தியடையும நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்களின் கேள்வி நிரம்பல் மாறுபாடுகள், நாட்டின் நிதி நிலைமை, மோசமான அந்நியச் செலவாணி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றினுல் விலைத்தளம்பலுக்குட் படுகின்றன. இவ்விலைத்தளம்பலும் பாதக வர்த்தக நிலையினைத் தோற்றுவிக்கும். இத் தகைய சிக்கல்களைக் கருத்திற் கொண்டே 1976ல் நைரோபியில் 4வது உங்டாட் மகாநாடு பண்டங்கட்கான ஒருமித்த திட்டம் ஒன்றை வகுத்து பொது நிதியம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. தவிர மணிலாவில் நடந்த 5வது உங்டாட் மகாநாட்டிலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளது உற்பத்திகளின் பதப்படுத்தல், சந்தைப் படுத்தல் பங்கீடு என்பன தொடர்பாக சர்வதேச ஒத்துழைப்பு ஏற்படக் கூடிய வகையில் ஓர் அடிப்படை அமைப்பு நிறுவ முயற்சி எடுக்கப்பட்டது. இதனை விருத்தியடைந்த நாடுகள் தடுக்கவும் முயற்சித்து வருகின்றன.

விருத்தியடைந்துவரும் நாடுகளின் சென்மதி நிலுவை பாதகமாயமைய எரிபொருள் விலையேற்றமும் ஒரு காரணியாகும். எண்ணெய்விலை அதிகரிப்பானது. 1970ஆம் ஆண்டில் 7% ஆக இருந்து (29 பில்லியன் டொலர்) 1980 ஆம் ஆண்டில் 21% இனுல் (535 பில்லியன் டொலர்) கூடியது. இது 98% விலையதிகரிப்பினுல் ஏற்பட்டது. இதனுல் எண்ணெய் இறக்குமதி செய்யும் விருத்தியடைந்துவரும் நாடுகள் ஏற்றுமதி அதிகரிப்பினைவிட இறக்குமதிக் கட்டுப்பாடு, வெளிநாட்டுதவி என்பவற்றிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது, இதனுல் இந்நாடுகளின் ஏற்றுமதிக் கொள்வனவுத் திறனுனது 1970ஆம் ஆண்டில் இருந்ததைவிட 1980 ஆம் ஆண்டில் 1/3 பங்கிற்கும் குறைவாகவேயிருந்தது இந்நாடுகளின் இறக்குமதியும் இக்காலத்தில் குறைவடைந்தது.

தொகுத்து நோக்கும் போது நாடுகளிடையேயான சர்வதேச வர்த்தகத்தினுல் விருத்தியடைந்துவரும் நாடுகள் ஒரு சில நன்மைகளை அனுபவிக்கினும் கூட எண்ணெய்விலையேற்றம், விருத்தியடைந்த நாடுகளது வர்த்தகக் கொள்கைகள் போன்றவற்றினுல் பாதிப்படைவதனையும் காணக் கூடியதாயுள்ளது, அத்துடன் வடக்கு - தெற்கிற்கிடையிலான வர்த்தக உறவுடன் தெற்கிடையிலான வர்த்தக உறவு வளர்ச்சியினையும் அவதானிக்கமுடிகிறது. இங்கு விருத்தியடைந்துவரும் நாடுகள் வர்த்தகத்தில் மேலும் பாதக நிலைமைகளை எதிர்நோக்காதிருக்க பொருத்தமான தொழில் நுட்பத் தெரிவு, தமக்கிடையே கூட்டு ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் ஏற்றுமதியினைப் பன்முகப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

**References :**


1. Micheal Todaro — Economic development in the Third world.
2. The Times — concise Atlas of the world, Revised Edition 1980
3. World Development, Report — 1981
4. Readers Digest — 1982 Almanac and Year book.
5. Unicef of News Issue 113/1982/3.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியில் மத்திய இடங்களின் பங்கு

பேராசிரியர் : பொ. பாலசுந்தரம்பிள்ளை

வன்னிப்பிரதேசம் என நாம் இங்கு கருதுவது இன்றைய வவுனியா, முல்லைத் தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய பரப்பையாகும். இதன் மொத்த நிலப்பரப்பு 4616 சதுர கிலோமீற்றராகும். 1981 இல் இப்பிரதேசம் 173416 மக்களை கொண்டிருந்தது, இக்காலத்தில் சராசரி குடிசன அடர்த்தி சதுரகிலோ மீற்றருக்கு 38 பேராகவிருந்தது. இலங்கையில் குறைந்த குடிசனத் தொகை கொண்ட பகுதிகளில் இதுவும் ஒன்றாகும். தேசிய குடிசனத் தொகை அடர்த்தி சதுர கிலோமீற்றருக்கு 230 பேராக இருப்பது இங்கு கவனிக்கப்படத்தக்கது. 1940ம் ஆண்டுகளிலிருந்து இப்பிரதேசத்தின் குடிசனத் தொகை துரிதமாக அதிகரித்துவந்தபொழுது நாட்டின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுமிடத்துகுடிசனத் தொகைப் பருமனில் சிறியதாகவே இருக்கின்றது. 1971—1981ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட குடிசனக் கணிப்புக் காலத்தில் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் சராசரி வருட வளர்ச்சி முறையே 6·1 வீதமாகவும் 4·9 வீதமாகவும் இருந்தது. 1970ம் ஆண்டுகளில் வளர்ச்சி வீதத்தில் 1991ம் ஆண்டில் இப்பிரதேசம் மூன்று இலட்சம் மக்களைக் கொண்டிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

1971ம் ஆண்டு குடிசனக் கணிப்பின்படி இப் பிரதேசத்தில் 416 குடியிருப்புகள் இருந்தன. இவற்றுள் மிகப் பெரியது, வவுனியா நகரமாகும். இன் நகரின் இன்றைய சனத்தொகை 20,000 வரையில் உள்ளது. இதற்கடுத்த பிரதான நகரம் முல்லைத்தீவாகும். இவ்விரண்டு நகரக் குடியிருப்புகளைத் தவிர ஏனையவை கிராமக் குடியிருப்புகளாகும். குடிசனப் பருமன் அடிப்படையில் குடியிருப்புக்களின் மீடிறன் பின்வருமாறு.

| பருமன் வகுப்பு | குடியிருப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1 —100 | 216 |
| 101 — 250 | 104 |
| 151 — 500 | 57 |
| 501 — 1000 | 30 |
| > 1001 | 422 |

இப்பிரதேசத்தின் கிராமங்களின் எண்ணிக்கையும் சனத்தொகையும் 1981ல் அதிகரித்திருக்கும். 1981ம் ஆண்டிற்குரிய புள்ளிவிபரங்கள் குடியிருப்புக்கள் அடிப்டையில் இன்னும் வெளிவரவில்லை. பிரதேசத்தில் குடியிருப்புக்கான குடிசனத்தொகை குறைவடைய குடியிருப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு போகும் இயல்பினைக் காண முடிகின்றது. குடியிருப்புக்களின் பருமன் பரம்பல் பிரமிட் வடிவமானதாக இருக்கின்றது. மொத்தக் குடியிருப்புக்களில் அரைவாசிப் பகுதிக்குக் கூடியன 100 பேருக்குக் குறைவான குடிசனத் தொகையைக் கொண்டுள்ளன. 15 குடியிருப்புக்கள் மாத்திரமே 1000 மக்களுக்கு மேல் கொண்டுள்ளன. இக்குடிருப்புக்களுள் அண்மைக்காலக் குடியேற்றத் திட்டங்கள் முக்கியம் பெறுகின்றன. கரையோரப் பற்றுக் குடியிருப்புக்கள் மீன்பிடிக் குடியிருபுக்களாக இருப்பதால் பருமனில் ஓரளவு பெரிதாக இருக்கின்றது. ஏனைய பிரிவுகளில் உள்ள குடியிருப்புக்கள் சிறியனவாகவும் இருப்பதுடன் குளத்தின் அளவுக்கும் குடியிருப்பின் பருமனுக்குமிடையே நெருங்கிய தொடர்புகாணப்படுகின்றன. பல தனித்த குளக் குடியிருப்புகளாக உள்ளன

Prof. P. BALASUNDARAMPILLAI B. A. Hons. (Cey) Ph. D. (Durham)
Head, Department of Geography.
University of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியின் பொருளாதாரம் நெற்செய்கையை அடிப்படையாகக் கொண்ட விவசாயத்தில் தங்கியுள்ளது. அண்மைக் காலத்தில் குறிப்பாக கடந்த பத்து ஆண்டுகளில் உழுந்து, நிலக்கடலை, மிளகாய் ஆகிய உணவுப் பயிர்ச்செய்கைகள் வளர்ச்சி பெற்று வருவதனைக் காணலாம். மேலும் அகழ் கிணறு, குழாய் கிணறு மூலமாக நீர்ப்பாசன முறைகள் வளர்ச்சி அடைந்து வருவதனுல் ஏற்பட்ட உப உணவுப் பயிர் செய்கை மாற்றத்தினுல் விவசாயிகளின் வாழ்க்கை முறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இத்தகைய பொருளாதார நடவடிக்கைகளினுலும் வாழ்க்கை மாற்றங்களினுலும் ஏற்பட்டு வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மத்திய இடங்களின் வளர்ச்சி முக்கியமாகவுள்ளது. மத்திய இடங்கள் என்னும்போது அவை மத்திய சேவைகளையும் பொருட்களையும் கொண்டுள்ளஇடங்களாகும். இவ்விடங்கள் அவைகளின் சுற்ருடலிலுள்ளகிராமங்களிலும், பண்ணைகளிலும் சேனைகளிலும் வாழ்வோருக்கு தேவையான பொருட்களையும் சேவைகளையும்வழங்குவதே இவைகளின் பிரதான சேவைகளாகும். வன்னி போன்ற பின் தங்கிய பிரதேசத்தில் ஒழுங்கான படிமுறை அமைப்புடைய மத்திய இடங்களின் வளர்ச்சி மக்களின் சமூக - பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் அடிப்படையான தொன்ருகும். மேலும் இந்நிலையங்கள் சரியான இடங்களில் இடவமைவு பெற்றிருக்கவேண்டும். பெருமளவில் இந்நிலையங்களின் வளர்ச்சி அவர்களின் அமைவிலேயே தங்கியுள்ளது.

இப்பிரதேசத்தில் காணப்பட்ட 422 குடியிருப்புக்களில் 194 குடியிருப்புகளில் மாத்திரம்தான் எதாவது ஒரு மத்திய பொருள் அல்லது சேவை இருந்தது. இப்பிரதேசத்தில் உள்ள மத்திய இடங்களை அவைகளின் முக்கியத்துவத்தினடிப்படையில் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம், இப்பிரிவுகளை எமது வசதிக்காக நகரங்கள், சிறிய நகரங்கள், பெரிய கிராமங்கள், கிராமங்கள், சிறிய கிராமங்கள் என அழைக்கலாம். முதலாவது மட்டத்தில் வவுனியா முல்லைத்தீவு ஆகிய இரு நகரங்கள் அடங்குகின்றன. 1969 இலும் பின்னர் 1974 இலும் மேற்கொண்ட வெளிஆய்வுகளில் வவுனியா நகரம் முல்லைத்தீவு நகரத்திலும் பார்க்க கூடிய முக்கியத்துவம் பெற்றிருந்ததை காணமுடிந்தது. ஆனுல் 1978ஆம் ஆண்டு முல்லைத்தீவு, மாவட்டத் தலைநகராக வந்த பின்னர் பல புதிய நிர்வாக சேவைகள், வர்த்தக நிறுவனங்கள் ஏற்பட்டுள்ளன. இவ்விரண்டு நகரங்களும் குடிசனத் தொகையளவில் வேறுபாடு கொண்டிருப்பினும் சேவை முக்கியத்துவத்தினடிப்படையில் ஒரளவு சமநிலை கொண்டுள்ளனவாகவுள்ளன.

இரண்டாவது மட்டத்தில் மாங்குளம் செட்டிகுளம், நெடுங்கேணி, முள்ளியவளை புதுக்குடியிருப்பு ஆகியன இடம்பெறுகின்றன. இந் நிலையங்களில் சராசரி 25க்கு மேற்பட்ட சேவைகள் காணப்படுகின்றன. செட்டிகுளம், நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு ஆகியன உதவி அரசாங்க பிரிவுத் தலைமை நிலையங்களாகவுள்ளன. இதனுல் இங்குபல அரசாங்க காரியாலயங்கள் காணப்படுகின்றன. மாங்குளம், போக்குவரத்து மையமாகவும் பிரதேச ரீதியான அரசாங்க காரியாலயங்களைக் கொண்டும் காணப்படுகின்றது.

மூன்ருவது மட்டத்தில் ஒட்டிசுட்டான் புளியங்குளம், துணுக்காய், ஓமந்தை, பூவரசங்குளம், நட்டான் கண்டல், தண்ணிஊற்று, மாமடுவ ஆகியன முக்கிய பெறுகின்றன. இக்குடியிருப்புகளில் சராசரி 10-20 சேவைகள் காணப்படுகின்றன.

நான்காவது மட்டத்தில் 33 நிலையங்கள் காணப்படுகின்றன. இந்நிலையங்கள் சராசரி 5 — 10 சேவைகளைக் கொண்டுள்ளன.

ஐந்தாவது மட்டத்தில் 148 சிறு நிலையங்கள் காணப்படுகின்றன. இவ்விடங்கள் சராசரி 1 —4 சேவைகளைக் கொண்டிருக்கின்றன. ஆரம்ப பாடசாலை கூட்டுறவுக் கடை, உப தபால் காரியாலயம் தனியார் சில்லறைக் கடை ஆகியன பிரதான சேவைகளாகும்.

வன்னிப் பிரதேசத்தின் மத்திய இடத்தின் செயற்பாடுகளை நோக்கின் பல குறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகளைக் காணமுடிகின்றது. இங்கு காணப்படும் குடியிருப்புகள் மிகவும் சிறியனவாகவும் பரவலாகவும் காணப்படுவதாலும், மக்கள் வருவாய் குறைந்தவர்களாக இருப்பதனாலும், மத்திய பொருட்களைப் பெறுவதில் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்கள்.

ஒரு மத்திய பொருள் அல்லது சேவை ஒரு நிலையத்தில் இருப்பதற்கு குறைந்தளவு ஆவது ஆதரவு தேவை எல்லா இடத்திலும் எல்லாப் பொருட்களும் சேவைகளும் வளர்ச்சி பெறமாட்டா. இதனால் மிகக் குறைந்த ஆதரவு நிலைக்கேற்ப இப் பொருள்களை மட்டங்களாகப் பிரிக்கலாம். இப் பொருட்களின் மட்டங்களுக்கமைய இப்பொருட்களை கொண்டுள்ள இடங்களின் முக்கியத்துவம் காணப்படும். உதாரணமாக ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படும் மத்திய இடங்களின் சேவைகளுக்கு குறைந்த ஆதரவு மாத்திரம் உண்டு. குறிப்பாக சிறிய கிராமங்களில் ஆரம்ப பாடசாலை மாத்திரமே காணப்படுகிறது. வன்னியில் அநேகமாக சிறிய கிராமங்களில் காணப்படும் பாடசாலைகள் தனி ஆசிரியர் பாடசாலைகளாக உள்ளன. இதனால் இங்கு அளிக்கப்படும் கல்விச்சேவை தரக்குறைவானதாகவுள்ளது. ஆகவே இச்சிறிய கிராமங்களை முன்னேற்றுவதற்கு இக்கிராமங்களின் சனத்தொகையை இவ்வுத்தம குடிசனத்தொகையளவிற்கு அதிகரிக்க வேண்டும். சிறிய குடியிருப்புக்களை ஒன்றிணைப்பதன் மூலம், அல்லது சிறிய குடியிருப்புக்களில் பொருளாதார நடவடிக்கைகளை அதிகரிப்பதன்மூலம் இவ்வுத்தம குடிசனத்தொகையை அடையலாம். சிறிய கிராமங்களில் வீடுகள் ஒன்றுக்கொன்று தூரத்தில் அமைந்திருப்பது நீர், தபால், விநியோகங்கள் போன்றவற்றிற்கு சிரமமாகவுள்ளது. மேலும் மின்சார விநியோகத்திற்கு ஆரம்ப முதலீடு மிகவும் அதிகமாகத் தேவைப்படும். இதனால் இக் கிராமங்களில் வாழிடங்களை ஓரிடத்தில் அமையக்கூடியதாக செய்யவேண்டும், வன்னியில் ஒருசில பெரும் தெருக்களைத் தவிர ஏனையவை சிறு வீதிகளாகவும், வண்டிப் பாதைகளாகவும் இருக்கின்றன. மழைகாலத்தில் பலபாதைகள்



போக்குவரத்துச் செய்யமுடியாதவையாகவும் சேறும் நீர்த்தேக்கங்கள் கொண்டவையாகவும் மாறிவிடுகின்றன. இப்பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு, ஒழுங்கான விநியோக முறைக்கும் போக்குவரத்து வசதி விருத்தி செய்யப்படவேண்டும்.

வன்னிப்பிரதேசம் இன்று சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கியதாக இருப்பினும் அபிவிருத்திக்கு ஏற்ற உள்ளார்ந்த வளங்கள் பலவற்றினைக் கொண்டுள்ளது. 1981ம் ஆண்டு இலங்கைக் காட்டுப் போர்வை அளவின்படி முல்லைத்தீவு' வவுனியா மாவட்டங்களின் மொத்த நிலப் பரப்பில் முறையே 75 வீதமும் 50 வீதமும் அடர்காடுகளாக இருக்கின்றன. இலங்கையின் காட்டுப்போர்வை விகிதம் 25 வீதமாகவுள்ளது குறிப்பிடத்தக்கது இதனால் வன்னியின் விவசாய அபிவிருத்திக்குக் குறிப்பாக உப உணவுப் பயிர்செய்கைக்கு ஏற்ற நிலங்கள் பெருமளவில் காணப்படுகின்றன. கிழக்குக் கரையோரச் சமவெளி, கனகராயன் ஆற்றுப் பள்ளத்தாக்கு, செட்டிகுளம் பகுதி போன்றன அபிவிருத்திக்குரிய பகுதிகளாகும். மேலும் மின்சாரத் திட்டத்தின் மூலம் தரைகீழ் நீரை நன்கு பயன்படுத்த வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே நில அபிவிருத்தி விவசாய அபிவிருத்திமூலம் இப்பிரதேசத்தின் பொருளாதாரத்தை வளர்க்கக்கூடிய வாய்ப்புக்கள் பலவுண்டு. இப்பிரதேசத்தின் அபிவிருத்தி ஒழுங்கான இடஞ்சார்பு முறையில் அமைய மத்திய இடங்களை படிமுறை அமைப்பில் திட்டமிட்டு ஒழுங்கான முறையில் விருத்தி செய்தல் மிகவும் இன்றியமையாதது. ஒவ்வொரு மட்டங்களிலும் இன்றைய சமூக பொருளாதார நிலைமைகளைப் பிரதிபலிக்கக்கூடிய சேவைகளும் பொருட்களும் கிடைக்க வழிசெய்ய வேண்டும். இதனால் பிரதேசம் முழுவதும் இடம் சார்பு ரீரிதியான ஒழுங்கிணைப்பினை ஏற்படுத்தலாம். மேலும் பொருளாதார அபிவிருத்தியையும் மக்களின் நகர வாழ்வு விருப்பத்தையும் கருத்திற் கொண்டு நடுத்தர, மத்திய இடங்களை (2ம், 3ம் மட்ட நிலையங்களை) அபிவிருத்தி செய்ய வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். இதில் ஏற்கெனவே இருக்கும் நிலையங்களை விருத்தியாக்கலாம். அல்லது பொருத்தமான இடங்களில் குறிப்பாக குடியேற்றத் திட்டங்கள் அல்லது நில அபிவிருத்திப் பகுதிகளில் புதிய விடயங்களைத் தோற்றுவிப்பதன் மூலம் இந்நோக்கங்களை நிறைவேற்றலாம்.

இப்பிரதேசத்தில் புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, ஓமந்தை, செட்டிகுளம், பூவரசங்குளம், பம்பைமடு, துணுக்காய், நட்டாங்கண்டல், மாமடுவ கொக்கிளாய், குமுளமுனை, புளியங்குளம் போன்ற நிலையங்களை விருத்தியாக்குவதன் மூலம் இப் பிரதேசத்தின் சேவைத்திறனை விருத்தியாக்கலாம். இதன்மூலம் மக்களுக்கு குறிப்பாக விவசாயிகளுக்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் வளங்க முடியும். ஆரம்பத்தில் இந் நிலையங்கள் மத்திய இடங்களாக இருப்பினும் நாளடைவில் விவசாயம், கடற்றொழில், மரம் அரிவுத் தொழில்கள் சார்பான கைத்தொழில் துறைகள் வளர்ச்சி பெற வாய்ப்பு ஏற்படும். இதற்கு இந்நிலையங்களின் பௌதிக வசதிகள் குறிப்பாக நீர் வசதி, வீட்டுவசதி, மின்சார வசதி என்பன விருத்தியாக்க வேண்டும். இந்நிலையங்களிலும் சுற்றுப் புறங்களிலும் வேலை செய்யும் அரசாங்க தனியார் ஊழியர்கள் குடும்பங்ளுடன் இந்நிலையங்களில் வாழ்வதற்கேற்ப வீட்டு வசதி அமைக்கப்பட வேண்டும். இத்தகைய வசதிகளை ஏற்படுத்தும் இடத்து பின்தங்கிய இடங்களில்வேலையாளர் பற்றாக் குறையைத் தீர்ப்பதுடன் தொழில் வெளியீடுகள் அதிகரிக்கவும் முடியும். சுற்றுப் புறக் கிராமங்களில் வேலை செய்வோர் மாலையில் இந்நிலையங்களுக்கு திரும்பிவிடலாம். இதனால் அவர்கள் விரும்பும் வசதியான வாழ்க்கையை இந்நிலையங்களில் பெற வாய்ப்புண்டு. இந்நிலையங்களில் மத்திய வகுப்பினர் குடும்பத்துடன் வாழ முற்படுமிடத்து கல்வி நிலையங்கள் வளர்ச்சி பெறும் மத்திய வகுப்பினருடைய எண்ணிக்கைக்கும் கல்விநிறுவனங்களின் வளர்ச்சிக்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு. மேலும் அரசாங்க தனியார்துறை ஊழியர்கள் இந்நிலையங்களில் குடும்பங்களுடன் வாழும்போது இவர்கள் தங்கள் ஊதியத்தின் பெரும் பகுதியை இந்நிலையங்களிலேயே செலவு செய்வார்கள். இதனால் இப்பகுதியிலிருந்து பெறப்படும் வருமானத்தின் பெரும்பகுதி மீளவும் இப்பகுதியிலேயே செலவிடப்படலாம். தற்போது இப்பின்தங்கிய பகுதிகளில் இருந்து பெறப்படும் உற்பத்திகள் விருத்தியடைந்த பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. எனவே நடுத்தர நிலையங்களின் வளர்ச்சி இப்பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக அமையலாம்.

மேற்குறிப்பிட்ட நிலையங்களைத் தவிர இப்பிரதேச அபிவிருத்தியில் வவுனியா, முல்லைத்தீவு, மாங்குளம் ஆகிய மூன்று நிலையங்களை பொருளாதார வளர்ச்சித் துருவங்களாகக் கொண்டு அவற்றை அதற்கேற்ற முறையில் விருத்தி செய்ய வேண்டும். வவுனியாவை ஓர் விவசாயத்தைக் அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் நிலையமாக மாற்ற வேண்டும். இதற்கு வவுனியாவில் காணப்படும் அடிப்படை வசதிகளும் இடஅமைவும் சாதகமாக அமைந்துள்ளது. வவுனியா, வன்னி, அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களின் எல்லையில் இருப்பதால் இப் பிரதேசங்களில் விளைவிக்கப்படும் நெல்லை வவுனியாவில் குற்றிப் பதப்படுத்தும் செயல்களை விருத்தியாக்கலாம். ஏற்கனவே வவுனியா இலங்கையின் நெல் குற்றும் கைத்தொழிலில் ஓர் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இதைப் போலவே உழுந்து, நிலக்கடலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட தொழில்களும் வளர வாய்ப்புண்டு. தானியங்களை அடிப்படையாகக்கொண்ட மிருக உணவுகளைத் தயாரித்தற்கு வாய்ப்புக்கள் நிறைய உண்டு. ஆகவே விவசாயக் கைத்தொழில் அடிப்படையில்தான் வவுனியா விருத்தியாக்கப்பட வேண்டும்,

மாங்குளம் புவியியல் ரீதியில் வடமாகாணத்தின்மையத்தில்அமைந்திருப்பதால் வடமாகாணம் முழுவதற்கும் சேவை செய்யக் கூடிய நிலையமாகவளருவதற்குவாய்ப்புண்டு. இதன் வளர்ச்சிக்கு முன்னோடியாக வட இலங்கைக்கு பொதுவான நிர்வாக காரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாலயங்கள் நிறுவனங்கள் போன்றன மாங்குளத்தில் அமைவதே பொருத்தமானதாகும். வவுனியாவைப்போல் இங்கும் நெல்குற்றும் ஆலைகள், விவசாய இயந்திரம்திருத்தும் தொழிற்சாலைகள், பால்பதனிடும் ஆலைகள், மரம் அரியும் ஆலைகள், தளபாடத் தொழிற்சாலைகள் என்பன வளர வாய்ப்புண்டு. இந்நிலையத்தின் வளர்ச்சிக்கு முன்னோடியாக பெரியளவு நீர் வினியோகத் திட்டமும் வீடமைப்புத் திட்டமும் தேவை. இந்நிலையத்தில் வீட்டுவசதிகளை ஏற்படுத்துவதன்மூலமே இங்குவேலை செய்வோரை குடும்பத்துடன் வாழ ஊக்குவிக்கவும் முடியும். வன்னிப் பிரதேசத்திற்குரிய பல்கலைக்கழகக் கல்லூரியும் மாங்குளத்துக்கு அண்மையில் இடவமைவு பெறவேண்டும்.

முல்லைத்தீவு நகரம் புதிய மாவட்டத்தின் தலைநகராக அமைந்துள்ளதனுல் இதுவளருவதற்கு வாய்ப்புக்கள் அதிகமுண்டு. இந்நகரின் வளர்ச்சி பெருமளவில் கிழக்குக் கரையோர நெடுஞ்சாலை அமைப்புடன் தங்கியுள்ளது வடக்கே பருத்தித்துறையும் தெற்கே திருகோணமலையும் இணைக்கப்படுமிடத்து கிழக்குக் கரையோர மீன்பிடித்துறையில் இதுபிரதான ஒரு நிலையமாக வளரலாம். இதனுல் மீன்பதனிடும் தொழிற்சாலைகள் வள்ளம் கட்டல், வலை செய்தல் என்பன விருத்தியடைய வாய்ப்புண்டு கிழக்குகரையோரப்பாதை விருத்தியாக்கப்படும்போது காங்கேசன்துறை, திருகோணமலை போன்ற துறைமுகங்களிலிருந்து முல்லைத்தீவிற்கு பொருட்களை இலகுவாக எடுத்துச்செல்வதுடன் உற்பத்திப் பொருட்களையும் யாழ்ப்பாணத்திற்கும் இழக்கிலங்கைக்கும் இலகுவாகக்கொண்டு செல்லலாம்.

இம்மாவட்டத்தின் முறிகண்டிப்பிள்ளையார் கோயில் அமைந்துள்ள இடம் ஓர் போக்குவரத்து மையமாக விருத்தியாக்கலாம். யாழ்ப்பாணம், – கண்டிவீதியில் செல்லும் வாகனங்களும், பிரயாணிகளும் முறிகண்டியில் தரித்துச்செல்வது வழக்கம். இதனுல் இதுஓர் பிரயாண வழிபாட்டு இடமாகவும், இளைப்பாறிச் செல்லுமிடமாகவும் விருத்தியாக்கலாம். இதற்கு இந்நிலையத்தில் மேலும் பௌதிக வசதிகளும் வாகனங்கள் தரிப்பதற்கு போதிய இடவசதிகளும் ஏற்படவேண்டும். பிரயாணிகள் இளைப்பாறிச் செல்வதற்கு போதியவசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும். மேலும் இதனை ஓர் சமயவழிபாட்டுத்தலமாகவும் விருத்தியாக்கக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

தொகுத்து நோக்கும்போது இவ்வன்னிப்பிரதேசத்தின் அபிவிருத்திக்குத் தடையாகக் காணப்படும் பிரச்சனைகளைத் தீர்வு காண்பதற்கு' மத்திய இடக்கோட்பாட்டின் அடிப்படையில் அமைய இடங்களை விருத்தியாக்குவதனுல் சமமான பிரதேச அபிவிருத்தித்தினை ஊக்குவிக்கலாம். இந்நிலையங்களின் வளர்ச்சியினுல் இப்பிரதேசத்திற்குத் தேவையான பொருட்களும் சேவைகளும் இலகுவாக கிடைக்க வழிபிறக்கும். மேலும் இம்மத்திய இடங்கள் கைத்தொழில் நிலையங்களாக வளர்ச்சிபெறுவதனுல் புதியவேலை வாய்ப்புக்களை உருவாக்கலாம். இந்த வளர்ச்சி நிலையங்களில் இப்பிரதேசங்களில் உற்பத்தியாக்கப்படும். செல்வங்களில் அதிக தொகை மீண்டும் முதலீடாக்கப்படலாம், இதனுல் விருத்தியடைந்த பகுதிகளினுல் பயனுருவப்படும் நிலையும் தவிர்க்கப்படும். இதன் மூலம் நகரங்களின் வளர்ச்சியும் குடிசனஇடப்பெயர்வில் தற்பொழுது காணப்படும் பால் விகிதசார சமமின்மையும் தீர்க்கப்படலாம் வன்னிப்பிரதேசத்தில் நடுத்தர நிலையங்களின் வளர்ச்சிமூலம் வன்னிமக்களின் சமூக பொருளாதார நிலை உயர்வடைவதுடன் யாழ்ப்பாணக்குடாநாட்டுப் பகுதியில் நெருக்கமாக வாழும் மக்கள் தொகையின் ஒருபகுதியினர் வன்னியில் புது வாழ்வினைத் தேடவும் சந்தர்ப்பம் கிடைக்கலாம்.


**Selected References**

Balasundarampilla P, — The Hierarchy of Central Places in Nothern Ceylon Ph. D. Thesis — 1972 Durham

Dash. J. and Efrat. E; — The Israel Physical Master Plan Jerusalem 1964.

Lowis. J P — Manual of the Vanni Disricts of nothea Province -Ceylon.
Govt. Printer, Colombo 1895.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளுக்கோர் புதுமை நாடுவது உண்மை

இவற்றை அளிப்பதுதான்

# சீமாட்டி

# ஜவுளி சமுத்திரம்

158. நவீனசந்தை, மின்சார நிலைய வீதி.

யாழ்ப்பாணம்.

போன் : 24096

# NEW TONE ELECTRICALS

Phone : 23016

141, 143, Stanley Road,

JAFFNA.

எஸ் — லோன் உற்பத்திப் பொருட்களுக்கு
வடமாகாண விநியோக நிலையம்

மகாராஜா நிறுவனம்

நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

போன் : 23724


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானின் வெளிநாட்டு உதவி

கலாநிதி கா. ரூபமூர்த்தி

## 1. நிலைமை

### 1:1 முன்னைய நிலை,

இரண்டாவது உலகமகாயுத்தத்தில் தோல்வியுற்ற ஜப்பான் 1952ஆம் ஆண்டு சான்பிரான்ஸிஸ்கோ ( Sanfrancisco ) சமாதான ஒப்பந்தத்தின் மூலம் உலக சமுதாயத்தில் சேர்க்கப்பட்டது. ஜப்பானின் முறையான வெளிநாட்டுதவி (Foreign aid) அந்நாடு 1954 ஆம் ஆண்டு கொழும்புத் திட்டத்தில் (Colmbo Plan) அங்கத்துவ நாடாகச் சேர்ந்த பின்பே ஆரம்பமாயிற்று அத்துடன் யுத்த காலத்தில் அழிவுக்குள்ளான பர்மா, இந்தோசீனு, போன்ற நாடுகளுக்கான இழப்பீடும் (Reparation) வழங்கப் பட்டது. இவை மட்டுமன்றி 1958ஆம் ஆண்டுக்குப்பின் முறையான கடன்களும் (Official loans) இந்தியா. பாகிஸ்தான், பிறேசில் போன்ற நாடுகளுக்கு வழங்கப் பட்டன.

தனியார் உதவிகள் (Private Assistance) 1950 ஆம் ஆண்டு ஜப்பானிய ஏற்றுமதி—இறக்குமதி வங்கி நிறுவப்பட்டதில் இருந்து ஆரம்பமாயிற்று. இது முதன் முதல் 1951ஆம் ஆண்டு இந்தியாவிற்குக் கொடுப்பதன் மூலம் ஆரம்பிக்கப்பட்டுப் பின் பல ஆசிய, தென்னமெரிக்க, ஆபிரிக்க நாடுகளுக்கும் வழங்கப்படலாயிற்று.

### 1:2 தற்போதைய நிலை

1982ஆம் ஆண்டு ஜப்பானின் வெளிநாட்டுப் பொருளாதார உதவி (Overseas Economic Assistance) 8770·0 மில்லியன் டொலராகும். இதில் 3020·0 மில்லியன் டொலர் முறையான அபிவிருத்தி உதவியும் (Official Development Assistant : ODA), 5720·0 மில்லியன் டொலர் அரசாங்க கடனும், தனியார் கடனுதவியுமாகும். இக்கடனுதவி ஜப்பானின் அவ்வாண்டு மொத்த வருமானத்தின், (G. N, P.) 0.87 சதவீதமாகும். 1981ஆம் ஆண்டு இதன் பங்கு மொத்த வருமானத்தின் 0·92 வீதமாகக் காணப்பட்டது. 1971ஆம் ஆண்டின் பின் ஜப்பான் அமெரிக்காவை அடுத்து கூடுதலான வெளிநாட்டுதவியை வழங்கி வருகின்றது. எனினும் தற்பொழுது சற்று அதிகரித்து வரினும் ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது முறையான அபிவிருத்தி உதவி ( O D A ) குறைவாகவே காணப்படுகின்றது. மேலும் தொழில் நுட்ப உதவி குறைவாகக் காணப்படுவதுடன் கடனுக்கான நிபந்தனைகளும் கடுமையானவைகளாகும்.

### 1 · 3 குறைவான முறையான அபிவிருத்தி உதவி.

முறையான அபிவிருத்தி உதவி (ODA) என்னும் பொழுது இது இருமுக உபகாரம் (Bilateral grants) இருமுறையானகடன் (Bilateral loans) ஏனைய அரசாங்கநிதியுதவி ஆகியனவற்றிற்கே பெரிதும் பொருந்தும் ஜப்பானைப் பொறுத்தவரையில் ஏனைய அரசாங்க நிதியுதவி, தனியார் நிதியுதவி என்பன முறையான அபிவிருத்தி உதவியை விட அதிகமாகக் காணப்படுகின்றது, 1982-ம் ஆண்டு மேற்கூறியவை இரண்டும் முறையே 34·4, 65 · 6, வீதங்களாகும், இவ்வாறு முறையான அபிவிருத்தி உதவி குறைவாகக் காணப்படுவதுடன் அதன் பங்கு மேலும் குறைந்துசெல்கின்றது, அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இந்த முறையான அபிவிருத்தி உதவி குறைவாகக்

Dr. K. RUPAMOORTHY B. A. (Sp.) M. Sc.; Ph. D. (Japan)
Temporary Asst. Lecturer
Department of Geography, University of Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது அண்மைக் காலத்தில் அதிகரித்துவரும் ஜப்பானிய வெளிநாடுக ளுக்கான பொருளாதார உதவியில் பெரும் பங்கு நேரடி முதலீடு (Direct Investment), ஏற்றுமதிக்கான கடன் (Export Loans), தனியார் நிதி வழங்கல் (Private Finance) என்பவற்றின் மூலமே மேற்கொள்ளப்படு கின்றது.

இருமுக உபகாரத்தினை நோக்கும் பொழுது அதில் ஒரு சிறு பகுதியே திருப் பிச் செலுத்தாத பகுதியைச் சேருகின்றது. அதில் இன்னோர் பகுதியான தொழில்நுட்ப உதவியும், (Technical Assistance) ஏனைய மேற்கு நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது குறைவாகவே காணப்படுகின்றது.

முறையான கடனுதவியில் முக்கிய பங்கை வகிப்பது யென் (Yen) - இது உள் நாட்டு நாணயம்) கடனாகும். இவ்வகை யான கடனை ஜப்பான் வெளிநாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு நிதி (Overseas Economic Co - operation fund) மூலமோ, ஏற்றுமதி – இறக்குமதி வங்கிமூலமோ, வளர்முக நாடுகளுக்கு வழங்குகின்றது, இவ் வுதவி நிதி மூலமும், பொருட்களின் ஏற் றுமதி மூலமும் வழங்கப்படுகின்றது. இக் கடனுதவியின் பெரும் பகுதி தென் கொரியா, இந்தோனேசியா, பிறேசில், பேரு, நைஜீரியா, கானு போன்ற நாடுக ளுக்கு வழங்கப்படுகின்றது. இதற்குக் கார ணம் அந்நாடுகளில் காணப்படும் மூலவளங் களை அபிவிருத்தி செய்வதும் தமக்குத் தேவையான மூலப் பொருளைப்பெறுவது மாகும்.

### 1:4 கடுமையான உதவி நிபந்தனைகள்

வளர்முக நாடுகள் கடன்களைப்பெறும் பொழுது தமக்குச் சாதகமான நிபந்தனை களையே பின்பற்ற விரும்புகின்றன. உதார ணமாக நீண்டகாலத்தில் திருப்பிச் செலுத்தக் கூடியதும், குறைந்த வட்டியு டையதுமான கடன்களையே அந்நாடுகள் பெறவிரும்புகின்றன. பெரும்பாலான வளர் முக நாடுகள் பெறும் உதவிகள், முன்பு பெற்ற கடன், அவற்றிற்கான வட்டி என்பவற்றைத் திருப்பிக் கொடுப்பதற்கா கவே உபயோகப் படுத்தப்படுகின்றன. இதனுல் அண்மைக் காலங்களில் வளர்முக நாடுகள் வெளிநாட்டு உதவிகளைப் பெறும் பொழுது கூடியளவு கடன் சகாயம், சாதகமான நிபந்தனைகளில் பெறமுயற் சிக்கின்றன.

அண்மைக் காலத்தில் ஜப்பானு டைய வெளிநாட்டுக் கடனுதவி அதிக ரித்து வருகின்றது. ஆயினும் ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது கடனுக்கான நிபந்தனைகள் கடு மையாகவே காணப்படுகின்றன. உதார ணமாகக் கடனடைக்கும் காலம் குறு கியதாகவும், வட்டிவீதம் அதிகமாகவும் காணப்படுகின்றது. தாமதப்படுத்தும் கொடுப்பனவுக் காலம், யென் கடன் என்பன தவிர்ந்த கடன்களில் நிபந்தனை மிகக் கடுமையானவையாகவே காணப்படு கின்றன.

வளர்முக நாடுகள் கடன் பெறும் பொழுது எதிர் நோக்கும் இன்னோர் பிரச் சனை அப்பணத்தை கடன்வழங்கும் நாடு களில் பொருட்களைப் பெற உபயோகிக்க வேண்டும் என்னும் நிபந்தனையாகும். இதில் குறிப்பிட வேண்டிய அம்சம் அப் பொருட்கள் விலை குறைந்தனவா என்ப தாகும். ஒரு சில சந்தர்ப்பங்களை விட ஏனையவற்றில் ஜப்பான் கடன் வழங்கலில் இந்நிபந்தனையைக் கடைப்பிடிக்கின்றது. இத்தகைய பிணைப்பு உதவி(Tied Assistance) ஜப்பானில் மட்டுமன்றி ஏனைய வளர் சியடைந்த நாடுகளிலும் காணப் படுகின்றது. இவ்வாறான பிணைப்புதவி யின் மூலம் ஜப்பானும் ஏனைய கைத் தொழில் நாடுகளும் தமது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்ய வாய்ப்பு ஏற்படுத்துவதென்பது உண்மையே. குறிப் பாக சர்வதேச சந்தையில் ஜப்பானின் பொருட்கள் பிரபல்யம் அடையாதகாலத் தில் அதன் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு இம்முறை பொருத்தமான தாகக் காணப்பட்டதெனலாம். எனினும் வளர்முக நாடுகளில் தாம் பெறும் வெளி நாட்டுதவிகளை பயனுள்ளதாக்க முயலு வது முறையானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய குறைபாடுகளை மனதில் கொண்டு ஜப்பான் அண்மையில் வெளி நாட்டுதவியில் திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றது. இதற்காக வெவிநாட்டுப் பொருளாதார நிதியத்தினதும் (Overseas Economic Co-operation Fund), ஏற்றுமதி -இறக்குமதி வங்கியினதும் சட்டதிட்டங் களில் மாற்றங்கள் கொண்டுவரப்பட் டுள்ளன. அத்துடன் ஜப்பானின் கடனுதவி மூலம் ஓர் வளர்முகநாடு ஏனைய வளர்முக நாடுகளிலிருந்தும் பொருட்களை இறக்குமதி செய்ய வாய்ப்புகளை அளிக்கிறது. இவற்றை விட வேறும் பல சலுகைகள் வழங்க ஜப் பான் முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்க தாகும்.

### 1.5 சில பிரதேசங்களில் கூடுதலான ஈடுபாடு

1971 ஆம் ஆண்டு ஜப்பானின் வளர் முகநாடுகளிலான முதலீடு 493.0 மில்லியன் டொலராகவும், பின் 1972 ல் 1109·0 மில்லியன் டொலராகவும் அதிகரித்தது. 1972 மார்ச் வரையிலான முழுத்தொகை முதலீடு (Cumulative Investment) 4481.0 மில்லியன் -டொலரிலிருந்து 1973 ல் 6773.0 டொலராக அதிகரித்தது.

வளர்முக நாடுகளின் பெரும்பாலான முதலீடு ஆசிய நாடுகளில் முதலீடு செய் யப்பட்டது. ஜப்பானின் பொருளாதாரம் வளர்ந்து செல்வதற்கமைய அங்கு தொழி லாளரின் கூலியும், அதிகரித்துச் செல்லலா யிற்று இதனுல் கூலி குறைவாகக் காணப் படும். தாய்லாந்து, இந்தோனிசியா, கொரியா, போன்ற நாடுகளில் கைத் தொழில் கூட்டு முயற்சிகள் பலவற்றில் ஜப்பானிய முதலீடு அதிகரிக்கலாயிற்று.

அபரிமிதமான கைத்தொழில் விருத்தி யினுல் ஜப்பானிற்கு அதிகளவு மூலப்பொ ருட்கள் தேவைப்படலாயிற்று. 1950 ஆம் ஆண்டு 1.3 மில்லியன் தொன்னுககாணப் பட்ட இரும்புத்தாதின் தேவை 1973ஆம் ஆண்டில் 130 மில்லியன் தொன்னுகஅதிக ரித்தது. இதே போன்று 30 மில்லியன் கிலோ லீற்றருக இருந்த பெற்ருேலியத் தேவை 289 மில்லியன் கிலோ லீற்றராக அதிகரித்தது. இவ்வாருன மிதமிஞ்சிய மூலப்பொருள் தேவை மத்திய கிழக்கு தென்கிழக்கு, ஆசியா போன்ற நாடுகளில் ஜப்பானின் முதலீட்டை அதிகரிக்கத் தூண்டியது.

## 2, எதிர்காலக் கடமை

ஜப்பானின் பொருளாதாரம் மேலும் விரிவடைவதினுல் வளர்முக நாடுகள் மேலும் மேலும் அதன் பொருளாதார உதவியை எதிர்பார்க்கின்றன. ஜப்பானின் பொருளாதார உதவி எதிர் காலத்தில் எத்தகையவாறு இருத்தல் வேண்டும் என் பது யாவராலும் கூர்ந்து கவனிக்கப்படும் விடயமாகும்.

### 2 : 1. முறையான அபிவிருத்தி உதவி (O. D. A)

பல கால விவாதத்தின் பின் அபி விருத்தியடைந்த நாடுகளின் பொருளா தார உதவி அவற்றின் மொத்த உற்பத் தியின் (G. N. P) ஒரு வீதமாக இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப் பட்டது. அண்மைக் காலத்தில் மொத்தப் பொரு ளாதார உதவியில் முறையான அபி விருத்தி உதவியின் பங்கு முக்கியத்துவம் பெற்று வருகின்றது. சர்வதேச அடிப் படையில் இது மொத்த வருமானத்தின் 0 · 7 வீதமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் பொருளாதார உதவி தீர் மானிக்கப்பட்ட மொத்த வருமானத்தில் ஒரு வீதத்தை இன்னமும் அடையாமல் இருக்கின்றது. 1982ம் ஆண்டில் இது 0 · 87 வீதமாக இருப்பதுடன் முறையான அபிவிருத்தி உதலி (O D A) 0 21 வீத மாகக் காணபடுகின்றது. பொருளாதார உதவியில் இது முக்கியமெனக் கருதப்படு வதனுல் பல நாடுகள் ஜப்பான் இந்த உதவியை அதிகரிக்க வேண்டுமெனக் கோருகின்றன. ஜப்பானின் பொருளாதார உதவி மேற் குறிப்பிட்ட ஒரு வீத இலக்கை அடைந்தாலும், முறையான அபிவிருத்தி உதவி அரசாங்க நிதியில் இருந்து பெறப் படுவதனுல் சர்வதேச அடிப்படையில் நிர் ணயிக்கப்பட்ட 0 · 7 வீத இலக்கை அடை யுமா என்பது சந்தேகத்திற்குரியதாகும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பான் இவ்வித உதவியை அதிகரிக்க சகலவித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

2 : 2. நன்கொடை உதவிகளை அதிகரித்தல்

பெரும்பாலானவர்கள் பொருளாதார உதவி, ஒத்துழைப்பு என்னும் பொழுது இது திருப்பிச் செலுத்தாத முழுமையான உதவியென்றே கருதுகின்றனர். குறிப்பாகக் கடன் பழுவினால் பாதிக்கப்படும் குறை விருத்தி நாடுகளும், பொருளாதார விருத்தியில் நலிவான நாடுகளும் நன்கொடையையே மிகச் சிறந்த பொருளாதார உதவியெனக் கருதுகின்றன இதனாலேயே பல சர்வதேச நிறுவனங்கள் முறையான அபிவிருத்தி உதவி பொருளாதார உதவியில் 0 . 7 வீதத்தை வகிக்க வேண்டுமென வற்புறுத்தி வருகின்றன. ஜப்பானைப் பொறுத்தவரை இது முன்பு கூறியது போல 0 . 21 வீதமாக இருப்பதுடன் அபிவிருத்தி உதவிக் கூட்டு (Development-Assistant Committee D. A. C) நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.

ஜப்பானின் நன்கொடை உதவிகள் இரண்டாவது உலக மகாயுத்தத்தில் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான நட்டஈடாகவே ஆரம்பித்தன. அத்துடன் அவை பெரும்பாலும் செலுத்தி முடிவடைந்துவிட்டன. இதனை ஈடுசெய்வதற்கு தொழில் நுட்ப உதவிகளை அதிகரிப்பதுடன் ஏனைய நன்கொடை உதவிகளும் விரிவுபடுத்தப்பட வேண்டும். இதுவரை ஜப்பானிய உதவிகள் சில குறிப்பிட்ட உற்பத்தித்துறை சார்ந்தவையாகவே காணப்பட்டன. இதனாலேயே பல உதவி பெறும் நாடுகள் ஜப்பானை ஒரு ''பொருளாதார கரிசனை'' மட்டும் உடைய நாடெனக் குற்றம் சாட்டுகின்றன. இதனால் ஜப்பான் தனது நன்கொடை உதவிகளை அதிகரிப்பதுடன் வறிய நாட்டு மக்களுடைய மருத்துவம், கல்வி போன்ற சமூக வசதிகளை மேம்படுத்தக்கூடிய உதவிகளை அதிகளவு வழங்க முன்வரவேண்டும்.

அதுமட்டுமன்றி ஜப்பான் தனது மூலப்பொருள் குறிப்பாகக் கனிப்பொருள் தேவைக்கு பிறநாடுகளையே தங்கியிருக்கின்றது. இதனால் எதிர்காலத்தில் இத்தகைய பொருட்கள் காணப்படும் நாடுகளுடன் நெருக்கமான தொடர்பு ஏற்படவாய்ப்புண்டு இந்நாடுகளில் உள்ள மூலவளங்களை அபிவிருந்தி செய்யவேண்டுமானால் அந்நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவி வழங்கப்படவேண்டும். மூலவளங்களின் அபிவிருத்தி என்னும் அடிப்படையில் நோக்கும் போது நன்கொடை உதவி மூலம் சமூக அபிவிருத்திகளும், மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அதேவேளை உதவி நன்கொடை மூலம் தொழில்நுட்ப உதவிகளும் வழங்கப்படல் வேண்டும். தொழில்நுட்ப உதவிகள் எல்லா வளர்முக நாடுகளாலும் நன்கு வரவேற்கப்படுகின்றது. இதன் மூலம் வளர்முக நாடுகளில் உள்ளவர்கள் பொருளாதார சமூக அபிவிருத்திகளை தாங்களே ஆக்குவதற்குப் பயிற்றப்படுகின்றார்கள் இதனால் உள்நாட்டு தொழில்நுட்ப அறிவு வளர்ச்சியடைவதுடன் இருநாடுகளுக்குமிடையிலான பரஸ்பர நல்லெண்ணம் வளரவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. ஜப்பானின் இத்தகைய உதவி ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது குறைவாகக் காணப்படுகின்து. வளர்முக நாடுகளில் மட்டுமன்றி ஜப்பான் நாட்டிலும் இத்தகைய உதவி அதிகரிக்கப்பட வேண்டுமென்று கோரப்படுகின்றது. எனவே கூடிய விரைவில் இத்தகைய உதவியை அதிகரிக்க ஜப்பானிய அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக கல்வி மருத்துவம் போன்றவற்றிற்கான தொழில்நுட்ப உதவி அதிகரிக்கப்படுவதுடன் பல்வேறு துறைகளில் வழங்கப்படும் உதவிகள் ஒருமுகப்படுத்தப்பட வேண்டியதும் அவசியமாகும். சில குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும்போது மூலதனத்துடன் தொழில் நுட்ப உதவியும் தேவைப்படுகின்றது ஒரு உதவி இருந்தும் இன்னொர் உதவி இல்லாதிருப்பதினால் அதில் எந்தவித பலனும் இல்லாமல் போய்விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2 : 3 உதவிக்காய நிபந்தனைகளை இலகுவாக்கல்

அபிவிருத்திக்காகப் பெறப்படும் கடன்கள் திருப்பிச் செலுத்தப்படவேண்டியவையே. காலத்திற்குக் காலம் இவ்வாறு பெற்ற கடன்கள் ஒன்று சேர்ந்து வளர்முக நாடுகளுக்கு பெரும் பழுவாகக் காணப்படுவதுடன், அரிதாகப் பெறப்படும் இன்றைய பொருளாதார உதவியின் பெரும்பகுதி முன்னைய கடன்களைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய கருத்திலும் பெறப்படும் பொருளாதார உதவிகளுக்கான நிபந்தனைகள் இலகுவானவையாக இருத்தல் வேண்டுமென்பது புலனாகின்றது. அபிவிருத்தி உதவிக்கூட்டு (DAC), ஐக்கிய நாடுகளின் வர்த்தக அபிவிருத்திக் கூட்டு நிறுவனம் (UNTCAD) என்பவற்றினால் காலத்திற்குக் காலம் இதுபற்றிப்பல சிபார்சுகள் செய்யப்படுகின்றன. குறிப்பாக 1972 ஆம் ஆண்டு வர்த்தகக் கூட்டு அபிவிருத்திநிறுவனக் கூட்டத்தில் முறையான அபிவிருத்தி உதவியில் (ODA) நன்கொடை (GRANT) 84 சத வீதத்தை அடக்க வேண்டுமென ஏற்றுக் கொள்ளப்பட்டது, எனினும் ஜப்பானின் பங்கு இன்றைய வரைக்கும் குறைவாகவே காணப்படுகின்றது.

வளர்முக நாடுகள் எதிர்நோக்கும், கடன் பழுவைக் குறைப்பதற்கும், உதவிகளை ஆக்கபூர்வமாக்குவதற்கும் ஜப்பான் மேற்கூறிய இலக்கை அடையுமுகமாக நன்கொடை உதவியை அதிகரிப்பதுடன் வெளிநாடுகளுக்கான பொருளாதாரக் கூட்டு நிதியையும் அதிகரிக்க வேண்டும்.

உதவிகளுக்கான நிபந்தனைகள் இலகுவாக்கப்படுவதுடன் கட்டுப்பாடுகளும் தளர்த்தப்படல் வேண்டும். அண்மைக் காலத்தில் வளர்ச்சியடைந்த நாடுகள் பல இதனைத் தளர்த்த விரும்புவதில்லை. ஆயினும் ஜப்பான் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளையும் அவ்வாறு செய்யத் தூண்டவேண்டும்.



### 2:4 அபிவிருத்திக்கான உள்நாட்டுச் செலவிற்கு உதவுதல்

உதவி நிபந்தனைகளைத் தளர்த்திபிணைப்புக்களை நிறுத்துவதுடன் அபிவிருத்திக்கான உள்நாட்டுச் செலவினங்களைக் கொடுத்து உதவுவதன் மூலம் கடன் உதவிகளின் பயனை அதிகரிக்கக் கூடியதாகவிருக்கும். இங்கு உள்நாட்டுச் செலவினம் என்று கூறும்போது அது ஒரு அபிவிருத்தித் திட்டத்தை வெளிநாட்டு நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தும் பொழுது ஏற்படும் உள்நாட்டுச் செலவினங்களைக் குறிக்கின்றது. இதுவரை காலமும் இவ்வாறான உள்நாட்டுச் செலவினங்களை உதவிபெறும் நாடுகளே பொறுப்பேற்று வந்தன வளர்முக நாடுகள் இதனைப் பெறுவதில் மிகுந்த கஷ்டமுறுகின்றன. இவ்வாறான காரணத்தினால் ஒரு திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொழுது உள்நாட்டுச் செலவின வசதி அத்திட்டத்தின் நடைமுறையைப் பெரிதும் பாதிக்கின்றது. அண்மைக் காலத்தில் பல ஜப்பானிய நிதியுதவிகளில் மேற்கூறிய உள்நாட்டுச் செலவினத்தின் ஒரு பகுதியும் அவ்வுதவியில் அடக்கப்படுகின்றது. இத்தகைய வசதிகள் குறிப்பாகக் கொரியா, பேரு, வியட்னாம், போன்ற நாடுகளுக்கு வழங்கப்படுகின்றது. எனினும் ஜப்பான் இத்தகைய உதவி குறைவாக இருப்பதினால் இதனை மேலும் அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இத்தகைய முறைமூலம் திட்டங்களைத் திறமையாகவும், துரிதமாகவும் நடைமுறைப்படுத்த முடிவதுடன் வழங்கும் பொருளாதார உதவி பயனுடையதாக அமைய முடியும்.

### 2 : 5 உதவியை ஏனைய பிரதேசங்களுக்கும் விரிவுபடுத்தல்.

ஜப்பான் மேலும் பல நாடுகளுக்கு உதவிகளை வழங்கவேண்டும். அண்மைக் காலம்வரை பெரும்பாலான பொருளாதார உதவி ஆசிய நாடுகளுக்கே வழங்கப்பட்டது. எதிர்காலத்தில் இவ்வுதவி ஏனைய பிரதேசங்களுக்கு விரிவுபடுத்தப்படுவதுடன் அவ்வப் பிரதேச நிலைமைக்கு ஏற்றவாறு அவ்வுதவிகள் வழங்கப்படவேண்டும். ஜப்பான் பொதுவான உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை வழங்குவதுடன் ஒவ்வோர் நாடும் அடைய முற்படும் இலட்சியங்களுக்கு ஏற்ற வகையிலும் உதவிகளை வழங்க முன்வர வேண்டும். குறிப்பாக ஆபிரிக்க நாடுகளை எடுத்துக் கொண்டால் அந்நாடுகளில் பொருளாதார சமூக அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ஜப்பான் பொருளாதார உதவியை வழங்க வேண்டும். இதன் மூலம் அந்நாடுகளின் விவசாயம் அரசாங்கத் தொழில் - கைத்தொழில் போன்றவற்றை அபிவிருத்தி செய்ய முடியும்.

## முடிவுரை

ஜப்பானின் வெளிநாட்டுதவி பற்றி பல்வேறு நாடுகளில் பல்வேறு கருத்துக்களை நிலவுகின்றன. இப்படியான சாதக - பாதகமான கருத்துக்கள், அவர்களுடைய பொருட்கள் வளர்முக நாடுகளின் சந்தைகளில் அதிகளவு காணப்படுவது மட்டுமன்றி அந்நாடுகளில் ஏற்படும் அபரிதமான தனியார் முதலீடுகளினுலும் ஜப்பானின் பொருளாதாரச் செல்வாக்கு உதவி பெறும் நாடுகளில் வேகமாக அதிகரித்து வருகின்றது, இதன்செல்வாக்கு உள்நாட்டு விவகாரங்களிலும் ஏற்படலாமென அஞ்சப்படுகின்றது. இதனுல் வெளிநாட்டுதவிகள் அதிகரிக்க - உள்நாட்டுப் பொருளாதாரச் சுதந்திரம் பாதிக்கப்படலாமென உதவி பெறும் நாடுகள் அச்சம் தெரிவிக்கின்றன. பொருளாதார உதவி அதிகரித்தாலும், உள்நாட்டுச் சுதந்திரமும், இறைமையும் பேணப்படல் வேண்டும்.

ஜப்பானிய நாட்டுக்கெதிரான கண்டனத்தின் இன்னுேர் காரணம், வளர்முக நாடுகளில் சில ஜப்பானியப் பயணிகளின் சுற்றுலா நலத்தையும், ஜப்பானியவர்த்தக ஸ்தாபனங்களின் போட்டியுமாகும் உள்நாட்டவர்களுக்கிடையே மனக் கசப்பு ஏற்படாவண்ணம் மேற்கூறியவர்கள் நடந்து கொள்ள வேண்டும்: அத்துடன் பொருளாதார உதவி வழங்கும் போது அரசாங்கங்களும் - தனியார் நிறுவனங்களும் உதவி பெறும் நாடுகளின் கருத்துக்களை உதாசீனம் செய்யாதிருப்பதுடன் அந்நாடுகள் அவாவுறும் திட்டங்களுக்கு ஏற்ற முறையில் உதவி வழங்கி ஜப்பான் தன் நற்பெயரைக் காப்பதுடன் இந்நாட்டு நட்பையும் வளர்க்க வேண்டும்.

ஜப்பான் இவ்வாறுன முறைகளில் ஈடுபடாதபட்சத்தில் வளர்முக நாடுகளினதும் வளர்ச்சியடைந்த நாடுகளினதும் கண்டனத்திற்குள்ளாகும் என்பதில் ஐயமில்லை வெளிநாட்டு உதவிகள் ஒருங்கிணைக்கப்படாவிடின் அல்லது வர்த்தகத்தையும் - வெளிநாட்டுச் சம்பாத்தியத்தையும்மட்டும் கருத்திற் கொள்வதாயின் ஜப்பான் சர்வதேச சமுதாயத்தில் இருந்து பகிஸ்கரிக்கப்படலாம்.

பொருளாதார உதவியின் நோக்கம், உதவி பெறும் நாட்டின் பொருளாதார சுதந்திரத்தைப் பேணுவதும், சாதகமான உலக சமுதாயத்தை உருவாக்குவதுமாகும். பொருளாதாரசுதந்திரம் என்னும்பொழுது, வறிய நாடுகளின் பொருளாதாரத் தாழ்மையை அகற்றி, பல்வேறு சமுதாய நிலைமைகளில்உள்ள மக்களினது வாழ்க்கைத் தரத்தைஉயர்த்தி மனிதப் பண்புகளுக்குப் பொருத்தமான கலாச்சாரம், பொருளாதாரம் என்பன கொண்ட வாழ்க்கையை ஏற்படுத்துவதாகும், பொருளாதார உதவி ஒரு குறிப்பிட்ட செல்வந்த மக்களுக்கு வழங்கப்படும் பட்சத்தில் ஜப்பானுக்கும் உதவி பெறும் நாட்டுக்கும் விரோதமாக, இலஞ்ச ஊழல்கள் வளர வாய்ப்பு ஏற்படுவதுடன், பல்வேறு சமூகங்களுக்கிடையே அமைதியின்மையும் ஏற்படுகின்றது. திடமான தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப உதவாத அல்லது உண்மையான பொருளாதார சுதந்திரத்தையும், மக்கள் நன்மையையும் மேம்படுத்தாத ''பொருளாதார உதவி'' பொருளாதார உதவியாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Bibiliography :


1. Takshi Ihara : Japan's Economic Position in the World, Developing wor ld Tokyo, 1971.

2. Herman Kahn : The Concept of Aid, Far Eastern Economic Review, 7-2-1965.

3. Dick Wilson : Japan as Donor. Far Eastern Economic Review, 14-4-1966.

4. Oecd : Development Assistance Efforts and Policies 1967, Review, OECD Publication, 1972.

5. Oecd : Geographical Distribution of Financial Flows to less developed countries, OECD Publication, 1972.

6. Maurice Dolb : Economic growth and under developed countries, Lawrence and wishart London, 1963

7. Harrod, R. F. : International Economics.

8. Ashashi Shimbum : Japan Quarterly, Ashashi Shimbum Tokyo, 1974.

9. Kabushiki Kaisha : Nippon Hokksei Suei (Japanese), Kokkai Sha, 1974.

10. Kabushiki Kaisha : Nippon no Sugata (Japanese), Kokkai sha; 1972.

11. Sekai no Hataraki Sha : Minna no Nanhoku Mondai (Japanese), Seitai no Hataraki Sha, 1975.

12. Kaigai Keisai Kyodryoku Kyocho Undo (Japanese), Kaigai Keisai Kyodryoku, 1974.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VETO TRADES

Electrical Motors Cycle Parts

**4, Stanley Road**

**J. A. M. C. Building**

**Jaffna**

## அமுத வாக்கு

பிரம்பும் தடியும் உபயோகிக்காமல், கோபமும் குறையும் இல்லாமல் சம்பளத்தையும் வெகுமதியையும் எதிர்பாராமல் நமக்குக் கற்பிக்கும் சிறந்த ஆசான் நூல்களே. நூல்களைச் சென்றடைந்தால் உறங்காமல் சோர்வு கொள்ளாமல் அவை நமக்கு அறிவு கற்பிக்கும். நீங்கள் தேடும் போது எதையும் மறைக்காமல் அளிக்கும்- நீங்கள் பெருந்தீங்கு செய்தாலும் வசைமொழி கூறுமல் உங்கள் அறியாமையைக் கண்டு நகைக்காமல் கற்பிப்பவையும் நூல்களே.

"மில்க்வைற் உற்பத்திகளுக்கு நீங்கள் அளிக்கும் ஆதரவு நாட்டின் நற்பணிக்கே"

## மில்க்வைற் சவர்க்கார தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி எண் 23233

# விருத்தியடைந்து வரும் நாடுகளில் தொழிலின்மையும் அதனோடு தொடர்புடைய பிரச்சினைகளும்

ஜயந்தி அற்புதநாதன்

அபிவிருத்திக் குறிகாட்டிகளுக் கேற்ப நாடுகள் விருத்தியடைந்து வரும் நாடுகள் விருத்தியடைந்த நாடுகளெனப் பாகுபடுத்தப் பட்டுள்ளன. வாழ்க்கைத்தரக் குறைவு, தலா வீதவருமானப் பற்றாக்குறை, சமூக நலக்குறி காட்டிகளின் பாதக நிலைமை போன்றவற்றைக் கொண்டுள்ள நாடுகள் விருத்தியடைந்து வரும் நாடுகள் எனப் பிரிக்கப்பட்டுள்ளன தொழிலின்மை அல்லது வேலையின்மையென்பது உற்பத்திக் காரணிகளில் ஒன்றான தொழிலாளர் வேலை பார்க்கும் ஆர்வமும் அவசியமும்இருக்கின்ற போதும் கூட வேலையற்றிருக்கும் நிலையே எனக் கருதப்படுகிறது.

விருத்தியடைந்து வரும் நாடுகளில் வேலையின்மை பற்றி ஆராய்ந்த எட்கார். ஓ. எட்வேட்ஸ் (Edgar. O. Edwards) என்னும் பேராசிரியர் வேலையின்மையை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரித்தார். அவை முழு வேலையின்மை, கீழ்உழைப்பு, மறைமுக வேலையின்மை, உடல் பலவீனத்தால் வேலையற்றிருத்தல், உற்பத்திக் குறைவான வேலையிலிருத்தல் என்பனவாகும். எந்தவிதமான வேலைவாய்ப்புமற்றிருத்தல் முழு வேலையின்மையென்றும் செய்யக்கூடிய அளவைவிடக் குறைவாக வேலைசெய்தல் கீழ் உழைப்பென்றும் பிரித்தார். வேலை செய்யும் நேரம், வேலைவாய்ப்பின் மூலம் பெறப்படும் ஊதியம், உற்பத்தித் திறன் எதிர்காலத் திட்டங்கள், கலாச்சாரம் போன்றவற்றிக்கேற்பவும் வேலையின்மையை மேலும் பல பிரிவுகளாக்கினார். மறைமுக வேலையின்மையை மூன்று வகைப் படுத்தினார். முழு நேர வேலை வாய்ப்பினைப் பெற்றிருந்தும் பகுதி நேர உற்பத்தியாகவிருத்தல் உருமறைந்த வேலையின்மை அல்லது பருவகால வேலையின்மையெனப்படும். வாகனம் பழுதுபார்க்கும் தொழில்கள், விவசாயம் போன்றன உதாரணங்கள். கல்வித் தகைமை, கலாச்சாரம், எதிர்காலத் திட்டங்களுக்கேற்ப வேலையின்மையால் ஏதாவதொரு வேலையிலீடுபட்டிருத்தல் விரும்பிய வேலையின்மையெனவும், ஓய்வு பெறும் காலத்திற்கு முன்பாகவே ஓய்வு பெறுதலும் முக்கியமான வேலையின்மைப் பிரச்சினைகளெனப் பிரித்தார். வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஓய்வு பெறும் வயதினைக் குறைத்தல் அரசாங்க ஊழியர்களுக்குப் பிரச்சினையாகிறது. முழுநேரவேலைவாய்ப்பினைப் பெற்றிருந்தும் தொழில் செய்ய முடியாமல் நோய்வாய்ப்புற்றிருத்தல், போசாக்கின்மை, வைத்தியவசதிகளற்றிருத்தல் போன்றவற்றால் உடல் பலவீனத்தின் வேலையின்மையேற்படுகின்றதெனவும் பிழையான மூலவளப் பயன் பாட்டினாலும் சிறந்த உற்பத்தியற்ற வேலைவாய்ப்பினைப் பெற்றிருத்தலாலும் உற்பத்தியற்ற குறைவான வேலையின்மையேற்படுகிறதெனவும் எட்வேட்ஸ் தனதாய்வில் குறிப்பிட்டுள்ளார். வேறும் பல பொருளியலாளர்கள் வேலையின்மையில் வேறுபல பிரிவுகளை எடுத்துக்காட்டியுள்ளனர். ஒருவேலையிலிருந்து இன்னொருவேலைக்கு மாறும்போது இடையில் ஏற்படும் குறுகியகாலவேலையின்மையை உராய்வு வேலையின்மையெனவும் ஓர்தொழிலின் எதிர்பாராத வீழ்ச்சியால் ஏற்படுவதனை தற்செயலானவேலையின்மையெனவும் ஓர்தொழிலினை அமைப்பு ரீதியாகவோ தொழில் நுட்ப ரீதியாகவோ

JAYANTHY ATPUTHANATHAN B. A. Hons (Jaffna)
Temporary Asst Lecturer
Department of Geography, University of Jaffna

மாற்றும்போது ஏற்படும் இடைக்கால வேலையின்மையை அமைப்பு ரீதியான அல்லது தொழில் நுட்பரீதியான வேலையின்மையெனவும் கணவன் அல்லது மனைவி, வேலைசெய்யவாய்ப்புக்களிருந்தும் சொந்தத்தேவைக்காக வேலைக்குச் செல்லாமலிருத்தல்தேவைக்கேற்றவேலையின்மை யெனவும் பாகுபடுத்தியுள்ளார்கள். இவ்வீதம் தன்மைகளுக்கேற்ப வேலையின்மை மாறுபடுவதோடு பல்வேறு காரணிகளும் வேலையின்மைக்கு காரணமாகின்றது.

1930 ஆம் அண்டில் ஏற்பட்ட உலக பொருளாதார மந்தத்துடன் வேலையின் மைப்பிரச்சனையானது உச்சநிலையடைந்த போதும், இரண்டாம் உலகயுத்தத்தின் பின்பே முக்கியமாகக் கவனிக்கப்பட்டது. மனிதஉழைப்பு தேவையற்ற புதியதொழில் நுட்பப்பயன்பாடே வேலையின்மைக்கு காரணமெனக் கருதப்படுகின்றது. விருத்தியடைந்துவரும்நாடுகளில்நகரக்கைத்தொழில்களின் விருத்தியால் நகர - கிராம இடப்பெயர்வுகள் ஏற்படுவதனுலும் பொருத்தமற்ற தொழில்நுட்பப்பாவனையாலும் கீழ் உழைப்பு, முழுவேலையின்மை யென்பன ஏற்படுகின்றன. இந்நாடுகளின் மொத்த தொழிலாளரில் 10 - 20 வீதமானேர் தொழிலற்றுள்ளனர்.

படித்த இளைஞர்களின் எதிர்காலத் திட்டங்கள், கலாச்சாரநோக்குகள் போன்றவற்றினுல் வேலையின்மையும் கிடைத்த வேலைகளில் உற்பத்தித்திறனுக்காக உழைக்காமை மறைமுகவேலையின்மையினையும் உராய்வு வேலையின்மையும் ஏற்படுகின்றது. இதற்கு கல்வியமைப்பு பொருத்தமற்றதாயிருத்தலே முக்கிய காரணமாகும். நவீனதுறைவளர்ச்சிக்கும் அதனுல் ஏற்பட்ட விருத்திக்கும் சமன்பாடின்மையேற்பட்டது. நவீன நகரங்களும் புதியகைத்தொழில்களும் சகலபொருளாதார சமூக விருத்திகளையும் முன்னெடுத்துச் செல்லும் இயந்திரமாகக் கருதப்பட்டது தவறிவிட்டது. நவீனதுறை கிராமவேலையின்மை கீழ்உழைப்பு, பருவகாலவேலையின்மை, வறுமை போன்றவற்றைத் தீர்க்காமல் ஒருபுறம் வளர்ந்த நகர்களையும் மறுபுறம் சிக்கலாக்கப்பட்ட தொழிலின்மையையும் வறுமையையும் இக்கிராமங்களில் தோற்றுவித்துள்ளது. தவருன திட்டமிடலே முக்கியகாரணியாகவுள்ளது. இதைவிடவேகமாவளரும் குடித்தொகை தங்கியிருப்போர் தொகையினையும் தொழிலாளர் தொகையினையும் அதிகரிக்கச் செய்கின்றது. உலகில் மிகவேகமாக வளரும் பிரதேசங்களும் நகரங்களும் விருத்தியடைந்துவரும் நாடுகளிலேயே காணப்படுகின்றன. (பின்னிணைப்பு I பார்க்க)

அட்டவணை I தொழிலாளர் அதிகரிப்பு வீதம்.

| பிரதேசம் | 1970—1980 | 1980—1990 | 1990—2000 |
|---|---|---|---|
| விருத்தியடைந்த நாடுகள் | 1 · 1 | 0 · 9 | 0 · 9 |
| விருத்தியுறும் நாடுகள் | 2 · 1 | 2 · 2 | 2 · 2 |
| தென் ஆசியா | 2 · 3 | 2 · 5 | 2 · 5 |
| கிழக்காசியா | 1 · 6 | 1 · 6 | 1 · 6 |
| ஆபிரிக்கா | 2 · 2 | 2 · 5 | 2 · 7 |
| லத்தீன் அமெரிக்கா | 2 · 7 | 2 · 9 | 2 · 9 |

மூலம்:- International Labour office, Bulletin of Labour statistics; Labour Force and World Population Growth, 1974 Special Edition, Geneva 1974, Table 8, Page 69.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியடைந்து வரும் நாடுகளின் தொழிலாளர் அதிகரிப்பு 2·2 வீதமாக விருக்க நகரத் தொழிலாளர் அதிகரிப்பு 4·2 வீதமாகவுள்ளது. ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் 10 வீதமானோர் 34 மில்லியன் தொழிலாளர் வேலையின்மையில் காணப்படுகின்றன. தொழிலாளரின் அதிகரிப்புக்கேற்ப தொழில்களின் அதிகரிப்பு குறைவாக இருப்பதே முக்கிய காரணமாகும். குடித்தொகை இயற்கை அதிகரிப்பு, இடப்பெயர்வுகள் தொழில் நுட்பத் திறமையின்மை முக்கியமாக அரசுகளின் திட்டமிடலில் காணப்படும் குறை பாடுகளே வேலையின்மை அதிகரிப்புக்கு முக்கிய காரணிகளாகின்றன.

அட்டவணை 2-ல் இருந்து விருத்தியடைந்து வரும் நாடுகளின் தொழில் வாய்ப்பும் தொழிலின்மையும் அதிகரித்து வருவதனைக் காணமுடிகின்றது. வேலை வாய்ப்பின் அதிகரிப்பு வீதத்தினைவிட தொழிலாளரின் அதிகரிப்பு வீதம் வேகமாகவுள்ளதைக் கவனிக்க முடிகின்றது, இதே போல் ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளிடையேயும் தொழிலாளர், தொழில் வாய்ப்பு அதிகரிப்புகளில் வேறுபாடுகளை அறியமுடியும். 1990ம் ஆண்டுக்கான எதிர்வுகூறலின்படி விருத்தியடைந்து வரும் நாடுகளில் தொழிலாளர் அதிகரிப்பும் வேலையின்மையும் 90 மில்லியனாக இருக்கும் என ஆராயப்பட்டுள்ளது. விருத்தியடைந்து வரும் நாடுகளின் சகல சமூக பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் வேலையின்மையே காரணம் எனவும் பலரால் கூறப்பட்டு வந்துள்ளது.

அட்டவணை 2

விருத்தியடைந்துவரும் நாடுகளில் தொழில் வாய்ப்பும் தொழிலின்மையும்

| | 1960 | 1970 | 1973 | 1980 | 1980 |
|---|---|---|---|---|---|
| **விருத்தியடைந்துவரும் நாடுகள்** | | | | | |
| தொழில் வாய்ப்பு (000) | 507416 | 617244 | 658 000 | 773110 | 991600 |
| தொழிலின்மை (000) | 36466 | 48798 | 54 130 | 65 620 | 88693 |
| தொழிலின் அதிகரிப்பு வீதம் | 6·7 | 7·4 | 7·6 | 7·8 | 8·2 |
| தொழிலின்மையும் கீழுழைப்பும் | 25 | 27 | 29 | — | — |
| அதிகரிப்பு வீதம் ஆபிரிக்கா | 31 | 39 | 38 | — | — |
| ஆசியா | 24 | 26 | 28 | — | — |
| லத்தின் அமெரிக்கா | 18 | 20 | 25 | — | — |
| **ஆபிரிக்கா** | | | | | |
| தொழில் வாய்ப்பு (000) | 100412 | 11933 | 127490 | 149390 | 191180 |
| தொழிலின்மை (000) | 8416 | 12831 | 13890 | 15973 | 21105 |
| தொழிலின்மையதிகரிப்புவீதம் | 7·7 | 9 6 | 9 8 | 9 8 | 9·9 |
| *** ஆசியா** | | | | | |
| தொழில்வாய்ப்பு (000) | 340211 | 413991 | 441330 | 516800 | 660300 |
| தொழிலின்மை (000) | 24792 | 31440 | 34420 | 43029 | 59485 |
| தொழிலின்மையதிகரிப்புவீதம் | 6·8 | 7·1 | 7·2 | 7·7 | 8·3 |
| **லத்தின் அமெரிக்கா** | | | | | |
| தொழில் வாய்ப்பு (000) | 66793 | 83620 | 89180 | 106920 | 140120 |
| தொழிலின்மை (000) | 3258 | 4527 | 5820 | 6618 | 8103 |
| தொழிலின்மையதிகரிப்பு வீதம் | 4·7 | 5·1 | 6·1 | 5·8 | 5·5 |

மூலம் :- Yves Sabolo; Employement and unemployment, 1960—90, International Labour Review, 112, No. 6 (1975)

* சீனு தவிர்ந்த ஆசியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையின்மையால் ஏற்படும் பிரச்சனைகளை யறிவதற்காகவும் தீர்ப்பதற்காகவும் சர்வ தேச தொழிலாளர் நிறுவனம் 1970 ல் கொலம்பியா, கென்யா, இலங்கை, ஈரான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் ஆராய்வு ஒன்றினை நடத்தியது. இதன் மூலம் வேலையின்மையே விருத்தியடைந்து வரும் நாடுகளில் பொருளாதாரவாழ்க்கைத் தரக்குறைவுகளுக்கு காரணம் என்று அறியப் பட்டது. சகல பிரச்சினைகளுக்கும் வேலையின் மையேகாரணமாகவுள்ளதால் அதனைத்தீர்ப் பதும் முக்கியமானதாகவுள்ளது. வேலை யின்மையால் உற்பத்திக்குறைவு, ஊதியக் குறைவு, ஊதியமின்மை, சேமிப்பின்மை, வாழ்க்கைத்தரற்குறைவு, மூலதனமின்மை, பொருளாதாரத்தேக்கம் என்பன ஒன்றன் பின்ஒன்றாக ஏற்படும் பிரச்சனைகளாகவுள் ளன. இப்பிரச்சனைகளுக்கு வேலைவாய்ப்பு மட்டுமன்றி வேலையின்மூலம் பெறப்படும் வருமானமும் முக்கியமானதாகும்.

ஆசியா, ஆபிரிக்கா லத்தின் அமெரிக் காவில் வேலை இல்லாத இளைஞர் தொகை 50 — 80 வீதமானோராவார். வேலையின்மைப் பிரச்சினை இளைஞர்களை அதிகமாகப் பாதிப்பதனை இதன் மூலம் அறியலாம். நகரப்பகுதி இளைஞர்களி டையேதான் அதிகமாக இப்பிரச்சினை குறிப்பாக கிராமங்களிலிருந்து நகர்களை நோக்கி இடம் பெயர்வோரினிடையே காணப்படுகின்றது. வேலையின்மையானது பொருளாதார பிரச்சினைகளை மட்டுமன்றி சமூக அரசியல் பிரச்சினையையும் தோற் றுவிக்கின்றது. இளைஞர்களின் வேலை யின்மை பற்றியாராய்ந்த டட்லிசியர்ஸ் என்பவர் இலங்கையும் கொலம்பியாவும் ஒத்த தன்மையுடையதாக இருப்பதாகக் கூறினர். இளைஞர்களில் படித்த பட்ட தாரிகளின் தொகையே அதிகமெனவும் அதில் கலைப்பட்டதாரிகளேயதிகம் என்றும் எடுத்துக் காட்டினர்

உற்பத்தி துறைகளில் பெண்களின் பங்கு அதிகமாயிருப்பதனாலும் பல பிரச் சினைகள் தோன்றுகின்றன. விவசாயத் துறையில் பெண்களின்பங்கு ஆசியாவில் 36 வீதமாகவும் ஆபிரிக்கா, மத்திய கிழக்கில் 11 வீதமாகவும் ஆபிரிக்காவின் உபசகாராவில் 37 % மாகவும் காணப்படு கின்றது. இதனால் கீழ்உழைப்பு, உராய்வு வேலையின்மை, மறைமுக வேலையின்மை யென்பன ஏற்படுகின்றது. கீழ்உழைப்பு நிலை விவசாயத்தை முக்கியதுறையாகக் கொண்ட நாடுகளில் குறிப்பாக மொரோக் கோவில் 50வீதமாகவும் ரியூனிசியாவில் 66 வீதமாகவும் அல்ஜீரியாவில் 69 வீதமாகவும் காணப்படுகின்றது.

எவ்வகையான வேலையின்மையாக இருந்தாலும் அவற்றின் பிரச்சனைகள் வருமானக்குறைவு, வாழ்க்கைத்தரக் குறைவு என்பனவாகவேயிருக்கும். வாழ்க் கைத்தரக்குறைவில் கல்விதரக்குறைவு, போசாக்கின்மை, நோயுறுதல், உறை விடம், உடை உணவுக்குறைபாடுகளால் ஏற்படும் பல பிரச்சனைகள் உருவாகின்றது. கிராமங்களில் வறுமையையும், கடன்பிரச் சனைகளையும் உருவாக்குகின்றது. நகரை நோக்கிய இடப்பெயர்வுகள் அதிகரிக்க நகரில் சேரிகள் உருவாக்கம் என்பன ஒன்றன்பின் ஒன்றாக சமூக பொருளாதார அரசியல் சீர்கேடுகளுக்குக் காரணமா கின்றன. விருத்தியடைந்து வரும் நாடு களின் அரசியல் பிரச்சனைகளுக்கு வேலை யின்மையே காரணமாகக் கூறப்படுகிறது

வேலையின்மையானது நாடுகளின் சமூக பொருளாதார, அரசியல் பிரச்சனைகளை உருவாக்குவதாகவும், அந்நாட்டின் பொரு ளாதாரக், குறிகாட்டிகளில் முக்கியமான தாகவும் இருப்பதனாலும் வேலையின்மைப் பிரச்சனை விரைவில் தீர்த்துவைக்கப்பட வேண்டிறதாக உள்ளது. இவ்வகையில் குறித்த பொருளாதாரத் துறையினை நவீன மயப்படுத்துதல், கைத்தொழில் துறையினை விருத்தி செய்தல், நகர்களை உருவாக்குதல் மையப் பகுதிகள் அல்லது துணை மையங்களை உருவாக்கி அபிவிருத்தி செய்தல் போன்றன நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன்மூலம் விருத்தியடைந்து வரும் நாடு களின் கிராம நகரத்துறைகளில் நவீனமய மாக்கல் நடைபெற்றது. விவசாயத்துறை யினை விருத்திசெய்வதன்மூலம் விவசாயத் துறையில் காணப்படும் பிரச்சனைகளை குறிப்பாக வேலையின்மை, குறைந்த உற்பத் தித்திறன் வறுமை போன்றவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டது. எனினும் பொருத்தமற்ற தொழில்நுட்பங்களாக அவையிருந்ததினால் எதிர்பார்த்ததை விடத் தீமைகள் அதிகமாயின எனலாம். பாவிக்கப்பட்ட தொழில்நுட்பம் உற்பத்தியதிகரிப்புக்கு உதவியபோதும் வேலையின்மையை அதிகளவுக்குத் தீர்க்கவில்லை இதனால் விருத்தியடைந்து வரும் நாடுகளில் ஏற்படுத்தப்பட்ட நவீனமயமாக்கல், பிரச்சனையைத் தீர்ப்பதைவிட பிரச்சனைகளை அதிகரித்ததோடு புதிய பிரச்சனைகளையும் உருவாக்கின.

இவ்வாறு *1950—1960* காலப்பகுதிகளில் பல விருத்தித் திட்டங்கள் பிரதியீட்டு மூலதனத்திரட்சி, உள்நாட்டுச் சந்தைப் பொருட்கள், உள்நாட்டு மூலவளப்பயன்பாடு கிராமத்தில் மிகையாகக் காணப்படும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்தல் போன்ற நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டன. எனினும் வேலையின்மைத் தொகைக்கேற்றபடி தொழில் வாய்ப்புகள் அதிகரிக்காததினாலும் வேலையின்மைப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

**அட்டவணை 3**

**விருத்தியடைந்து வரும் நாடுகளின் கைத்தொழில் உற்பத்தியும் கைத்தொழில் வேலை வாய்ப்பும்.**

| நாடுகள் | வருடாந்த கைத்தொழில் உற்பத்தி வளர்ச்சி வீதம் | வருடாந்த கைத்தொழில் வேலை வாய்ப்பு வளர்ச்சி |
|---|---|---|
| ஆபிரிக்கா | | |
| எத்தியோப்பியா | 12·8 | 6·4 |
| கென்யா | 6·4 | 4·3 |
| நைஜீரியா | 14·1 | 5·3 |
| எகிப்து | 11·2 | 0·7 |
| ஆசியா | | |
| இந்தியா | 5·9 | 5·3 |
| பாகிஸ்தான் | 12·3 | 2·3 |
| பிலிப்பைன்ஸ் | 6·1 | 4·8 |
| தாய்லாந்து | 10·7 | —12·0 |
| லத்தீன் அமெரிக்கா | | |
| பனாமா | 12·9 | 7·4 |
| பிறேசில் | 6·5 | 1·1 |
| கொலம்பியா | 5·9 | 2·8 |
| கோஸ்டோறிக்கா | 8·9 | 2·8 |
| டொமினிக்கன் குடியரசு | 1·7 | —3·3 |
| ஈக்குவடோர் | 11·4 | 6·0 |

மூலம்:- David Morawets, Employment implications of Industrialization in developing countries, Economic Journal, 1974 September





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 3 இலிருந்து கைத்தொழில் உற்பத்தியதிகரிப்புக்கேற்ப தொழில் வாய்ப்புகள் அதிகரிக்காதது தெரிகின்றது வருடாந்த தொழில் வாய்ப்பு அதிகரிப்பு 15—20 வீதமாக இருந்தால்தான் வேலையின்மையைத் தீர்க்க முடியும் என்று ஆராயப்பட்டுள்ளது. இதன்படி நவீன கைத்தொழில் விருத்தி வேலையின்மையைத் தீர்ப்பதற்குதவவில்லையெனத் தெரியவருகிறது.

இதேபோல்தான் துணைநகரமையங்களை உருவாக்கி அங்கு தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல், விவசாயத்துறையை ஊக்குவிப்புக்காக குடியேற்றத் திட்டங்கள் நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்குதல் போன்றன தொழிலின்மையைத் தீர்ப்பதற்காக உவருவாக்கப்பட்டன. இதைவிட வேலையின்மையைத் தீர்ப்பதற்காக பத்தாண்டுத் திட்டங்கள், இளைஞர் விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் கைத்தொழில் பேட்டைகள் உருவாக்கல். கூட்டுறவுக் கூட்டுப்பண்ணைத் திட்டங்கள் பிரதேச அபிவிருத்திச் சபைகள் போன்ற பல திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டபோதிலும் எதிர்பார்த்தளவு வெற்றியினைக் கொடுக்கவில்லை. வேலையின்மையானது நாளுக்கு நாள் அதிகரித்துவரும் பாரிய பிரச்சனையாக இருப்பதே இதனைத் தீர்க்க முடியாமைக்கு மூக்கிய காரணங்களாகும்.

இவற்றைவிட வேலையின்மையைத்தீர்ப்பதற்கான பல பொருளாதார மாதிரிகள் பொருளியலாளர்களால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இம்மாதிரிகள் தொழிலாளர் நிரம்பலுக்கும் தொழிலாளரின் கேள்விக்குமிடையில் காணப்படும் வித்தியாசங்களினடிப்படையில் விளக்கப்பட்டன, தொழிலாளர் நிரம்பலும் கேள்வியும் வளைகோட்டின் மூலம் சந்திக்குமிடத்தில் உத்தம வேலை வாய்ப்பு ஏற்படும் என்று காட்டப்பட்டன. விருத்தியடைந்துவரும் நாடுகளுக்கேற்றதாக நவீன பொருளியலாளரான கெயின்ஸ் பல மாதிரிகளை எடுத்துக் காட்டினர். இதைவிட விருத்தியடைந்து வரும் நாடுகளில் ஆராய்வுகளை மேற்கொண்ட குன்னர்பிருங் பொருத்தமான தொழில்நுட்பப் பயன்பாடு, தொழில்நுட்ப ரீதியான கல்வியமைப்புக்களை ஏற்படுத்துதல் கிராமரீதியில் வேலைவாய்ப்புப் பெறக்கூடிய திட்டங்களை ஏற்படுத்துதல் என்பவற்றின் மூலம் தொழிலின்மையைத் தீர்க்க முடியும் என்று கூறினர். உள்நாட்டு மூலதனம், மூலவளங்களைப் பயன்படுத்தக் கூடியதாகவும் மனித உழைப்பு அதிகமாகத்தேவைப்படுவதுமான தொழில்நுட்பமே வேலையின்மையைத்தீர்க்க அத்தியாவசியமானது என்று அறியப்பட்டுள்ளது. நகர்களை மட்டுமன்றி கிராமங்களிலும் குடிசைக் கைத்தொழில்கள், கிராமவிருத்தித் திட்டங்கள் என்பவற்றை ஏற்படுத்துதல் அவசியம். இதன் மூலம் கிராமங்களிலிருந்து நகரை நோக்கிய இடம் பெயர்வும் நகரவேலையின்மையும்தீர இடமுண்டு. கல்வியமைப்பு தொழிற்கல்வியாக மாற்றப்படுவதன் மூலம் வாய்ப்புகளற்ற வேலைக்கான எதிர்பார்ப்புகளைக் குறைத்து நாட்டின் பொருளாதாரம், எதிர்கால வளர்ச்சிக்கான துறைகள் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர்களை உருவாக்க முடியும். அரசாங்கத் தொழினுட்பப்பயன்பாடுகளும், திட்டமிடலும் திறமையாக இருக்கவேண்டியது வேலையின்மையைத் தீர்ப்பதற்கு அவசியமாகும்.

பொருளாதார அபிவிருத்தியிலும் விருத்தியடைந்துவரும் நாடுகளின் சகல பொருளதார அபிவிருத்தியின்மைப் பிரச்சினைகளிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியதும், பொருளாதார அபிவிருத்திக் குறிகாட்டிகளில் முக்கியமானதுமான வேலையின்மைப் பிரச்சினைகளை கண்டறிவதும், அவற்றிக்கான தீர்வுகளைத் திட்டமிடுவதும் விருத்தியடைந்துவரும் நாடுகளின் முக்கிய தேவையாகக் காணப்படுகின்றது, குறித்த நாட்டின் வேலையின்மைப் பிரச்சினை தீர்க்கப்படுமிடத்து அந்நாட்டின் சமுக பொருளாதார அரசியல் பிரச்சினை பெருமளவிற்குத் தீர்க்கப் பட்டுவிடுமென அறியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு I

உலகில் மிக விரைவாக வளரும் நகர்கள்

| நகரம் | 1970 இல் கணக்கிடப்பட்ட குடித்தொகை மில்லியன் | 1985ற்குக் கணக்கிடப்பட்ட குடித்தொகை மில்லியன் | அதிகரிப்பு வீதம் |
|---|---|---|---|
| பாண்டுங் - இந்தோனேசியா | 1 · 2 | 4 · 1 | 242 |
| லாகோஸ் - நைஜீரியா | 1 · 4 | 4 · 0 | 186 |
| கராச்சி - பாகிஸ்தான் | 3 · 5 | 9 · 2 | 163 |
| போகோட்டா - கொலம்பியா | 2 · 6 | 6 · 4 | 146 |
| பக்தாத் - ஈராக் | 2 · 0 | 4 · 9 | 145 |
| பாங்கொக் - தாய்லாந்து | 3 · 0 | 7 · 1 | 137 |
| தெகிரான் - ஈரான் | 3 · 4 | 7 · 9 | 132 |
| சியோல் –தென்கொரியா | 4 · 6 | 10 · 3 | 124 |
| லீமா - பேரு | 2 · 8 | 6 · 2 | 121 |
| சயோபோலோ — பிறேசில் | 7 · 8 | 16 · 8 | 115 |
| மெக்சிக்கோ நகரம் | 8 · 4 | 17 · 9 | 113 |
| பம்பாய் - இந்தியா | 5 · 8 | 12 · 1 | 109 |

மூலம் .- **Intenational Labour office, Bulletin of Labour Statistics; Labour Force and world population Growth, 1974 Special Edition, Geneva.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Reerences**


1. ஜெயரத்தினராசா, ஆர். இலங்கைப் பொருளாதாரம், திருமகள் அழுத்தகம் சுன்னுகம், 1977.

2. சிறிஸ்கந்தராசா, எஸ். ''இலங்கையின் வேலையின்மையின் போக்கும் வேலைநிறைவுக் கொள்கையின் பங்கும்,'' வித்தியோதயம், தமிழ் மன்றம், இலங்கைப் பல்கலைக் கழகம், வித்தியோதய வளாகம், திருமகள் அழுத்தகம், சுன்னுகம். 1978. பக் 18–30.

3. Costa, E; "Practical aspects of the organization of man-power utilization and Education Schemes in the Developing countries." **International Labour Review,** Volume 93 No. 3, March 1966, p 248 - 280.

4. Michael, P; Todaro, Economic Development in the third world. Longman London and New York.

5. Paul Bairoch; Urban unemployment in developing countries. International Labour Office, Geneva 1973.

6. Richard Berthoud; Unemployment of professionals and executives, Volume XLV No. 582, Policy Studies Institute, Printed in the Mendip Press. Bath p 12-27

7. Ruth Dixon; Land Labour and the Sex Composition of the Agricultural Labour force; An International comparison, **Development and change,** Volume 14, No. 3, July 1983.

8. Simone Morio, Yarrise Zoctizeum; Two studies on unemployment among educated young people, UNESCO, printed in France, 1980, p 75-129.

1. Econmica, Volume 50, No. 199, August 1983.

2. Economic Survey of Asia and the Far East 1972, United Nations, FAO Rome

3. Employment in Africa; Critical Aspects of the problem. International Labour Office, Geneva. 1973.

4. Migration Urbanization and development in Sri Lanka, ESCAP Region, Country Report, United Nations, New York 1980.

5. The Journal of Development Studies, Volume 19, No. 4, July 1983.

6. The Indian Economic Journal, Volume 29, No. 4, April-June 1982.

7. World Development Report 1981, The World Bank, Washington, U. S. A. 1981




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருத்தியடைந்து வரும் நாடுகளில் நகரவாக்கம்

க. கி. ஆறுமுகம்

உலக நாடுகளை அபிவிருத்தியடைந்துள்ள நிலைக்கேற்ப அபிவிருத்தியடைந்த நாடுகளென்றும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளென்றும் இரு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் உலகசனத்தொகையில் 72 (1980) வீதத்தினைக் கொண்டிருக்கின்றது. இச்சனத்தொகையில் 30 வீதமானவர்கள் நகரங்களிலும் காணப்படுகின்றனர். இந்நாடுகள் பொதுவாக விவசாயத்தையுள்ளடக்கிய கிராமிய வாழ்க்கை முறையில் விருத்தி பெற்று வருகின்ற பொழுதும், அண்மைக் காலத்தில் நகரப் பண்பை உள்ளடக்கிய கைத்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்புற்று விருத்தியடைந்து வருகின்றன.

ஒரு நாட்டின் மொத்த மக்கள்தொகையில் நகரங்களில் வாழ்வோரின் வீதத்தைக் கொண்டு அந்நாட்டின் நகரமயநிலை (Level of Urbanaization) நிர்ணயிக்கப் படுகின்றது. அதே போன்று ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் இந்நகர மக்களின் வீதத்தில் ஏற்படும் அதிகரிப்பினை நகரமயமாக்க அளவு (Rate of Urbanaization) எனப்படுகின்றது. இதே அடிப்படையில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நகரமயநிலை, நகரமயமாக்க அளவினையும் நோக்கும் பொழுது 1900 ஆம் ஆண்டு வரை இந்நாடுகளில் நகரமயமாக்கநிலை மிகக் குறைவாகவேயிருந்தது. 1900-1950 இடைப்பட்ட காலத்தில் ஓரளவு அதிகரிப்பினையும், 1950ன் பின்னரே விரைவான வளர்ச்சியினையும் காணமுடிகின்றது. இதனை அட்டவணை Iல் இருந்து அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை 1.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நகரமயமாக்கநிலை-

| நாடுகள் | மக்கள் தொகை 1920ல் (பத்து இலட்சம்) | நூற்று வீதத்தில் | மக்கள் தொகை 1940ல் (பத்து இலட்சம்) | நூற்று வீதத்தில் | மக்கள் தொகை 1960ல் (பத்து இலட்சம்) | நூற்று வீதத்தில் | மக்கள் தொகை 1980ல் (பத்து இலட்சம்) | நூற்று வீதத்தில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| உலக மக்கள் தொகை | 1960 | — | 2295 | — | 2991 | — | 4318 | — |
| மொத்த நகர மக்கள் | 360 | 19·4 | 570 | 24·8 | 990 | 33 | 1780 | 41·2 |
| விரு. அடைந்து வரும் நாடுகளின் மொத்த மக்கள் தொகை | 1188 | 64 | 1474 | 65 | 2015 | 67 | 3124 | 72 |
| விரு. அடைந்து வரும் நாடுகளின் நகர மக்கள் | 100 | 8·4 | 185 | 13 | 410 | 20 | 930 | 30 |
| விரு. அடைந்த நாடுகளில் நகர மக்கள் | 260 | 39 | 385 | 47 | 580 | 59 | 850 | 70 |

மூலம்:- பொருளியல் நோக்கு 1977 ஏப்ரல், பக்கம்-17

K. K. ARUMUHAM B. A. Hons (Jaffna)
Assistant Lecturer
Department of Geography, University of Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாடுகள் 1920 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகையில் 64 வீதத்தினைக் கொண்டிருந்தபோதும், 8·4 வீதமானவர்கள் நகரங்களில் வாழ்ந்தனர். ஆனால் அபிவிருத்தியடைந்த நாடுகள் இக்காலத்தில் உலக மொத்த மக்கள் தொகையில் 36 வீதத்தினைக் கொண்டிருந்தபொழுது இவர்களில் 39 வீதமானவர்கள் நகரங்களில் காணப்பட்டனர். இதிலிருந்து அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் 1920 ஆம் ஆண்டுக்கு முன்னர் மிகக்குறைந்த வீதத்தினரே நகரங்களில் வாழ்ந்தனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இந்நாடுகளில் 1960 ஆம் ஆண்டுவரை மெதுவான வளர்ச்சியையே பெற்றுள்ளன. இதை 1940 ஆம் ஆண்டில் 13 வீதமானவர்களும், 1960 ஆம் ஆண்டில் 20 வீதமானவர்கள் நகரங்களில் காணப்படுவதைக் கொண்டு அறியலாம் 1960ன் பின்னர்தான் ஓரளவு விரைவான வளர்ச்சியைப் பெற்றுள்ளன. 1980 ஆம் ஆண்டில் இந்நாடுகளில் 30 வீதமானவர்கள் நகரங்களிலும் 70 வீதமானவர்கள் கிராமங்களிலும் காணப்பட்டனர். அபிவிருத்தியடைந்த நாடுகளில் இக்காலத்தில் 70 வீதமானவர்கள் நகரங்களிலும் 30 வீதமானவர்கள் கிராமங்களிலும் காணப்பட்டனர். எனவே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கிராமியமக்களின் வீதமே அதிகமாக இருப்பதைக்கொண்டு இந்நாடுகள் இன்றும் கிராமிய தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்புற்றே வளர்ச்சியடைந்துவருகின்றதெனலாம்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் லத்தீன் அமெரிக்கா (அஜந்தீனா தவிர்ந்த) ஆபிரிக்கா (தென்னாபிரிக்கா தவிர்த்து) ஆசியா (சோவியத்ஒன்றியம் ஜப்பான் தவிர்த்து) ஆகிய பிரதேசங்கள் அடங்குகின்றன. இந்நாடுகளில் விரைவற்ற நகரமயமாக்கலுக்கான காரணத்தை நோக்கின் ஐரோப்பியர், குடியேற்றத்தை இப்பகுதிகளில் ஆரம்பித்ததையடுத்து அவர்களின் செல்வாக்கு நிலைபெறத்தொடங்கியது. அவர்கள் தமது பிரதான நோக்கத்திற்கேற்ப இப்பிரதேசங்களிலிருந்து விவசாய கனிப்பொருட்களை தமது நாட்டுக்கு ஏற்றுமதிசெய்ததுடன் அங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை இப்பிரதேசங்களில் சந்தைப்படுத்தினர். வர்த்தகம், நிர்வாகம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆங்காங்கே பிரதான போக்குவரத்து வீதிகளை அமைத்தனர். முதலாம், இரண்டாம் உலகயுத்த காலத்தில் புதிய தொழில்நுட்ப விருத்தி பெற்றபோதும் ஐரோப்பிய நாடுகளில் கைத்தொழில்துறை மந்தநிலையை அடைந்திருந்தது. யுத்தகாலச் சூழ்நிலையால் குடியேற்ற நாடுகளில் புதியகைத்தொழில், சுரங்கத்தொழில் என்பன விருத்தியடையத்தொடங்கின. பெருமளவு கைத்தொழில் நிறுவனங்கள் ஐரோப்பியர் கைகளில் இருந்ததினால் முக்கியமான நிர்வாகப் பதவிகள் தவிர்ந்த ஏனைய பதவிகள் இங்குள்ளவர்களுக்கு வழங்கப்பட்டன. படிப்படியாகக் கல்விவசதியளிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து மக்கள் பாரம்பரிய விவசாயத்துறையிலிருந்து நகர நாகரிகக் கைத்தொழில் துறைகளில் ஆர்வங்காட்டத் தொடங்கினர். இரண்டாம் உலகயுத்தத்தையடுத்து ஐரோப்பியர் படிப்படியாக இப்பிரதேசத்தை விட்டு வெளியேறத் தொடங்கினர். இவ்வாறான நிலையினால் 1950 ஆம் ஆண்டுவரை இந்நாடுகளின் நகரமாக்க நிலை மிகக் குறைவாகவேயிருந்தது.

சுதந்திரத்திற்குப்பின்னர் சுதேச அரசாங்கங்கள், பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவேண்டிய நிலை ஏற்பட்டது. விவசாயத்துறைக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டபொழுதும் வரட்சி வெள்ளப்பெருக்கு, பருவமழை தாமதித்தல், நோய் என்பவற்றால் உறபத்திக்குறைவும். நிலப்பற்றாக்குறை, வேலையின்மை உடல்நல வசதிகளும், கல்விச்சேவை போதாமை, தாழ்ந்தமட்ட வாழ்க்கைத் தரம், பாதுகாப்பு, சமூக–சமய அரசியல் நிலமைகள் ஏற்றதல்லாமல் இருத்தல் போன்றவற்றினால் மக்கள் கிராமப்புறங்களிலிருந்து நகரப்பகுதிகளுக்கு இடம் பெயர்கின்றனர். ஆனால் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள நகரங்கள் வளர்ச்சியடைந்த பெரிய நகரங்களாகவோ, அதிக வேலைவாய்ப்பினை அளிக்கக் கூடியனவாகவோ இல்லாமையால் நகரங்களை நோக்கி இடப்பெயர்வினை ஏற்படுத்துவர்கள் குறைவாகவேயுள்ளனர். அங்குள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியவேலைகூட நகரப்பகுதிகளில் உள்ளவர்களால் நிரப்பப்படுவதால் கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கிச் செல்வோர் அங்கும் வேலைவாய்ப்பைப் பெற முடியாதநிலையினை எதிர்நோக்குகின்றனர். இதனால் கீழ் உழைப்பு, சேரிவாழ்க்கை, சுகாதாரப் பாதிப்பு ஆகியவற்றினால் புதிய நெருக்கடிகள் இப்பகுதிகளில் தோன்றியுள்ளன. இந்நாடுகளின் நகரமய நிலை குறைவாக இருக்கின்ற பொழுதும் நகரங்களில் வாழும் மக்கள் தொகையானது 1920-ம் ஆண்டில் 28 வீதமாகவேயிருந்தது இத் தொகை படிப்படியாக அதிகரித்து 1980 ஆம் ஆண்டில் 52 வீதத்தை அடைந்துள்ளது.

1960-ம் ஆண்டில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் 41 வீதமாக இருந்த மொத்த மக்கள் தொகை 1980-ல் 52 வீதமாக அதிகரித்துள்ளது. இக்காலத்திலேயே மிகக் கூடுதலான அதிகரிப்பாக 11 வீதத்தினைப் பெற்றுள்ளது. இதிலிருந்து அண்மைக்காலத்தில் இந் நாடுகளின் நகரமய நிலையிலும் பார்க்க நகரமக்கள் தொகை விரைவாக அதிகரித்துவருகின்றதினை அறிந்து கொள்ளமுடிகின்றது.

1950-ம் ஆண்டிற்குப் பின்னர் இந் நாடுகளில் நகரமயமாக்க அளவு அதிகரித்துள்ளது, 1950—80 ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் நகர குடித்தொகை அதிகரித்துச் செல்வதையும் காணமுடிகின்றது. இக் காலத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் நகர குடித்தொகையின் அதிகரிப்பு வீதமும், படிப்படியாகக் குறைவடைந்து செல்வதையும் அட்டவணை 3-ல் இருந்து அறிந்து கொள்ளமுடிகின்றது.

அட்டவணை 3

நகர — கிராம குடித்தொகை அதிகரிப்பு வீதம் 1955—1980

| ஆண்டு | நகர குடித் தொகை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் (வீதம்) | அபி. அடைந்த நாடுகள் (வீதம்) | கிராமக் குடித்தொகை உலகம் (வீதம்) | அபி. அடைந்து வரும் நாடுகள் (வீதம்) | அபி. அடைந்த நாடுகள் (வீதம்) |
|---|---|---|---|---|---|
| 1955 | 4·88 | 2·49 | 3·40 | 1·40 | — 0·06 |
| 1960 | 5·01 | 2·40 | 3·47 | 1:50 | — 0·18 |
| 1965 | 4·09 | 2·18 | 3·02 | 1·81 | — 0·20 |
| 1970 | 4·07 | 1·96 | 2·93 | 1·86 | — 9·03 |
| 1975 | 4·38 | 1·76 | 3·05 | 1·65 | — 0·84 |
| 1980 | 4·29 | 1:69 | 3·05 | 1·62 | — 0·94 |

மூலம் :- National urbanaization Policies in developing countries, World Bank staff working paper. No. 397. p. 117



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் நகரக்குடித்தொகை, உலகநகரக் குடித்தொகை என்பவற்றைவிட அபிவிருத்தியடைந்த நாடுகளில் நகர குடித்தொகை அதிகரித்துள்ளமையை அவதானிக்கமுடிகிறது. நகர குடித்தொகை அதிகரிப்புக்கு இயற்கையதிகரிப்பு, குடியுள்வரவு, புதிய நகரங்களின் பெருக்கம், நகர எல்லைகள் விஸ்தரிப்பு என்பன காரணமாகும், இவற்றில் குடியுள்வரவு நகர குடித்தொகை அதிகரிப்புக்கு எந்தளவு பங்களிப்பினைச் செய்துள்ளன என்பதனை அட்டவணை 4-ல் இருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.

அட்டவணை 4

நகரவளர்ச்சிக்கு குடியுள்வரவின் பங்கு 1970 — 75

| நாடுகள் | நகரவளர்ச்சி (வீதத்தில்) | நகரவளர்ச்சிக்கு குடியுள்வரவின் பங்கு (வீதத்தில்) |
|---|---|---|
| இலங்கை | 4·3 | 60·5 |
| இந்தியா | 3·8 | 44·7 |
| நைஜீரியா | 7·0 | 64·3 |
| தன்சானியா | 7.5 | 64·0 |
| குவைற் | 8·0 | 24·4 |
| பிறேசில் | 4·5 | 35·5 |

இலங்கை நைஜீரியா, தன்சானியா ஆகிய நாடுகளில் குடியுள்வரவு நகரக்குடித்தொகையின் அதிகரிப்புக்கு முக்கிய காரணியாக இருந்துள்ளன. பிறேசில், குவைற், இந்தியா ஆகிய நாடுகளில் குடியுள்வரவு குறைவாயுள்ளது. இக் காலத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளில் குடியுள்வரவு அதிகமாயிருந்துள்ளது உதாரணமாக ஐக்கிய இராச்சியம் சுவீடன், கங்கேரி, சோவியத் ரஷ்யா என்பவற்றில் முறையே 60, 66·7, 73·3, 62·1 வீதமான உள்வரவினைப் பெற்றுள்ளன.

அண்மைக்காலத்தில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் நகரங்கள் வேகமாகப் பெருகிவருகின்றன. நகரங்களின் எண்ணிக்கை மாத்திரம் அதிகரித்துக்காணப்படவில்லை. அவற்றின் அளவுகள் அதிகரித்தவண்ணமேயுள்ளன. நகரமயமாக்க முறையால் நகரங்கள் பெரு நகரங்களாகவும் கிராமங்கள் நகரங்களாகவும் மாறுகின்றன. இவ்வாறான நிலையினை அட்டவணை 5 ல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 5

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நகரங்களின் எண்ணிக்கை

| நகரங்களின் அளவுகள் (000) | நகரங்களின் எண்ணிக்கை 1950 | 1960 | 1970 | 1975 | 1980 |
|---|---|---|---|---|---|
| 5000 + | 1 | 15 | 9 | 10 | 15 |
| 2000 — 4999 | 9 | 2 | 19 | 31 | 40 |
| 1000 — 1999 | 13 | 29 | 44 | 49 | 61 |
| 500 — 999 | 40 | 54 | 30 | 110 | 131 |
| 200 — 499 | 108 | 164 | 266 | 332 | 377 |
| 100 — 199 | 178 | 304 | 404 | 454 | 515 |

மூலம்:- National Urbanization policies in developing countries, July. 1979. p. 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரங்களின் எண்ணிக்கை அதிகரிப்பினை நோக்கும் போது 5000000+ நகரங்களின் அதிகரிப்பு வீதமே மிகக் கூடுதலாகவுள்ளது. அதாவது பெருநகரங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு வீதம் அதிகமாகவும், சிறு நகரங்களின் அதிகரிப்பு வீதம் குறைவாகவும் உள்ளதை அறிய முடிகின்றது. இந் நாடுகளில் பெரு நகரங்களிலேயே ஓரளவு கைத் தொழில், வர்த்தகம், சேவை என்பன வளர்ச்சியடைந்துள்ளன. இதனால் கிராமப்புறங்களிலிருந்து இடப்பெயர்வினைச் செய்பவர்கள் பெருநகரங்களுக்கே செல்வதனால் இவற்றின் வளர்ச்சி வீதம் அதிகமாகவுள்ளதை அவதானிக்க முடிகின்றது. அபிவிருத்தியடைந்துவரும் இந் நாடுகளில் வர்த்தகம், போக்குவரத்து, பாதுகாப்பு போன்றவற்றின் அடிப்படையிலேயே ஆரம்ப காலத்தில் கரையோரப் பகுதிகளிலே பெரிய நகரங்கள் காணப்பட்டன. இன்று உள்நாட்டுப் பகுதியிலும் வர்த்தகம், விவசாய சேவைகள் போன்றவற்றின் அடிப்படையில் பல பெருநகரங்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன.

நகராக்கச் செய்முறையானது நாட்டுக்கு நாடு, பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டதாகவுள்ளது. இதற்குப் பிரதேசங்களின் இடவமைவு, பொருளாதார வளர்ச்சி, அரசியல் நிலை, குடித்தொகையளவு, மக்களின் கல்விநிலை, தொழில்நுட்பம், மற்றும் சமூக - கலாச்சார நடவடிக்கைகள் போன்றன அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஆபிரிக்கா கண்டம்தான் மிகக் குறைந்த நகரமயமாக்க நிலையைக் கொண்டுள்ளது. இங்கு ஐரோப்பிய கலாச்சாரத்தின் கலப்பினைக் கொண்ட சிலநாடுகள் மட்டும் நகரமயமாக்க அளவு மிக அதிகமாகவுள்ளது. இலத்தீன் அமெரிக்காவில் நகரமயமாக்கம் போத்துக்கேயர் குடியேற்ற காலத்திலேயே ஆரம்பமானதாயினும், இந்த நூற்றாண்டில்தான் அதன் வளர்ச்சி வீதம் அதிகமாகவுள்ளது. உலக சராசரி நகர மக்களின் வீதத்தைக் கொண்டு நோக்கும் போது ஆசியாதான் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளதெனலாம். இங்கு நகரமக்கள் வீதம் மிகவும் குறைவாகும். 18 வீதமான மக்களே நகரங்களில் வாழ்கின்றனர், இவற்றில் தென்னாசியாவை எடுத்து நோக்கின் இப்பகுதி மிக மெதுவான நகரமயமாக்கத்தையே கொண்டுள்ளது. இங்கு நகரங்களை நாடிச் செல்லும் மக்களின் எண்ணிக்கை குறைவாகவேயுள்ளதால் வளர்ச்சியும் மெதுவாகவேயுள்ளது. ஆனால் இயற்கை அதிகரிப்பு, கிராம-நகர அந்தஸ்தைப் பெறுதல், நகர எல்லைகள் விஸ்தரிப்புப் போன்றவைகளினாலே நகரமயமாக்க அளவு அதிகரித்து வருகின்றது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள நகரங்களை ஒட்டுண்ணி நகரங்களெனலாம். அதாவது பொருளார அடிப்படையில் மாற்றி சனத்தொகை அதிகரிப்பினாலும் கிராமங்களின் பின்தங்கிய நிலையிலுமே இந்நாடுகளின் நகரங்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன. நகரமயமாக்கலளவு குறைவாக இருப்பினும் இந்நாடுகளின் கிராமப்புறங்களிலும் நாகரிகப்பண்புகள் வளர்ந்து வருகின்றன. கல்விவளர்ச்சி, போக்குவரத்து விருத்தி, பொருளாதார முன்னேற்றம், சமூகபண்பாட்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களினால் இன்று நாகரிக பண்புகள் வளர்ந்து வருகின்றன.

அண்மைக்காலத்தில் நகரமயமாக்கஅளவு விரைவாக ஏற்பட்டுவருகின்றது. இவ்வாறான தன்மை பெருநகரங்களின் வளர்ச்சியினைத் தூண்டியுள்ளன. பெரியநகரங்களிலேயே ஓரளவு கைத்தொழில் சேவைத் தொழில்கள்வளர்ச்சியடைந்து வருவதனால் மக்கள் பெருநகரங்களையே நோக்கி இடம்பெயர்கின்றனர் இதனால் பெருநகரங்களின் தொகையும், அளவும் அதிகரித்துவருவதே இந்நாடுகளின் பெரும்பிரச்சனையாகவுள்ளது. 1920 — 1960 இடைப்பட்ட காலப்பகுதியில் தென்னாசியாவில் பல இலட்சம் மக்கள்வாழும் நகரங்கள் துரிதமாக வளர்ச்சியடையத் தொடங்கின. 1920 ஆம் ஆண்டில் இங்கு பிரதான நிலையங்கள் துறைமுகப்பகுதிகளிலேயே காணப்பட்டன. பெரிய நகரங்கள் நாட்டின் மத்தியில் காணப்படவில்லை. 1940 ஆம் ஆண்டுக்குப் பின்னர் துறைமுக நகரங்களின் சனத்தொகை 72 — 53 வீதமாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ச்சியடைந்ததுடன் நாட்டின் மத்திய பகுதியில் நகரசனத்தொகையும், மற்றும் அளவு ரீதியிலும் வளரத்தொடங்கின.

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிலுள்ள நகரங்கள் இன்று பல பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளன. இந்நிலை வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள நகரங்களிலும் காணப்படுகின்றது. உலகசனத்தொகையில் 100 கோடிக்குமேற்பட்ட மக்கள் தரங் குறைவான வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் சேரிகளிலேயே வாழ்கின்றனர். நீர்விநியோக வசதியின்மை, குப்பை கூளங்கள் அகற்றும் வசதிகள் குறைவாகவுள்ளமை, அடிப்படைச் சுகாதார வசதியின்மை வசதிகுறைவான வீடுகளில் ஆள் நெருக்கடி போன்றன பிரச்சனையையுண்டு பண்ணுகின்றன. பெரும்பாலான நாடுகளில் ஒரு அறையில் மூவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் வசிக்கின்றனர். ஆபிரிக்காவில் 100,000 தொடக்கம் 500,000 சனத்தொகையுடைய 44 நகரங்களுள்ளன. இவற்றில் பெரும்பான்மையினர் சேரியில் வாழ்கின்றனர் என்பது இங்கு நடத்தப்பட்ட ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது. 2 நகரங்களில் மட்டுமே 48 வீதத்திற்கு குறைவாக இருந்தது. 1000,000 நகர சனத்தொகையைக் கொண்ட 15 லத்தீன் அமெரிக்க நகரங்களில் 6 நகரங்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெற்றன இவற்றில் மூன்றில் ஒரு பங்குக்கு மேற்பட்டவர்கள் சேரிகளில் காணப்பட்டனர். ஆசியாவில் ஏழு நகரங்களில் இவ்வாறுன சேரிக்குடியிருப்புக்களைக் காணமுடிகின்றது.

பொதுவாக இந்நாடுகளில் பல்வகைக் கலாச்சார ஒருமைப்பாடு, ஏழ்மை நிலை, அடிப்படைத் தேவைகள் இல்லாத மானிட வாழ்வு என்பன பொதுப்படையாகக் காணலாம். நகரில் வாழும் மக்களுக்கு சிறப்பான தரமுடையவீடு, காணி வசதிகள் கிடைப்பதில்லை. இவை அவர்களின் தரத்திற்கு அப்பாற்பட்டதாகும். குறை விருத்தி, செலவுகள், தட்டுப்பாடுகள் ஆகிய காரணத்தால் சேரிகள் உருவாகிவிடுகின்றன. போக்கு வரத்துத் தொடர்புகளும் திறமையற்றுக் காணப்படுகின்றன. தகுந்த நகர அபிவிருத்திக்காக நிர்வாக நிதி செயற்பாடுகள் இன்னமும் திருப்தியான அடிப்படை அமைப்பை வேண்டி நிற்கின்றன. நகர வளர்ச்சிக்கும். அபிவிருத்திக்குமிடையில் காணப்படும் முரண்பாடு என்னவெனில் கிராம-நவீனப்படுத்தல் இல்லாமை, கிராம - நகர அபிவிருத்தியை ஒன்றிணைக்கும், கொள்கைகள் இல்லாமையாகும். எதிர்காலத்தில் இந்நாடுகளில் நகரமயமாக்க அளவு அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. இதற்கேற்ப நகரப் பிரச்சனைகளும் அதிகரிக்கலாம். இதற்குநகரைத்திட்டமிட்டு அமைப்பதன் மூலமாக ஓரளவு தீர்க்கலாம். வளர்ச்சியைச் சட்டமூலம் தடுக்கலாம், தொழிற்சாலைகள் சிறு நகரப்பகுதிகளுக்குப் பரவலாக்கலாம்: அத்துடன் சிறு நகரங்களில் வர்த்தக சேவை வசதிகளை அதிகரிக்கலாம். கிராமப் பகுதிகளிலும் சேவை வசதிகளை அளிக்கலாம். கிராமப்புறங்களில் கைத்தொழில் விவசாயத்திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் இவ்வாறுன பிரச்சனைக்கு ஓரளவு தீர்வுகாணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்**


1. Beaujeu. J; Garnier and G. Chabot (1971) **Urban geography,** Longman Group Ltd. London.

2. Harold Carter, **An Introduction to urban Historical geography,** (1983,) Edward Arnold Ltd. London.

3. Harold Carter, **The Study of urban geography,** (1981) Third Edition, Edward Arnold Ltd, London.

4. James. H. Johnson, **Urban Geography** 1972, 2nd Edition, Edward Arnold Ltd. London.

5. Qazi Ahnmad, **Indian Cities,** Characteristies and corelates; The Dcpartment of Geography, University of Chicogo, Chicago.

6. Stone P. A, **The sturcture, Size on costs of urban Settlement,** (1973) The University Press, Bentley House, London.

7. Asian population studies series No. 53, Economic and social commission for Asia and the pacific, Bangkok, Thailand. 1982.

8. National Urbanization Policies in Developing Countries, World Bank Staff working paper No. 347. July 1979, by Berland Renaud, (Urban and Regional Economic Dcvelopment, Division Economic Department.

9. Johnson B. L. C. & Lem. M. Srilanka. Scrivenor (1981) Heineman Educational Books Ltd. Great Britain. p. p. 130-145

10. பொருளியல் நோக்கு. ஏப்ரல் 1977, மக்கள் வங்கி வெளியீடு, கொழும்பு, இலங்கை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம கிருஷ்ணாஸ்

கார், லொறி, மீன்பிடி வள்ளம், தண்ணீர் பம்

டிராக்ரர் என்ஜின்களுக்கு, றிபோறிங் பொலிசிங் கிறைன்டிங்

போறிங், பிற்றிங் போன்ற சகலவிதமான சேவைகளையும்

வட மாகாணத்தில் முதல் முதலாக ஆரம்பித்து நடாத்தும் ஸ்தாபனம்

# ராமகிருஷ்ணாஸ்

140 ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்

தொலைபேசி 7179

*With Best Complements From*

# Brownson Trade Centre

M. P. C. S. Building

K. K. S. Road

Jaffna

# நில மதிப்பீட்டு ஆய்வுகளில் நில ஆய்வுகளினதும் நில வகைப்பாடுகளினதும் பங்கு.

## The Role of Terrain and Terrain Classification in Land Evaluation Survey.

**S. T. B. இராஜேஸ்வரன்**

மனித இனத்தின் நாகரிக வளர்ச்சியின் போக்கிற்கிணங்கவே ஒவ்வொரு நாடுகளிலும் நிலப்பயன்பாடுகளில் அல்லது நில உபயோகங்களில் (Land use) அல்லது தீர்மானம் (Dicision) இருந்துவந்திருக்கின்றது. தனிப்பட்ட மனிதர்களின் பல்வேறுபட்ட தீர்மானங்களின் விளைவாகவே கடந்த காலங்களில் நிலப்பயன்பாடுகளில் மாற்றங்கள் பெரும்பாலும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. மிகையான சனத்தொகைப் பெருக்கத்தின் விளைவாக நிலப்பயன்பாட்டுத் திட்டமிடல் செயன்முறைகள் எல்லா நாடுகளிலும் மிக அவசியம் என்று உணரப்பட்டுள்ளது. தன்னிச்சையான தீர்மானங்களிலும் பார்க்க திட்டமிட்ட நிலப்பயன்பாட்டுத் தீர்மானங்களால் மிகக்கூடிய பயன் ஏற்படும் எனவும் உணரப்பட்டுள்ளது. இப்படியான திட்டமிடல் நடவடிக்கைகள் விருத்தியடைந்த, விருத்தியடைந்துவருகின்ற அநேகமாக எல்லா நாடுகளிலும் இடம்பெற்றுவருகின்றன. நில உபயோக திட்டமிடல் முறைகள் சூழலில் காணப்படும் வளங்களை சிறந்த முறையில் திட்டமிட்டு புதிய சிறந்தவகையான உற்பத்தித்திறனுள்ள உபயோகமாக மாற்றுவதுடன் தொடர்புபட்டதுடன் ஒரு குறிப்பிட்ட நிலத்தில் இருந்து அதி உத்தம பயன்பாட்டைப்பெறும் உபயோக முறைகளையும் தெரிதலாகும். இதன் மூலம் மனிதனுக்கு உன்னத நன்மை அளிப்பதுடன் எதிர்காலத்திற்கு வளங்களைப் பேணிப்பாதுகாப்பதையும் உள்ளடக்குகின்றது, இவ்வகையான திட்டமிடல் இயற்கைச் சூழலுக்கும் நில உபயோகவகைகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பை அடிப்படையாகக் கொண்டமையவேண்டும். நிலத்திற்கும் நில உபயோகத்திற்கும் இடையேயானதொடர்பை விளங்கிக்கொள்ளமுடியாத சந்தர்ப்பங்களில் இயற்கைவளங்களின் அழிவுகளையும் தோல்வியடையும் நில உபயோக முறைகளையும் பல நாடுகள் அனுபவங்களாகப் பெற்றுள்ளன. நிலஉபயோக முறைகளுக்கும் அல்லது இயற்கைச் சூழலுக்கும் நில உபயோக முறைகளுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்குவதும் திட்டமிடல் வல்லுனர்களுக்கு ஒவ்வொரு வகைகளில் இருந்தும் நம்பிக்கை அளிக்கக் கூடிய நில உபயோகங்களின் ஒப்பீட்டு விபரங்களை அளிப்பதுமாகவே 'நிலமதிப்பீட்டுஆய்வுகள்' (Land Evaluation) இருந்து வருகின்றன.

நிலமதிப்பீட்டு ஆய்வுகள் ஒரு குறிப்பிட்ட தேவைக்கு நிலத்தை உபயோகப் படுத்தும் பொழுது அந்த நிலத்தின் உற்பத்தித்திறனை மதிப்பிடுவதாக அமைகின்றது, இவ்வாய்வுகள் ஒவ்வொரு உபயோகத்திற்கும் அதனது மாற்று உபயோகத்திற்கும் தேவையான அடிப்படை அளவீடுகளானகாலநிலை, உருவவியல் செயன்முறை மண், நீர், தாவரம், போன்ற அம்சங்கள் பற்றிய விளங்களையும் கொடுப்பதாக அமைகின்றது. ஒரு நில உபயோகமுறையை திட்டமிட்டபொழுது அக் குறிப்பிட்ட பிரதேசத்தின் பௌதீக பொருளாதார சமூக அம்சங்களுக்குத் தொடர்பான முறையில் இவை அமைகின்றதா என்பதும்

---

S. T. B, RAJESWARAN B. A. Hons (Cey.)

Dip-in Geomorphology (Netherland)

Asst. Lecturer, Department of Geography, University of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமானது. இந்தவகையான பிரச்சனைக்கு தீர்வு காண்பதும் நிலமதிப்பீட்டு ஆய்வுகளின் முக்கியபணியாகும். எனவே நில மதிப்பீட்டை மேற்கொள்ளும்போது பின்வரும் அம்சங்களில் மிகக்கூடிய அளவு கவனம் எடுக்கப்படுகின்றது.

(அ) பிரேரிக்கப்பட்ட முயற்சி ஒன்றின் பொருளியல் நிலைமை
(The economics of the proposed cnterprises)

(ஆ) குறித்த முயற்சியை ஏற்படுத்துமிடத்து குறித்தபிரதேசமக்களினதும் அல்லது குறித்த பிரதேசம்உள்ள நாட்டின் மக்களின் சமூக தாக்க விளைவுகள்

(இ) குறித்த முயற்சியை ஏற்படுத்துமிடத்து சூழலில் அதன் நேர்விளைவுகள் அல்லது எதிர் விளைவுகள்

மேற்படி அம்சங்களை நிலமதிப்பீடு அடக்கியுள்ளதினால் பின்வரும் அம்சங்களுக்கு விடையளிக்க வேண்டியநிலையில் நிலமதிப்பீடு காணப்படுகிறது.

(அ) தற்போதைய நிலம் எவ்வகையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. தற்போதைய நிலஉபயோக முறையில் எந்தவித மாற்றங்களையும் ஏற்படுத்தாதவிடத்து எத்தகைய விளைவுகள் ஏற்படும்.

(ஆ) தற்போதைய நிலஉபயோக முறைக்குள் நிர்வாக செயன்முறையில் (Management Practices) எந்தவிதமான முன்னேற்றங்களைக் கொண்டு வரமுடியும்.

(இ) வேறு எந்தவிதமான நில உபயோக முறைகள் பெளதீக ரீதியாகவும் (Physically) அதேசமயம் பொருளியல்ரீதியாகவும் சமுகரீதியாகவும் பொருத்தமானதாகவும் அமையும்.

(ஈ) இந்த நில உபயோக முறைகளில் எவை மேலதிக விளைவை அல்லது வேறுவிதமான இலாபங்களை வழங்கும்.

(உ) குறித்த நில உபயோகத்தில் இருந்து விரும்பிய விளைவைப் பெறுவதற்கும் எதிர் விளைவைக் குறைப்பதற்கும் எவ்வகையான மீளமீளவிடும் உள்ளிடுகை அவசியம்.

(ஊ) ஒவ்வொரு நில உப்யோகத்தினதும் இலாபம் என்ன.

நிலதிப்பீட்டுச் செயன் முறைகள் நடைமுறைப்படுத்தப் படவிருக்கும் நில உபயோக முறைகளில் தானகவே நில உபயோக மாற்றங்களைத் தீர்மானிக்காது. ஆனால் நில உபயோகம் பற்றிய தரவுகளை மட்டுமே வழங்கும். அதனடிப்படையில் தீர்மானங்களை எடுக்கக்கூடியதாக இருக்கும். இந்தத்தேவைக்காக குறித்த நிலப் பகுதியொன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளார்ந்த நில உபயோகம்பற்றிய தரவுகளை நிலமதிப்பீடுகள் வழங்கும் இத்தகவல்கள் ஒவ்வொரு பயன்பாடுகளையும் குறித்த நிலத்தில் செய்யுமிடத்து ஏற்படும் நேர், எதிர் விளைவுகளை அல்லது இலாப நட்டங்களை குறிப்பதாக அமையும்.

'நிலவகைப்பாடு' என்பது (Terrain Classification) புவி மேற்பரப்பில் காணப்படும் நில உருவங்களைக் கொண்ட பகுதிகளை அதன் பெளதிக அம்சங்களுக்கு ஏற்ற வகையில், குறித்த தேவையின் நிமித்தம் வகைப்பாடு செய்தலாகும். இந்நோக்கத்திற்கு மேற்பரப்பை அதன் பண்புகளைக் கொண்டு ஆய்வு செய்தல் நிலவாய்வு (Terrain analysis) என்று குறிப்பிடலாம் எந்தவகையான நிலங்களை மதிப்பீடு செய்தாலென்ன, அல்லது நில உபயோக திட்டமிடல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திலென்ன, நில ஆய்வு இன்றிஇவற்றைச் செய்யமுடியாது. குறித்த பிரதேசமொன்றின் நிலவாய்வு, அப்பிரதேசத்தின் புவிச்சரிதவியல், புவிவெளியுருவவியல் நிலைமை காலநிலை, செயன்முறை கல்லியல், மண். நீர், தாவரம் போன்ற அம்சங்கள் ஊடாக அல்லது இவற்றின் அடிப்படையில் வேறுபட்ட நிலங்களை ஆய்வு செய்தலையும் வேறுபடுத்தலையும் அல்லது எல்லைப்படுத்தலையும் குறிக்கும். பிரதேசத்திற்குப்பிரதேசம் நிலஉருவ வடிவம் செயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை வேறுபடுகின்றன. செயன்முறைகளுக்கு ஏற்ப நிலவடிவங்கள் நிலக் காட்சிகள் அமைகின்றன. எந்தெந்த செயன்முறை எந்தெந்த நிலப்பகுதியில் முக்கியத்துவம் வகிக்கின்றன? செயன் முறைகளுக்கேற்ப உருவாக்கப்படும் நில வகைகளின் பண்புகள் தரரீதியிலும் அளவு ரீதியிலும் எவ்வாறு அமைகின்றது? என்பது போன்ற ஆய்வுகளே நிலஆய்வுகள் என்று கூறலாம். இவ்ஆய்வுகளின் அடிப்ப படையில் ஒவ்வொரு நிலவகைகளின் இயல்புகளைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிவதுடன் இலகுவாக இனம்காண முடிகின்றது.

நிலவகைப்பாடுகள் நிலவாய்வின் அடிப்படையில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பெரிய பிரிவுகள் (பொதுப் பாகுபாடு) உப பிரிவுகள் என பாகுபடுத் தப்படுவதுடன் நிலவகைகளின் சிறப்புப் பண்புகளின் அடிப்படையில் ஆய்வுத்தேவை யின் அடிப்படையிலும் நுணுக்கமான நில வேறுபாடுகளைக் காட்டுவதற்காக மேலும், மேலும், சிறு சிறு கூறுகளாக அமைக்கப் படும் பாகுபாடுகளாகும்.

ஒவ்வொரு நிலக்கூறுகளும் சிறப்புப் பண்புகளைக் கொண்டதாக அமையும் பொது வாக நிலவகைப்பாடு, நிலமாகாணம் (Terrain Pronvice) நிலத்தொகுதி (Terrain System) நிலவலகு (Terrain Unit) நிலஉப அல்லது கூறு (Terrain Component) என்று மேல் இருந்து கீழ் நோக்கிய படிய மைப்பில் வகுக்கப்படும். எப்பொழுதும் மேல் வகுப்பு பெரியபாகுபாடாக இருப்ப துடன் பெரிய வேறு பாடுகளை இனம்காட் டுவதாக அமையும். அடுத்த பிரிவுகள் பெரிய வேறுபாட்டுக்குள் அமைந்துள்ள சிறப்பான வேறுபாடுகளைக் கொண்ட மைந்ததாக காணப்படும், இவ்வாறு நிலக்கூறு வரையிலான நுணுக்கமான கூறுவரை செல்லும் இதில் நிலத்தின் மிகச் சிறப்பான பண்புகள்வரை வேறு படுத் தப்படும். உதாரணமாக மண் அமைப்பு நீர். அமைப்பு, மண்ணரிப்பு. தாவரநிலப் பயன்பாடு, போன்ற அம்சங்களும் இடம் பெறும்.

நிலவகைப்பாடும் காலநிலை உரு வியல், கல்லியல், மண், நீர், தாவரம், நிலப்பயன்பாடு போன்ற பௌதிக மேற் பரப்பு இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுசெய்து அதனடிப்படையில் வகுப்பாக்கம் (நில) செய்யப்படுகின்றது.

ஒருசில ஆய்வு வகைப்பாட்டு ஆய்வு களில் பின்வரும் அம்சங்கள் முக்கியமாக கவனத்தில் எடுக்கப்படுகின்றன.

1. உருவம் (Relief)

(அ) மேற்பரப்புநிலைமை (Topographic situation)

இதில் நிலஉருவங்களின் சாய்வு நிலமைகள் ஆராயப்படுகின்றன, உதாரண மாக உச்சி, உயர்பகுதி, நடுப்பகுதி, தாழ் பகுதிச்சாய்வுநிலமைகள், ஆற்றுப்படுக்கை போன்றனவும் ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும் சாய்வுகளின் உயரவேறுபாடுகளும் சூரியனுக்கு எத்திசையில் இச்சாய்வுகள் அமைந்துள்ள எனவும் ஆய்வுசெய்யப்படு கின்றன.

(ஆ) உருவயியல் சாய்வுவிபரம்

(Morphology Slope Detail)

இங்கு சாய்வுவகைகள் என்ன வகைக்குள் அடக்கக்கூடியதாக இருக்கின்றது என்பது பற்றி ஆய்வுசெய்யப்படும். சாய்வுவகை களுக்கு அளவியல் பெறுமானம் கொடுப் பதாக அமைகின்றது. உதாரணமாக சாய்வுகள் விதஅளவில் அளவிடப்பட்டு கணிப்பிடுவதாக அமையும்.

| | | |
|---|---|---|
| 0 — 2% | — | தட்டையானநிலம் Flat |
| 3 — 7% | — | மென்சாய்வு Gently Sloping |
| 8 — 13% | — | சாய்வுநிலம் Sloping |
| 14 — 20% | — | நடுத்தரமான சாய்வு Moderately steep |
| 21 — 55% | — | கூயடிசாய்வு Steep |
| 56 —140% | — | மிகவும் கூடிய சாய்வு Very steep |
| 140% | — | செங்குத்தான சாய்வு Extremely steep |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இப்பகுதியில் சாய்வின் நீளம், சாய்வின் வடிவம் (குவிப்பு, குழிவு, நேர் சாய்வு) சாய்வின் ஒழுங்கு, பள்ளத்தாக்குகளின் வடிவம் (U, V வடிவம்) போன்றவையும் ஆராயப்படும். மேலும் சாய்வுகளுக்கு இடையே உள்ள உயரவேறுபாடுகளும், வடிகால் அடர்த்தி, வடிகால் ஒழுங்கு, வடிகாலின்வடிவம் என்பனவும் ஆராயப்படும்.

2. செயன்முறை Processes

இப் பகுதியில் பல்வேறுபட்ட நிலவகைகளை உருவாக்கும் செயன் முறைகள் பற்றி ஆராயப்படும் இதில் ஒவ்வொரு வகையான அரிப்புக் கருவிகளின் அரிப்பு, கொண்டு செல்லல், படிவுசெய்தல் நிகழ்ச்சியும் அதன் மாதிரி (Type), அதன் வீதம் (Rate), பாதிக்கப்பட்ட நிலம் (Area affected) போன்ற விபரங்கள் ஆய்வு செய்யப்படும். உதாரணமாக மழை நீர் அரிப்பு என்னும் பொழுதே இதில் அரிப்பு மாதிரி, (Erosion type) செயற்பாட்டின் செறிவு (rate of activity), அரிப்பால் பாதிக்கப்பட்ட நிறப் பகுதி போன்றன அளவுசார்ரீதியாக கணிப்பிடப்படும். இதேபோல் பல்வேறு பட்ட அரிப்புக் கருவிகளின் தொழில் படிவு செய்தலின் தொழிற்பாடும் ஆய்வு செய்யப்படும்.

3. பாறை வகை (Rocktype)

இதில் தீப்பாறை, அடையற்பாறை உருமாறிய பாறைவகைகளும் அவற்றின் உப பிரிவுகளும், மற்றும் திண்மமடையாத படிவுகள் (Unconsolidated Materials, Superficial Deposits) வானிலையால் அழிக்கப் பட்ட பாறைப்பகுதி, அவற்றின் தரம், ஆழம், பற்றியும் ஆய்வு செய்யப்படும்.

4. மண்ணியற் பண்புகள் (Soil)

இப்பகுதியில் மேற்பரப்பில் உள்ள மண் வகை, ஆழம், சேதனப் பொருட்களின் அளவு, இழையமைப்பு, மேற்பரப்பில் கற் பரம்பல், பறைத்தன்மை, வடிமானவும் ஆய்வு செய்யப்படும்.

5. மேற்பரப்பு/தரைக்கீழ் நீர்நிலைமை

இங்கு மேற்பரப்பு ஈரநிலைமை, தரைகீழ்நீர் நிலமை, தரைகீழ் நீர் ஏற்றஇறக்கம் தரைகீழ் நீர்தரம் போன்றவை ஆய்வு செய்யப்படும்.

6. இயற்கைத்தாவரம் / விவசாய நிலம் / நிலப்பயன்பாடு.

இங்கு தாவரப் போர்வை மாதிரி, தாவரப் போர்வையின் அடர்த்தி, தாவரங்கள் தரையை மூடியிருக்கும் காலம், நிலப் பராமரிப்பு முறைகள், விவசாய நடவடிக்கைகள் போன்றன ஆராயப்படும்.

மேற்கூறப்பட்ட அம்சங்கள் மிக நுணுக்கமாக ஒவ்வொரு நில அலகுகளிலும் பெறப்பட்டு அவற்றின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டே நிலவகைப் பாடுகள் பாகுபடுத்தப் படுகின்றன. இந்த வகையான வகைப்பாடுகள் மூலம் ஒவ்வொருவகைநிலங்களினது பண்புகள்தெரிய வருகின்றது. இவை பிரதேச திட்டமிடல் நடவடிக்கைகளுக்கு மிக அத்தியாவசியமான தரவுகளாகும் இத்தரவுகளை அடிப் படையாகக் கொண்டு குறித்த நிலங்களின் மீது எவ்வகையான மதிப்பீடுகளையும் செய்து கொள்ள முடியும். அட்டவணை 1 இல் இருந்து நில ஆய்வு, நில வகைப்பாட்டாய்வு, நிலமதிப்பீட்டாய்வு எவ்வாறு படிப்படியாக செய்யப்படுகின்றது என்பது காட்டப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நில ஆய்வு, நிலவகைப்பாட்டாய்வு, நிலமதிப்பீட்டாய்வுகளுக்கான செயற் திட்டம்

### 1-ம் படி

**நில ஆய்வு:** புவிச்சரிதவியல் புவிவெளியுருவவியல் செயன் முறைகள் மண், நீரியியல நிலைமை தாவர நிலப்பயன்பாடு என்பனவ தொடர்பான முறையில் வேறுபட்ட நில உருவங்களை ஆய்வு செய்தலும் அடையாளம் காணலும்- — பல தேவைகளுக்கான செயற் திட்டங்கள்

### 2-ம் படி

**நிலவகைப்பாடு:** பெரிய நில உருவங்களைப் வகைப் படுத்தல். — (Multi - Purpose Procedures)

### 3-ம் படி

பெரிய நிலஉருவப் பிரிவுகளில் சிறிய சிறிய நிலப்பிரிவுகளை அடையாளம் செய்தல்.

### 4-ம் படி

ஆய்வுத் தேவைகளுக்கு ஏற்ற வகையில் நிலப் பண்புகளுக்கு ஏற்ற வகையில் மிகச் சிறிய அலகுகளை வகைப்படுத்தல் — குறித்த தேவைக்கான செயற் திட்டங்கள்

### 5-ம் படி

**நிலமதிப்பீடு:** குறித்த தேவைக்கு ஏற்றவகையில் ஒவ்வொரு நிலத்தின் பண்புகளின் அடிப்படையில் நில அலகுகளுக்கும், உபநில அலகுகளுக்கும் இடையில் பெறுமானங்களை அளித்தல். — (Specific Purpose Procedures)

### 6-ம் படி

குறித்த இலக்குகளுக்கு ஏற்ற வகையில் நிலப்பொருத்த ஆய்வுகளுக்கு இறுதிப் பெறுமானங்களை, அலகுகளுக்கும் உப அ குகளுக்கும் அளித்தலும் வகையிடுதலும்.

மூலம்:- Terrain Classification I T C Text book, Vol: 6.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை (1) ன்பிரகாரம் முதல் மூன்று படிவரையான ஆய்வுகள் பல தேவைகளுக்கான செயற்திட்டங்களுக்குப்பயன் படக்கூடிய வகையில் அமையக்கூடியதாக இருக்கின்றன. இறுதி மூன்றுபடிகளும் குறித்த தேவைக்கானவைகளாக அமைகின்றன. எனவே அபிவிருத்தித்திட்டங்கள் பலநோக்கங்களைக் கொண்டவையாக இருப்பதனுல் எல்லாவற்றையும் மனதில் கொண்டே நில ஆய்வுகளும் வகைப்பாடுகளும் செய்யப்படுவதால் இவை நில உபயோக திட்டமிடல் மதிப்பிடுதல் போன்றவற்ருல் மூக்கிய பங்கை வகிக்கின்றது.

நிலவகைப்பாடுகளினைத் தொடர்ந்து பொருத்தவகைப்பாட்டு ஆய்வுகள் ஒரு நிலை முறையாலும் (one stage) இரு நிலை முறையாலும் (two stage) முறையே 'இணைவான' ஆய்வாகவும் (Parallel) தொடர்ச்சியான (successive) ஆய்வாகவும் நடத்தப்பட்டு நிலப்பொருத்த வகைப்பாட்டை செய்வதற்கு வழிவகுக்கின்றன. இப்படி முறையை அட்டவணை II காட்டுகின்றது. அட்டவணையில் காட்டியதுபோல ஒருநிலை முறையில் நிலவகைப் பட்டாய்வும் சமூக பொருளாதார ஆய்வும் மதிப்பீடும் ஒரே நேரத்தில் செய்யப்படுகின்றன, இருநிலை ஆய்வில் அடுத்தடுத்த ஆய்வாக இவை செய்யப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட முறைகளில் இருநிலை ஆய்வு சிறப்பானது என்று குறிப்பிடலாம் ஏனெனில் முதலில் நிலவகைப்பாட்டு ஆய்வுகளை செய்யும்பொழுது நிலம்பற்றிய தரவுகள் வெளிக் கொண்டு வரப்படுகின்றன. இந்நிலங்களில் பண்புகள் ஒவ்வொரு அலகு நிலங்களுக்கும் அறியப்படுவதால் முழுபிரதேசத்திற்கோ, அல்லது ஒரு குறித்த பகுதிக்கான ஆய்வுகளை தொடர்ந்து செய்யமுடியும். நிலவகைப் பாட்டாய்வில் நிலம்பற்றிய முடிவுகள் திருப்தியாக இல்லாவிட்டால் தொடர்ந்து வரும் ஆய்வுகளை நிறுத்தி விடலாம். இதனுல் நேரம் பணச்செலவு போன்றவை குறைக்கப்பட வாய்ப்புள்ளதுடன் ஆய்வுகளைத்துரிதமாக செய்யவும் வாய்ப்புக்கள் ஏற்படுகின்றது. எனவே மேற்குறித்த ஆய்வுளிலும் நிலவகைப்பாட்டாய்வு அடித்தளமாக அமைகின்றது.

நிலஉபயோகத் திட்டமிடல் நடவடிக்கைகளிலும் நிலவகைப்பாடு முக்கியமாக காணப்படுகின்றது. நிலஉபயோகத்திட்டமிடல் செயன்முறைகளில் நிலமதிப்பீடானது ஒருபகுதி என்று குறிப்பிடலாம் இப்பகுதியில் நிலவகைப்பாடு முக்கிய பங்கை வகிப்பதை நிலஉபயோகத் திட்டமிடல்செயன்முறை ஒன்றின் பல்வேறுபட்ட செயன்முறைத் திட்டங்களை அறிவதன் மூலம் அறியமுடியும். இவை பின்வருமாறு அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை II

## நிலப்பொருத்தவகைப்பாட்டுத் திட்டம்

ஒரு நிலை ( இணைவான முறை )
நிலமதிப்பீட்டுச் செயன்முறை

( One Stage )

நிலவகைப்பாட்டு ஆய்வு
நிலமதிப்பீட்டு ஆய்வு
பின்வரும் பௌதிகப்பண்புகள்
அடிப்படையாக ஆய்வு
செய்யப்படுகின்றது
காலநிலை

உருவவியல்
செயன்முறை
கல்லியல்

மண்
நீர்
தாவரம்

Parallel

சமூகபொருளாதார
வகைப்பாடும் மதிப்பீடும்
பின்வருவனவற்றின்
அடிப்படையில் ஆம்வு
செய்யப்படுகின்றன
தற்போதைய நில
உபயோகம்
நிலத்தின்பருமன்வடிவம்
நில வாடகை
போக்கு வரத்து வலைப்
பின்னல்
நிலப்பண்ணை வலு
தொழில் நுட்ப நிலை
முதல் செறிவு
தொழிலாளர் செறிவு

↓

வளங்களின் தனித்தனி ஆய்வு
நிலை உபயோக மாதிரி
நிலத்தேவைகள்

↓

நிலப்பொருத்தவகைப்பாடு
( Land Suitablity Classification)

இருநிலை (தொடர்ச்சியான முறை)
Two Stage Successive

நிலவகைப்பாட்டு ஆய்வு
நிலமதிப்பீட்டாய்வு

↓

சமூகபொருளாதார ஆய்வு
வகைப்பாடு
மதிப்பீடு

↓

வளங்களின் தனித்தனி
ஆய்வு நில உபயோகமாதிரி
நிலத் தேவைகள்

↓

நிலப்பொருத்தவகைப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. ஒருமாற்றத்திற்கான தேவையை அறிதல்.

ஆ. நோக்கங்களை அடையாளம் செய்தல்.

இ. குறித்த நிலத்தில் வேறுபட்ட நில உபயோக மாதிரிகளை உள்ளடக்கியதாகவும் அவற்றின் பிரதான தேவையை அறிதலையும் உள்ளடக்கியதாகவும் கோரிக்கைகளை வடிவமைத்தல் (Formulation of Proposals)

ஈ. பிரதேசத்தில் தற்போது உள்ள வேறு வேறு வகையான நிலவகைகளைத் தெரிதலும் எல்லைப்படுத்தலும்.

உ. வேறுவேறு நில உபயோகங்களுக்காக ஒவ்வொருவகை நிலங்களையும் ஒப்பிடுதலும் மதிப்பிடுதலும்

ஊ. ஒவ்வொருவகை நிலத்திலும் உத்தம விருப்பமான நில உபயோகத்தைத் தெரிதல்

எ. திட்டத்தை வரைதல்

ஏ. அமுலாக்கத்திற்குதீர்மானம் எடுத்தல்

ஐ. அமுலாக்கல்

ஒ. செயற்பாடுகளை அவதானித்துவரல் மேற்படி படிமுறை செயலில் முறையே ''இ'', ''ஈ'', ''உ'' கட்டங்களில் நில மதிப்பீடு முக்கியஇடத்தை வகிக்கின்றமை புலனாகும் இதில் அதே கட்டங்களில் நில வகைப்பாடும் முக்கிய பங்கை வகிப்பதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எனவே முடிவாக நிலமதிப்பீட்டு ஆய்வுகள் அல்லது அதுதொடர்பான அபிவிருத்தித்திட்ட ஆய்வுகளுக்கு அடித்தள ஆய்வாக நில ஆய்வும் நிலவகைப்பாட்டு ஆய்வுகளும் அமைவதை காணக்கூடியதாக உள்ளது. நிலப்பயன்பாட்டில் திட்டமிட்ட செயன் முறையூடாக மாற்றங்களைக் கொண்டு வரும் நாடுகள் தமது நில ஆய்வுகளிலும் நிலவகைப்பாட்டு ஆய்வுகளிலும் முக்கியகவனம் எடுப்பது வியப்பிற்குரிய தொன்றல்ல.

**உசாத்துணை நூல்கள்**


1. VAN ZUIDAM, 1978. Terrain analysis and classification using aerial Photographs. Vol. 6 ITC. Netherlands.
2. ILRI. 1977 A Framework for land Evaluation. Wageningen The Netherlands.
3. FAO 1974 Approches to land classification soils Bulletin 22. FAO. Rome.
4. RAJESWARAN, S. T. B. 1982. Report accompanying the Terrain classification SUPRAPTO S. map of Part of Monaragala District.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருத்தியடைந்து வரும் நாடுகளில் கல்விநிலை.

கலாமாலினி நாகரத்தினம்

விருத்தி எனும்போது மனித பண்பாட்டு அடிப்படையில் பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்த நிறுவன அமைப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு அமைப்பே எனலாம். அதாவது விருத்திபற்றி விளக்கமாக கூறின், ஒரு நாட்டின் உற்பத்தி அமைப்புக்களின் உடைமையில் மாற்றங்களை ஏற்படுத்துவதோடு, உற்பத்தியும் இலாபமும் அந் நாட்டில் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும்போது மேலும் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நிறுவன அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதுடன், சமூக பொருளாதார இயல்புகட்கேற்ப அடிப்படை அம்சங்களைத் திடகாத்திரமாக்கும் போதும் மூலவளங்களை உச்ச நிலையில் பயன்படுத்தும் போதும் மூலவள ஒதுக்கீட்டில், திட்டங்களின் முன்னுரிமை பயன்படுத்தப்படும் போதும் சிறந்த நிர்வாக முறையோடு கூடிய வளர்ச்சி ஏற்படுமாயின் அவ்வேளையில் அதனை நாம் விருத்தி எனலாம்.

இவ்வாறான ரீதியில் நாடுகளின் விருத்தி நிலைமை பற்றி நாம் நோக்கின், நாடுகளை விருத்தியடைந்த, விருத்தியடைந்துவரும் நாடுகள் எனப்பிரிக்கலாம். அதாவது விருத்தியடைந்து வரும் நாடுகள் என்பதற்கு ஓரளவு சரியான விளக்கம் கொடுப்பின், உயர் வருமானத்தைப்பெற முயற்சித்துக் கொண்டிருப்பதும், விவசாயத் துறையை நவீனமயப்படுத்தவும், வாழ்க்கைத்தரம், கல்வி நிலை போன்றவற்றை உயர்த்தவும் முயன்று கொண்டிருக்கும் நாடுகளே யாகும்.

இந்த வகையில் 3ஆம் உலக நாடுகளில் இந்த நிலைமையைக் காணலாம். அதாவது விருத்தியடைந்துவரும் நாடுகளாக சுமார் 118 நாடுகள் உள. அதாவது ஆசியாவில் ஜப்பான், சிங்கப்பூர் தவிர்ந்த நாடுகளும், லத்தீன் அமெரிக்க நாடுகளும் இன்று விருத்தியடைந்துவரும் நாடுகளாக உள்ளன.

விருத்தியடைந்த நாடுகளோடு ஒப்பிடும்போது இந்த விருத்தியடைந்து வரும் நாடுகளின், இவ்வாறான விருத்திக் குறைவிற்கு இதன் பண்புகளான விவசாயப் பொருளாதார நிலை, சனத்தொகை அதிகரிப்பு சமனற்ற வருமானப் பங்கீடு, சுகாதாரம், கல்வி, வீட்டு வசதி போன்ற வாழ்க்கைத் தரக்குறைவு, வறுமை வட்டம், மூளைசாலிகளின் வெளியேற்றம், மக்களின் மூட நம்பிக்கைகள், வரலாற்று ரீதியான சில காரணிகள். ஆகியனவே காரணம் எனலாம்.

இந்த நிலைமையில் நாம் விருத்தியடைந்துவரும் நாடுகளின் கல்வி நிலை பற்றி சிறப்பாக நோக்குவோம் ஒரு நாட்டின் அபிவிருத்திக்கான முதன்மைக் காரணியாக கல்வி உள்ளது. ஏற்கனவே நிகழ்ந்துவிட்ட சமூக பொருளாதார மாற்றங்களோடு ஒத்துப் போகக் கூடியதாக மனிதர்களுக்கு வாய்ப்பளித்துக் கொடுப்பதை விட முக்கிய பங்களிப்பை கல்வியின் மூலம் செய்யலாம் என்பதை உலக நாடுகள் இன்று புரிந்துள்ள போதிலும் கல்வித்துறை மாற்றங்கள் சமூக பொருளாதார மாற்றங்களை விட பின் தங்கியே உள்ளது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் கடந்த கால காலனித்துவத்தால் விட்டுச் செல்லப் பட்ட பல பிரச்சனைகளை இந்த நாடுகள் தமது அரசியல் சுதந்திரத்தின் பின் எதிர்நோக்க வேண்டி உள்ளது. ''உறுதியளிக்கப்பட்ட மகிழ்ச்சியான வாழ்விற்கு'' தங்களது நாட்டின் ஒவ்வொருவரையும் இட்டுச் செல்லக்கூடியதான துரித பொருளாதார மாற்றங்களை ஒரு சக்தி மிக்க துணையாகக் கொண்டுள்ளன. சமூக பொருளாதார மாற்றங்கட்கு கல்வி நேரடியாக பங்கு செலுத்தக் கூடியதாக கல்வி முறைகளை அந் நாடுகள் மீளாய்வு செய்கின்றன. இந்தமுயற்சியில் கல்வி ஒரு புதிய

Miss. K. NAGARATNAM B. A. Hons (Jaffna)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றத்தை பெறுகிறது. கிராமிய துறைகளை புறக்கணித்து நவீன துறைகளின் தேவைகளை வலியுறுத்துவதான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான, கடந்த கால கல்வி உபாயங்கள் பல சந்தர்ப்பங்களில் அபிவிருத்தியை தடைப் படுத்தி உள்ளதோடு பிரச்சனைகளையும் தோற்றுவித்துள்ளது. ஒரு புறம் இவை படித்தும் வேலையற்றோர் தொகையை அதிகரிக்க மறுபுறம் தொழில்தேடி நகரப்புறத்திற்கும் வெளிநாட்டிற்கும் செல்வோர் தொகையும் அதிகரித்தது.

இந்த அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உள்ள மூலவளங்களை பயன்படுத்த மனிதவளம் முக்கியம். ஏனெனில் மனிதனாலேயே இவ்வளங்களை கண்டு பிடித்து அவற்றை எப்படி பயன்படுத்தலாம் என்பதை கூறலாம் ஆனால் விருத்தி அடைந்து வரும் நாடுகளில் மனிதவளம் ஏராளமாக இருந்தும், படிப்பறிவுள்ளோர் குறைவாகவே உளர். ஆனால் விருத்தியடைந்த நாடுகளில் குடித்தொகைக்கு ஏற்ப கல்வி அறிவுள்ளோர் தொகையும் அதிகமாக உள்ளது. இதனைப் பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

1972ஆம் ஆண்டு குடித்தொகையும் கல்வி அறிவுள்ளோர் விதமும்

| நாடுகள் | குடித்தொகை (மில்) | கல்வி அறிவுள்ளோர் நூற்று வீதம் |
|---|---|---|
| வங்காளதேசம் | 85 | 20 |
| பாகிஸ்தான் | 84 | 30 |
| இந்தியா | 638 | 36 |
| இலங்கை | 14 | 78 |
| சீனு | 920 | 95 |
| யப்பான் | 118 | 98 |
| ஐக்கிய அமெரிக்க நாடுகள் | 217 | 98 |
| சோவியத் ஒன்றியம் | 258 | 98 |

இவ் அட்டவணைப்படி நோக்கின் அபிவிருத்தியடைந்த நாடுகள் குடித்தொகைக்கேற்ற கல்வி அறிவினையும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சில மிக குறைந்த கல்வித்தரத்தையும் கொண்டுள்ளமையையும் காணலாம்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பொருளாதார சமூக விருத்திகளை அடைய கல்வியே ஒரு சாதனம். வளர்ச்சியடைந்த நாடுகளைப்போல் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளும் தமது தேசிய வளத்தின் பெரும் பகுதியை கல்விக்காக செலவிடுகின்றன. ஆனால் இந்த வறிய நாடுகள் இவ்வாறு செலவிட்டும் அதற்கான பலனைப் பெறுகின்றதா என்று நோக்கின் இவை தமது குறிக்கோளை அடையக் கூடியளவிற்கு அவற்றின் கல்வி சாதகமாக அமையவில்லை என்றே கூறலாம்.

மேற்குலக நாடுகளின் முறைகளை நமது நாடுகளும் கண்மூடித்தனமாகப் பின்பற்றி அவற்றினைப் போல தாமும் அதே விளைவுகளை அடையலாம் என எண்ணி எமது நாட்டின் தேவைக்கு மாறுபாடான எண்ணங்களை மக்களிடையே உருவாக்கி உள்ளன. இதனால் நாட்டின் அவசிய தேவைகளை தீர்த்து வைப்பதற்கு பதிலாக இந்நடை முறைகள் நாட்டின் விருத்தி துறைகளின் ஆக்கபூர்வமான ஈடுபாடுகள் எதற்கும் அப்பாற்பட்ட சிந்தனைகளை உருவாக்கி விடுகின்றது.

இத்தகைய கல்வி நிலை பற்றி சிறப்பாக அறிய நாம் விருத்தியடைந்து வரும் நாகளாகவும், இன்று காலனி ஆதிககத்திலிருந்து மீட்சி பெற்று சோஷலிச சமுதாயங்களை கட்டி எழுப்ப முயற்சித்து நிற்கும் சீனு. பேரு, தன்சானியா போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றின் கல்வி நிலைமையையும் எமது இலங்கையின் கல்வி நிலைமை பற்றியும் தொடர்ந்து நோக்குவோம்.

கம்யூனிசம் வெற்றியடைந்த காலத்தில் சீனு மிகப்பின்தங்கியதாகவும் விவசாய மக்களையும் வறியமக்களையும், படிப்பறிவற்ற மூடக் கொள்கை உடையோரை அதிகமாகக் கொண்டும் இருந்தது. சீனுவின் மொத்தக் குடித்தொகையில் 5/6 பகுதி நாட்டுப் புறங்களில் வாழ்ந்த ஒரு அரை நில பிரத்துவ நாடாகவே இருந்தது. அப்போது கல்வி மத்திய தர வர்க்கத்தினரும், உயர் வர்க்கத்தினரதும் சொத்தாகவே இருந்தது.

ஆனுல் சீனு விடுதலை பெற்ற காலத்தில் புதிய சமுதாயத்தைக்கட்டி எழுப்ப வேண்டும் என்ற ஆவல் ஏற்பட கல்வி அதற்கு ஒரு ஆயுதமாகியது. இதனுல் கலாச்சார புரட்சி அங்கு ஏற்பட்ட போது, கல்வி சீர் திருத்தங்கள் விறுவிறுப்படைந்தன. அதாவது கலாச்சார புரட்சி நடந்த ஒரு வருட காலத்திற்கு அங்கு சகல பரீட்சைகள், பல்கலைக்கழகங்கள் கலாச்சாரநிறுவனங்கள் போன்றன மூடப்பட்டு அதே நேரம் ஆசிரியர்கள், படிப்பித்தல் கருவிகள் போன்றன முழு சீரமைப்பிற்கு இலக்காகியது.

இவ்வாறுன சீரமைப்பைத் தொடர்ந்து சிலசீர்திருத்தஅம்சங்கள்கல்வி தொடர்பாக எழுந்தன. அவையாவன.

1. பாடசாலை, பல்கலைக்கழக நிர்வாகம் என்பன சீரமைக்கப்பட தொழிலாளர் பிரச்சார அணிகள் நிரந்தரமாகவே பாடசாலைகளில் இருந்து, பாடசாலைகளின் புனரமைப்பிலும் கண்டித்தல், போராடல் போன்றவற்றிலும் பங்கு கொள்ளவேண்டும். நாட்டுப்புற பாடசாலைகள், தொழிலாளி வர்க்கத்தின் நம்பத் தகுந்த, வறிய, கீழ் மத்தியதர விவசாயிகளால் நிர்வகிக்கப்பட வேண்டும்.

2. மாணவர்கள் செய்முறை அனுபவங்களோடு, தொழிலாளர் மத்தியிலிருந்தும், விவசாயிகள் மத்தியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டு ஒரு சிலவருடப் படிப்பின் பின்பு உற்பத்தித் துறைக்கு திரும்பி விட வேண்டும்.

3. வெறும் கோட்பாட்டு விதிகளதும், மனிதவியல் துறைகளதும் முக்கியத்துவம் குறைக்கப்பட்டு கல்வியானது தொழில்நுட்பம் தொடர்பானதாகவும் நேரடி உபயோகம் உள்ளதாயும் இருக்க வேண்டும்.

4. படிக்கும் போதுகூட மாணவர் தொழிற் சாலைக்கு சென்றுவர வேண்டும். இதனுல் மாணவர் தொழிலாழி வர்க்கத்துடன் நெருக்கமான, ஸ்திரமான தொடர்புகளை வைத்துக் கொள்ளலாம். அத்துடன் மாணவர்கள் கிராமப்புறங்களுடன் இணைந்த வகையில் கல்வி அறிவை வளர்க்க வேண்டும்.

5. பல்கலைக்கழக அனுமதித் தகமை, பரீட்சையால் மட்டும் தீர்மானிக்கப்படாது, குண நலத்திலும், சாதனைகளாலும், திறமைகளாலும், கண்டுபிடிக்கும் ஆர்வத்தினுலுமே தீர்மானிக்கப் படவேண்டும்.

இவ்வாறுன சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டு சீனுவில் இன்று ஒரு குறிப்பிடத்தக்க கல்வி மாற்றம் ஏற்பட்டுள்ளமையைக் காணலாம்.

இதேபோல், மக்கள் பாகுபாடு' கலாச்சாரம், மொழியியல் போன்றவற்றில் முரண்பாடுள்ள ''பேரு''வை எடுப்பின் இங்கும் முன்பு நிலவிய கல்வித்திட்டம், ஸ்பானிய காலனித்து வசதிகளால் நடைமுறைப் படுத்தப்பட்டு உயர்தர வர்க்கத்தினரின் கலாச்சாரத்தையே பேணுவதற்கு உதவியாகவும், நாட்டின் தேவையில் கவனம் செலுத்தாத ஒரு கல்வி அமைப்பே இருந்தது.

ஆனுல் 1968 ல் ஆயுதப்படைகள் ஆட்சியை கைப்பற்றியதுடன் 1970 ல் பேருவின் புரட்சி அரசு அதன் புதிய கல்வித் திட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்தது. இதன்படி கல்விச் சீர்திருத்தங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் அடிப்படையான முழுமொத்த மாற்றங்கள் நிகழ வேண்டும் என எதிர் பார்க்கப்பட்டது. அதாவது சமூக பொருளாதார அபிவிருத்திக்கு உதவி, இதனை ஊக்குவிக்கத்தக்க வேறு பன்முக சீர்திருத்தங்களுடன் கல்விச் சீர்திருத்தம் அமுல் செய்யப்படின் மட்டுமே, தேசிய அபிவிருத்தியில் கல்வி ஒரு அடிப்படைக் காரணியாக அமையலாம் என பேருநாட்டுத் தலைவர் நம்பினர். இதற்காக இங்கு ஒரு கல்வி முறை ஏற்பட்டது. அதாவது கைப்பணி கால் நடைவளர்ப்பு' விவசாயம், காடாக்கல் உள்நாட்டுப் பொருளாதாரம், கிராமிய நிர்மாணம் போன்றவற்றுடன் தொடர்பான போதனைகள் விவசாய கைத்தொழில் அமைச்சுக்களால் ஒழுங்கு செய்யப்பட்டு கல்வி அமைச்சால் ஒரு முகப்படுத்தப்பட்டன. தவிர கல்வி விரிவாக்கல் திட்ட வேலைகளுக்கு, வெகு ஜனத்தொடர்பு சாதனங்கள்' கலந்துரையாடல் குழுக்கள் அனுபவப் பரிமாற்றங்கள், புதினப்பத்திரிகைகள், போன்றவற்றை அபிவிருத்தி, செய்து மக்களுக்கு ஊக்கம் அளிப்பதுடன் கிராமப்பகுதிக்கென விசேட கல்வித்திட்டங்களையும், அறிமுகப்படுத்தியதன் மூலம் கடந்த 10 வருடங்கள் இந் நாட்டின் கல்வித்துறை அதிக முன்னேற்றம் அடைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து, தன்சானிய ஐக்கிய குடியரசை நோக்கின், இது மிக அபிவிருத்தி குன்றிய நாடாகும். இங்கு 1961 வரை காலனித்துவ ஆதிக்க வாத கல்வி முறையே மக்களிடம் திணிக்கப்பட்டிருந்தது. இதனல் 1970ல் பருமட்டாக 80%ற்கு அதிகமான முதியோர் கல்வி அறிவு குறைந்தோராகவே இருந்தனர். தன்சானியாவின் விருத்திக்கு முட்டுக் கட்டையாக உள்ள படிப்பறிவு இன்மையை. முதியோர் கல்வி வகுப்புக்கள் நடாத்துவதன் மூலம் 1975ல் துடைத்த எறிய திட்டமிடப்பட்டது. இதனைவிட அந்நாட்டு ஜனாதிபதி ''ஜூலிஸ், கே. நியரேரே'' என்பவரின் படி கல்வி தொடர்பான ஒரு மாற்றமைப்பு வழியாக ஆரம்பபள்ளி தொடர் அமைப்புக்கள் நாடு பூரா நிறுவப்பட்டு இவை தன்சானிய சமூக கல்வி நிலையங்களை அமைக்கக் கூடியதாக புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன. இதைவிட இங்கு 1973ல் முதற்கட்டம் பூர்த்தியான வானொலி ஆய்வுக் குழு பிரசாரமும் முக்கியமானதாக அமைந்தது.

அடுத்து, விருத்தியடைந்து வரும் நாடுகளில் மற்றுமொரு நாடான இலங்கையின் கல்வி நிலையை நோக்கின், முன்னைய கால கட்டத்தில் ஏகாதிபத்திய வாதிகளிற்கு அடிபணியக்கூடிய, பயிற்சியை மட்டுமே மக்கள் பெறக்கூடய வகையில் பாடசாலைகள் அமைந்தன. ஆனல் பின்பு 1943-ல் திரு. கன்னங்கராவினுல் கொண்டு வரப்பட்ட சீர் திருத்தப்படி இரு பிரதான சிபாரிசுகள் செய்யப்பட்டன. அதாவது

1. பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக் கழகம் வரையிலான இலவசக்கல்வி.

2. ஆங்கிலத்தில் காணப்பட்ட போதனு மொழி தேசிய மொழிக்கு மாற்றப் பட்டமை ஆகியனவாகும். இவ்வாறுன வாய்ப்பான சூழலில் 1940 ஆம் ஆண்டுகளில் ஆரம்பகல்வி வாய்ப்பையும் 1950 ஆண்டுகளில் இடைநிலைக் கல்வி வாய்ப்பையும், 1960 ஆண்டுகளில் உயர் கல்வி வாய்ப்புக்களையும் விரிவடையச் செய்தமையால் 1960 ஆண்டுகளில் உயர்கல்வி மாணவர் தொகையில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டது. இதனுல் ஆண், பெண் இருபாலாரும் நன்மை பெற்றனர். ஏனைய நாடுகளைப் போல் பாடசாலை மாணவர் சேர்வில் அதிக பால் வேறுபாடுகளை எமது நாட்டில் கிராமங்களில் கூடக் காண இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை மக்களின் கல்வி நிலை (1970)

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| பாடசாலை செல்லாதோர் | 11·6 | 23·4 | 17·5 |
| ஆரம்பக் கல்வி | 47·9 | 4·23 | 44·6 |
| நடுநிலைக் கல்வி | 32·4 | 18·4 | 30·6 |
| க. பொ. த. (சா. நி) | 7·1 | 6·1 | 6·6 |
| க. பொ. த. (உ. த) | 1.0 | 0.8 | 0·9 |

1970 ஆம் ஆண்டில் 5.14 வயதெல்லையில் உள்ள பிள்ளைகளில் 72· 7% மாணேர்கள் ஆரம்பக்கல்வி பயின்றனர். இதில் ஆண், பெண் விகிதாசாரம் முறையே 74·6% 70·8% ஆகும் வசதி குறைந்த பகுதிகளில் காணப்பட்ட சமுக பொருளாதார பிரச்சனைகள் காரணமாக இங்கு பெண்களில் சிறிது அதிகமான இடை நிறுத்தம் ஏற்பட்டது. அதாவது 1975 காலத்தில் விஞ்ஞானம் தவிர்ந்த ஏனைய பிரிவுகளில் அதிகளவிற்கு பெண் கல்வியின் பங்களிப்பு கூடியுள்ளதை அவதானிக்கலாம் ஆனல் இன்று புதிய கல்விச் சீர் திருத்தங்கள் கனிஷ்ட இடைநிலைப் பாடசாலையில் பிள்ளைகளை இவ்வாறு பாகுபடுத்தும் முறையை அகற்றி உள்ளது. இன்று 1—9 வரை உள்ள வகுப்புக்களுக்கான பொதுப் பாட ஏற்பாட்டின்படி விஞ்ஞானம். கணிதம் தொழில் முன்னிலைப் பாடம் ஆகியன சகல பிரிவினருக்கும் உரியனவாகும்.

தவிர இலங்கையின் கல்வி முறையில் பரீட்சைகள் முக்கியம் பெறுகின்றன. அத்துடன் அண்மைக் காலங்களில் முக்கியமான அபிவிருத்தி பல்கலைக் கழகத்தில் பெண்களின் தொகை அதிகரித்துள்ளமையாகும்

### பல்கலைக் கழக மாணவர் தொகை

| ஆண்டு | மொத்தம் | பெண்கள் | ஆண்கள் |
|---|---|---|---|
| 1961 | 6279 | 1547 | 4732 |
| 1966 | 14171 | 5286 | 8885 |
| 1972 | 12835 | 5428 | 7407 |
| 1976 | 13153 | 5113 | 8040 |

இலங்கையில் விவசாயக் கல்வியில் பெண்கள் அதிக அக்கறை உள்ளமை குறிப்பிடத்தக்கது. 1973 ஆம் ஆண்டில் குண்டசாலை விவசாயப் பாடசாலை, பண்ணைப் பாடசாலைகளின் மாணவர் தொகையிலும் 30·9% பெண்களும் 56·1% ஆண்களுமாகும்.

இலங்கையில் 1972 ஆம் வருட கல்விச் சீர் திருத்தங்கள் கல்வி வசதிகளை வழங்குவதிலுள்ள சமமற்ற தன்மைகளை குறைப்தன்மூலமும், பாடசாலை முறையின் கட்டுக் கோப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலமும் கல்வியில் சமத்துவத்தை ஏற்படுத்தும் முக்கிய நோக்கத்தைச் சாதிக்க முனைந்தன. பின்பு 1977 ஆம் ஆண்டின் அரசு புதிய கல்விக் கொள்கைகளை புகுத்த வழிகோலியது. 1977 ல் புகுத்தப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க கல்வி மாற்றம் என்னவெனில் தேசிய கல்வித் தராதரம் ஆகிய பரீட்சைகள் ஒழிக்கப்பட்டு மீண்டும் க. பொ. த. உயர் தர சாதாரண தர பரீட்சைகள் புகுத்தப்பட்டமையாகும்.

மேலும் இலங்கையில் கல்விச் சீர்திருத்தத்தோடு தொடர்புடையதாக 1972—1973 ஆம் ஆண்டில் தேசிய பயிற்சியாளர் திட்டம் ஏற்பட்டது இதன் நோக்கம் தொழில் வழங்குனரின் சுயவிருப்பின் பேரிலான ஒத்துழைப்புடன் இடைநிலைப் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையை விட்டு விலகுவோருக்கு தொழிற் பயிற்சி வழங்குவதாகும். தவிர கல்வி முறையினை க. பொ. த. (சா. த) தேசிய பொதுக் கல்வி சான்றிதழ் (தே. பொ. க.) ஆகிய நிலைகளுக்கு அப்பால் செல்லாத 80% பிள்ளைகளுக்காக கல்வி அமைச்சு குறுங்கால ''தொழில் அனுமதி'' பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதில் ஈடுபட்டுள்ளது தவிர புதிய கல்விச் சீர்திருத்தங்கள் விஞ்ஞானம், கணிதம், கேத்திர கணித வரைதல் தொழில் முன்னிலைப் பாடங்கள் ஆகியவற்றை கட்டாய பாடமாக்கி உள்ளது.

தவிர இலங்கையின் கல்வி முறையிலும் இன்று வேறுபாடுள்ளது. அதாவது அன்று வகுப்பறையில் செயற்கைச் சூழலின் மத்தியில் கட்டாயத்தின் பேரில் கட்டுப்பாடான நிலையில் அமர்ந்து கல்வி கற்ற மாணவரின் நிலமை இன்று சீர் திருத்தப் பெற்ற முதனிலைப்பாடசாலையில் இயல்பான ஒரு சூழலின் மத்தியில் சுதந்திரமாக தமது இயல்புக்கேற்ப கேள்வி, பாவனை, மனனம் செய்தல் போன்ற முறைகளின் மூலமன்றி செயல் மூலம் வெளிக்கள ஆய்வின் மூலம்ஒரு மாணவன் மனித உழைப்பால் செய்யும் உற்பத்திகளின் பெறுகதிமளை உணரவும் உழைப்பின் மாண்பை மதிக்கவும் பயிற்றுவிக்கப்படுகின்றுன்.

இவ்வாருக விருத்தியடைந்து வரும் நாடுகளில் குறிப்பாக கல்வித் துறையிலே பல மாற்றங்கள் ஏற்பட்டு வருவதைக்காணலாம். பழைய காலம் முதல் இற்றை வரை கல்வித்துறையில் ஏற்பட்டு வரும் மாற்றத்தால் பரவலாக கல்வி அறிவு வளர்ச்சியடைந்தது மட்டுமன்றி கல்வியின் நோக்கம்கல்விப் பொருளின் தன்மை, போதனு முறை, கல்விச் சாதனம், ஆசிரிய—மாணவ உறவு போன்றவற்றில் ஏற்பட்ட சீர் திருத்தங்கள் கல்வித்துறையின் பல அம்சங்களில் மாற்றத்தைஏற்படுத்தி உள்ளன.

உசாத்துணை நூல்கள்:-

(1) சூரியர், May 1978 Page, 4·

(2) பொருளியல் நோக்கு May 1976.

(3) ,, ,, Scp. 1976.

(4) அறிவொளி Vol II. 1965

விளம்பரம் கொடுத்துதவிய வர்த்தக ஸ்தாபனங்களுக்கு

ஆதரவளித்து உதவுக.

**Please Patronize Our Advertisors**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Asbestos Corrugated Sheets in all Sizes
- Sanitary wares (Imported & Ceylon Ceramics)
- Wire Nails in all Sizes
- Barbed Wire
- Building Materials

FOR ALL YOUR REQUIREMENTS

PLEASE CONTACT

↓

# MASCONS LIMITED

35, Stanley Road,

JAFFNA.

Phone: 24221

## T. NEETHIRAJAH & COMPANY

HARDWARE MERCHANTS AND DISTRIBUTORS

**DIRECT IMPORTERS**

Thanarajah Building
19, Stanley Road,
Jaffna.
Phone: 22508

**Head Office :**

154, Sir Ratnajothy
Saravanamuthu Mawatha,
Colombo — 13,
Phone: 31651.

தொலைக்காட்சியில்
சென்னை நிகழ்ச்சிகளைத்
தெளிவாகக் கண்டு களிக்கவும்
உத்தரவாதத்துடன் ஏரியல்
அமைத்துக்கொள்ளவும்

மங்கள வைபவங்களை
வீடியோவில் படம் பிடித்துக்
கொள்ளவும்
நாட வேண்டியது

## நியூ வீனஸ்

79/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**வீனஸ்**
26/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CTS

SELLIAH YOGESWARAN
[ Managing Director ]

# CROSS TRAVEL SERVICES (PTE) LTD.,

STAGE No. 11 MODEL MARKET No. 5 1st FLOOR
BUS STAND CENTRE ROAD
JFFNA SRI LANKA

Telex No. 21672, 21736, 21857 UNITEL CE [CROSS AIR JAFFNA]

Cable "CROSS AIR" Tel, 22040, 22055.

*With Best Compliments*

*from*

# V. K. RAJARATNAM

95, STANLEY ROAD

JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரத் ஸ்ரூடியோ

82/1 கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்

போன் : 22152

வீடியோ திரைப்படங்கள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளவும்,

சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும்,

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகள் எடுப்பதற்கும்

மற்றும்

படப்பிடிப்புச் சாதனங்கள் பெற்றுக்கொள்ளவும்.

# பாரத் சென்ரர்

178, நவீன சந்தை

யாழ்ப்பாணம்

போன் : 24265


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசீர்வாதம் அச்சகம்
50, கண்டிவீதி யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org